வெளியீடு 22-2-99

Issued 22-2-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 2, 1998 – தொகுதி 42 – எண் 2

Thursday the 2nd April 1998 – Volume 42 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

D.
Y211, 31 N98.
N98. 42. 2
218460.

## 2-4-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள் விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 137-182 |
| 2. **சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) குண்டுப்பட்டி (கொடைக்கானலுக்கு அருகே) கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் காவல் துறையினரால் தாக்கப்பட்டது .. | 182-192 |
| (ஆ) ஒட்டப்பிடாரம் மெக்கவாய் பள்ளியின் நிர்வாகி பள்ளி மாணவிகளிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டது .. | 193-196 |
| (இ) விருதுநகரில் காவல் துறையினரின் குடும்பத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டது | 196-205 |
| 3. **அறிவிப்பு—** | |
| மேதகு ஆளுநர் அவர்கள் *18-3-1998* அன்று அவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பெறப்பட்டது குறித்த ஆளுநரின் செய்தி .. | 205 |
| 4. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, *1998* .. | 205-206 |

| | பக்கங்கள் |
|---|---|
| வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம் — தொடர்ச்சி .. | 206-263 |
| திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார் .. | 206-211 |
| *திரு. டி. மணி .. | 211-220 |
| *திரு. எம். ரங்கநாதன் .. | 221-228 |
| *திரு. சொ. கருப்பசாமி .. | 228-239 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற இரான் .. | 239-251 |
| *திரு. கே.கே. வீரப்பன் .. | 251-257 |
| திரு. துரை. சந்திரசேகரன் .. | 257-262 |
| திரு. சி. சண்முகம் .. | 262-263 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 264-265 |


21840

D
Y2:3,9'N98
N98.47.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 19, ஈஸ்வர-திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 ஏப்ரல் 2, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

அரிய செயல்களை, அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமை உடையவர்கள் பெருமைக்குரியவர் ஆவர்.

### 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 121, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**121—**

### "டாசிட்" தொழிற்பேட்டை

*5628—**திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் அமைந்து வரும் "டாசிட்" தொழிற்பேட்டைக்கு நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளதா?

[1998 ஏப்ரல் 2

(ஆ) ஆம் எனில், கையகப்படுத்தப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுவிட்டதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறையில் அமையவிருக்கும் டாசிட் தொழில் வளாகத்திற்கு நிலம் கையகப்படுத்தும் பணி, முடியுந்தறுவாயில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் சட்டம் மூலமாக 555.11 ஏக்கரும், நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலமாக 1953 ஏக்கரும் வாங்கப்பட்டது.

(ஆ) உரிமையாளர்களுக்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தும் சட்டம் மூலமாக நிலம் எடுத்த நேர்வுகளில் நட்டஈட்டுத் தொகை முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 'டாசிட்' மையத்திற்காக நிலத்தைக் கையகப்படுத்தும்போது, நிலத்தை நேரடியாகப் பேசிக் கிரயம் செய்தவர்கள், விலை போதாது என்று நீதிமன்றத்திற்குச் சென்றவர்கள், குடும்பத் தகராறு காரணங்களுக்காக, இந்தக் காலவரையறையைத் தாண்டிவிட்டவர்கள் என்ற மூன்று வகையினர் இருக்கிறார்கள். அதிலே, நேரடியாகப் பேசிக் கிரயம் செய்த தொகையை, நம்முடைய அரசு விரைந்து வழங்கியிருக்கிறது. நீதிமன்றத்திற்குச் சென்றவர்களுக்கும், குடும்பத் தகராறு காரணங்களுக்காக, அந்தக் காலவரையறையைத் தாண்டிவிட்டவர்களுக்கும் ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, ஒரு சுமுகமான தீர்வு காணக்கூடிய வகையிலே, அவர்களுக்கும் நேரடிக் கிரயத்தில் வழங்கப்பட்ட தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரங்களைச் சரிபார்த்து, சட்ட வல்லுநர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, வழங்க வேண்டும் என்பதற்காக, இத்தொகை நிலுவையிலே உள்ளது. அதுவும் மூன்று மாத காலத்திற்குள் வழங்கப்பட்டுவிடும் என்ற குறிப்பு என்னிடத்திலே இருக்கிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே 'டாசிட்' மையத்திற்காக நிலம் கொடுத்த



1998 ஏப்ரல் 2]

விவசாயிகளுக்கு ஏற்கெனவே அவர்களுடைய நிலத்திற்குள்ளே இருந்த மின் இணைப்பு, இப்போது அவர்களுக்குப் பயனற்றுப் போய்விட்டது. இந்த 'டாசிட்' எல்லைக்கு வெளியே சொந்தமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு, மின் இணைப்பு வழங்குவதற்காக, ஏற்கெனவே இருந்த மின் இணைப்பைப் புதுப்பிக்க, முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு மாத்திரம் அல்ல; தண்ணீர், தொலைத் தொடர்பு, சாலை வசதி, கழிவு நீர், தொழிலக நீரியல் கழிவுகள் சுத்திகரிப்பு போன்ற எல்லா வசதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிலே மின் இணைப்பும் அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருந்துறையில் அமையவிருக்கும் 'டாசிட்' தொழிற்பேட்டைக்கு நிலத்தைக் கையகப்படுத்தும்போது, கடந்த ஆட்சியில், 'மார்க்கெட்' விலையைவிடக் கூடுதலாக விலையை நிர்ணயம் செய்தார்கள் என்ற புகார் இருந்தது. அதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய செய்தி எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *122*, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**122—**

**நிலச் சொந்தக்காரர்களுக்குக் கிரயப் பணம் அளித்தல்.**

*9510—**திரு பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 2

(அ) 1986-ல் வேலூர் மாவட்டத்தில் சுந்தரம்பள்ளியில் காவல் துறையினருக்கு வீடுகள் கட்ட நிலம் அளித்த நிலச் சொந்தக்காரர்களுக்குக் கிரயப் பணம் விரைவில் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காவல் துறையினருக்கு வீடுகள் கட்டுவதற்காக, வேலூர் மாவட்டம் சுந்தரம்பள்ளி கிராமத்தில் 47.08 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக இழப்பீட்டுத் தொகை நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-ஆம் ஆண்டு, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, மறைந்த எம்.ஜி.ஆர் அவர்களுடைய காலத்திலே, நக்ஸலைட்டுகள் அதிகமாக இருக்கிற பகுதி என்கிற காரணத்தினாலே, அங்கே ஆயிரம் காவலர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக நிலம் பெறப்பட்டது. ஆனால், இன்றுவரை நில உரிமையாளர்களுக்கு எந்தவிதமான பணமும் போய்ச் சேரவில்லை. நிலத்தையும் அவர்களிடத்திலே ஒப்படைக்கவில்லை. எனவே, பத்தாண்டு காலமாக எந்தவிதமான வருமானமும் இல்லாத அந்த விவசாயிகளுக்கு உடனடியாக அரசு அதற்கான பணத்தை ஒதுக்கிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொத்த நிலம் 47.08 ஏக்கர். இதைத்தான் அப்போது ஆர்ஜிதம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மொத்த 47 ஏக்கர் நிலத்தினுடைய நில உரிமையாளர்களுடைய எண்ணிக்கை 32. அவர்களிலே 6 பேர், திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஈட்டுத் தொகையை ஏற்கெனவே பெற்றுக் கொண்டுவிட்டார்கள். 26 பேர் சம்பந்தப்பட்ட வழக்குகள் குறித்து உயர்நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவை எல்லாம் முடிவுற்றபிறகுதான் இந்தப் பிரச்சினையும் ஒரு முடிவுக்கு வரும்.



1998 ஏப்ரல் 2]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன்.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், சுந்தரம்பள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 10 ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் நீண்ட நாட்களாகக் காவல் நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 1989-ஆம் ஆண்டும், சென்ற ஆண்டும் இந்த மாமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சுந்தரம்பள்ளிக்குக் காவல் நிலையம் வேண்டுமென்று நான் கூறியிருக்கிறேன். 1986-ஆம் ஆண்டு காவல் நிலையக் காவலர்களுக்காகத் தேர்வு செய்யப்பட்ட அந்த இடத்தில், இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் நிலையம் அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது காவல் துறையிலே உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற பிரச்சினை குறித்த கேள்வியாகும். இதிலே காவல் நிலையம் வரவில்லை. முடிந்தால் வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தவாசி, தெள்ளார் ஆகிய இரண்டு ஊர்களிலுள்ள காவலர் குடியிருப்புகள் நீண்ட நாட்களுக்கு முன்னதாகக் கட்டப்பட்டு தற்போது அவை பழுதடைந்த நிலையில் உள்ளன. சென்ற ஆண்டே இதுகுறித்து நான் கேட்டிருக்கிறேன். எனவே அங்கே காவலர் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழுதுபட்டுவிட்ட காவலர் குடியிருப்புகளைப் பழுதுபார்ப்பதற்கும், புதிதாகக் காவலர் குடியிருப்புகளை உருவாக்குவதற்கும் அரசிடம் திட்டங்கள் உள்ளன. அவைகள் உரிய நேரத்தில் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் நிதியாண்டில் எவ்வளவு இடங்கள் காவலர்

[1998 ஏப்ரல் 2

குடியிருப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்டன? எத்தனை காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன? குறிப்பாக, சென்னையிலே எத்தனை காவலர் குடியிருப்புகள் இதுவரையிலே கட்டப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி தேவை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவலர் குடியிருப்பு இப்போதும் கட்டப்படுகிறது. இதற்கு முன்னாலும் கட்டப்பட்டுள்ளது. அந்தக் காவலர் குடியிருப்புகளுக்கு எல்லாம் அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் அங்கேயுள்ள காவலர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு பஸ் வசதி, போன்ற வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இதையெல்லாம் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய வசதிகள் இல்லாத இடங்களில் மிகத் தீவிரமாகப் பணிகளை மேற்கொண்டு, வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று காவல் துறைக்கு ஆணையிடப்பட்டுள்ளது. இப்போது அந்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று காவலர்களுக்கு வீடுகள் கட்டுவது மற்றும் அரசுத் துறைகளுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்கிற நேரத்தில், இருக்கின்ற விலையைவிடக் குறைந்த விலைக்குத்தான் நிலங்களை வாங்க வேண்டுமென்று விதியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே நிலங்களினுடைய விலை மிக அதிகமாக இருக்கிறது. எனவே அப்படி ஆதிதிராவிடர்களுக்காக வாங்கப்படுகிற நிலங்கள் அல்லது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக வாங்கப்படுகிற நிலங்களினுடைய விலை இன்றைக்கு மார்க்கெட் நிலவரத்திலே உயர்வாக இருக்கிற காரணத்தால் அந்தப் பணிகளையெல்லாம் செய்வதற்கு, அந்த நிலங்களை எடுப்பதற்கு மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள்,



1998 ஏப்ரல் 2]

நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது இன்றைக்கு இருக்கிற நடப்பு விலையில் மார்க்கெட் நிலவரத்திற்கு தகுந்த மாதிரி விலைகளைக் கொடுத்து அந்த நிலங்களைக் கையகப்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு சமூகப் பிரச்னையோடு சிந்திக்க வேண்டிய விஷயமாகும். அரசு சில பொதுநலக் காரியங்களுக்காக இப்படிப்பட்ட நிலங்களைக் கையகப்படுத்த முன்வரும்போது நிலத்திற்குரியவர்களும் பொதுநல நோக்கத்தோடு நியாயமான விலைக்கு அதைத்தர முன்வர வேண்டும். அப்படி வராத சூழ்நிலையிலேதான் பல நல்ல காரியங்கள், பொதுநலக் காரியங்கள் தாமதப்படுகின்றன. ஒரு பாலம் கட்டுவதாக இருந்தாலும், அல்லது இங்கே குறிப்பிட்டதுபோல, குடியிருப்பு போன்ற வசதிமிக்க சில காரியங்களை சாதாரண மக்களுக்கு, பணியாளர்களுக்கு, அரசுப் பணியாளர்களுக்கு நிறைவேற்றுவதாக இருந்தாலும், அந்த நேரத்திலெல்லாம் பொதுநல நோக்கிற்கு அப்பாற்பட்டு அதிக விலை பெற வேண்டும், அதற்கு இதுதான் நேரம் என்ற முறையில் சுயநல எண்ணத்தோடு பலபேர் இன்றைக்குக் குறுக்கே வந்து நிற்கிறார்கள். என்னதான் சட்ட விதிகளை அதற்காக நாம் இயற்றினாலும்கூட, நீதிமன்றங்களுக்குச் சென்று தடையாணை பெறுகிறார்கள். தடையாணை பெற்று, குறிப்பிட்ட தொகையைத் தர வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டதற்குப் பிறகு, அரசு மேல்முறையீடு செய்து, அந்த மேல்முறையீட்டிலே ஒரு தீர்ப்பு வருவதற்கு 10 ஆண்டு காலம் ஆனதற்குப் பிறகு வட்டியையும் சேர்த்து, 5 லட்சம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்படுகின்ற இடத்திற்கு 50 லட்சம் ரூபாய் தரவேண்டிய சூழ்நிலைகூட அரசுக்கு ஏற்படுகிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்த்து சட்டம் இயற்றினாலும்கூட அந்தச் சட்டமும் இடையிலே இடைக்காலத் தடைகளுக்கு உள்ளாகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவற்றுக்கு இடையிலேதான், இந்தச் சங்கடங்களுக்கு இடையிலேதான் பொதுநல நோக்கத்தோடு சில காரியங்களை அரசு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு நான் இந்தக் கேள்வி மூலமாகத் தெரியப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை அலுவலர்களுக்கும், பிற அரசுப் பணியாளர்களுக்கும் குடியிருப்புக்கான கட்டடங்கள் கட்ட நிலத்தை கருணை உள்ளத்தோடு இலவசமாகத் தருபவர்களுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை தர அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவசமாக ஒரு இடத்தைத் தருவதுதான் அரசு வேலையிலே சேருவதற்கான தகுதி என்று ஆகிவிடக்கூடாது. அப்படி இலவசமாக நிலம் தர முன்வருகின்றவர்களின் பெயர்களை தக்க முறையிலே விளம்பரப்படுத்தி மக்களிடத்திலே அவர்களுக்கு ஒரு புகழை உருவாக்க அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *123, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**123—**

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குதல்

*11610—**திரு. கு. மனோகரன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி நகரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரிலே ஏற்கெனவே ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு நடந்து வந்தது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக அப்போதைய ஆட்சியாளர்கள் திடீரென்று இரவோடு இரவாக உத்தரவைப் போட்டு தருமபுரியிலே செயல்பட்டு வந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை கிருஷ்ணகிரிக்கு மாற்றிவிட்டார்கள். கிருஷ்ணகிரிக்கு மாற்றப்பட்டுவிட்ட அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் தருமபுரிக்கு வழங்கி, தருமபுரி மாவட்ட மக்களின் கோரிக்கையாம் தர்மத்தை நிலைநாட்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையம் ஏற்படுத்துவது மத்திய அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலே, ஒரு இடத்தில் ஏற்படுத்தப்பட்டதற்குப் பிறகு, அங்கே தகுந்த வசதிகள் இல்லாமல் இருக்குமானால் இன்னோர் இடத்திற்கு மாற்றுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அந்த அடிப்படையில், மத்திய அரசும் ஒப்புக்கொண்டு ஓர் இடத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்தக் கல்வி நிலையத்தை, திரும்ப மாற்றுவது என்பது எளிதில் இயலாத காரியம். தருமபுரி, கிருஷ்ணகிரி மாறுபாடுகளை இந்த டிஐஇடி மூலமாகத் தீர்க்கமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழித்துறையிலே சிறுபான்மை மொழி பேசுகின்ற, மலையாள மொழி பேசுகின்ற மக்களுக்காக ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நீண்ட வருடங்களாக, 20 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வந்தது. கடந்த 3, 4 வருடங்களுக்கு முன்னால் அதை அங்கிருந்து எடுத்துவிட்டார்கள். அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இன்னோர் இடத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தால், சிறுபான்மை மொழி பேசுகின்றவர்களுக்கு உரிய இடம் கிடைக்காமல், உரிய இடம் ஒதுக்கப்படாமல் உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் சிறுபான்மை மொழி பேசுகின்றவர்களுக்காக, மலையாள மொழி பேசுகின்றவர்களுக்காக மீண்டும் அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குத் தகுந்த விடை வழங்க வேண்டுமானால் தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 9-45*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மாவட்டத்திற்கு ஒன்று

இருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதேநேரத்திலே மாவட்டத்திற்கு, தனியார் துறையிலே சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. சிறுபான்மையினருக்கு என்று பெயரளவில் நிறுவனத்தை வைத்துக் கொண்டு, உண்மையிலேயே சிறுபான்மையினருக்கு அல்லாமல் சட்டத்திற்குப் புறம்பாகவும், அதே நேரத்தில், இலட்சக்கணக்கான ரூபாயை வசூலிக்கக்கூடிய அவல நிலையும் இருந்துகொண்டிருக்கின்றது. இதைப் போக்குவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதேநேரத்திலே கடந்த காலத்திலே ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுதி சான்றிதழ்களைப் பெற முடியவில்லை. இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற்றும் தேர்வு எழுத முடியாத நிலையும் இருக்கின்றது. ஓர் ஆண்டு பயிற்சி முடித்துவிட்டு இரண்டாவது ஆண்டிற்குப் போக முடியாத இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் இருக்கின்றன. பயிற்சி பெற்றவர்கள் சான்றிதழைப் பெற முடியாத குறைபாடுகளைப் பற்றியெல்லாம் கேட்டால், வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே, இந்த வழக்குமன்றக் குறைபாடுகளையெல்லாம் போக்கி, அந்த மாணவர்கள் வாழ வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஒரு பொது விவாதத்திற்குரிய கேள்வியை இங்கே எழுப்பியிருக்கின்றார். உண்மையில், நம்முடைய அரசு வந்த பிறகு சிறுபான்மையினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் யாருக்கும் வழங்கப்படவில்லை. நீண்டகாலமாக, 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் நடைபெற்ற கல்வி நிலையங்களையொட்டி, ஒன்றிரண்டு இடங்களிலேதான் சிறுபான்மையினர் பிரிவு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆனால் சிறுபான்மையினர் பள்ளிகளாக நம்முடைய கண்ணுக்குத் தெரிகிற பல பள்ளிகள், தனியார் உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 42, தமிழ்நாட்டில் நீண்டகாலமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1990-91 ஆவது ஆண்டிலே நாம் ஆட்சியிலே இருந்தபோதுகூட யாருக்கும் இப்படிப்பட்ட பள்ளியை வழங்கவில்லை. இருந்தாலும், தேர்ச்சிபெறுகின்ற, பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு வேலை கிடைக்கிற ஒரு வாய்ப்பு இரண்டு ஆண்டு காலத்தில் அமைய வேண்டும் என்று சொன்னால் ஏராளமானவர்களைப் பயிற்சியிலே



ஈடுபடுத்தக்கூடாது என்பது தி.மு.க. அரசினுடைய கொள்கையாக இருந்தது. ஆகவே, நாம் வழங்கவில்லை. பின்னர் வந்த அரசு வழங்கியது. அதனுடைய விளைவுகளை நாம் மிக நன்றாக அறிந்திருக்கிறோம். இந்த விளைவைத்தான் அடுத்த கேள்வியாக திரு. மணி அவர்கள் எழுப்பினார்கள். அவர்கள் இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற்றார்கள் என்பதை நீதிமன்றம் ஒப்புக் கொள்ளவில்லை. அது பயிற்சியல்ல, பள்ளிக்கூடம் அல்ல, தேர்வு எழுதவே உரிமை அற்றவர்கள், அப்படியே தேர்வு எழுதினாலும் அவர்களுக்குத் தேர்வு முடிவை அரசு அறிவிக்கக்கூடாது என்று தடை செய்து, ஏற்கெனவே நடைபெற்று வந்த அந்த முறையை அடியோடு ரத்துச் செய்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது. அதை மீறி அன்றைக்கு இருந்த அரசு, மேல்நிலைப் பள்ளிகளிலே அவர்களுக்கு ஒரு மறு பயிற்சி வழங்கி அதன் மூலமாகப் பயிற்சி அளிக்கலாம் என்று கருதி முடிவு மேற்கொண்டபோது, மேல்நிலைப் பள்ளிகளிலேயும் தகுந்த பயிற்சி கிடையாது, ஆகவே, பயிற்சி வழங்குவதே தவறு என்று மறுபடியும் நீதிமன்றம் தீர்ப்புச் சொன்னது. இதற்கெல்லாம் ஒரு விடை காணவேண்டும் என்ற ஆர்வத்தில் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றபோது, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இந்தத் தீர்ப்புகளுக்கெல்லாம் விடை காண எதிர்க்கட்சித் தலைவர்கள்தான் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: வினா எண் *124*, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**124—**

**அரசுப் பொறியியல் கல்லூரி அமைத்தல்**

**11354*—**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் அரசுப் பொறியியற் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1998 ஏப்ரல் 2

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் அரசு பொறியியற் கல்லூரி அமைக்க, கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. அங்கு மட்டும் இல்லை. எங்கும் இல்லை.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதே மாமன்றத்தில் விராலிமலையில் பெண்களுக்கு என்று உயர்நிலைப்பள்ளியைத் தனியாக பிரித்து வழங்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விடுத்தேன். வணக்கத்திற்குரிய முதல்வர் அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலித்து பெண்கள் உயர்நிலைப்பள்ளி வழங்கியமைக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேளுங்கள் தரப்படும் என்ற ஏசுபிரான் வாசகத்தை மெய்ப்பிக்கின்றவர் வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தை உருவாக்கித் தந்து 24 ஆண்டுகள் ஆகியும் எங்களுடைய மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ கிடையாது. கல்வி, பொருளாதார, சமூக நிலைகளிலே மிகவும் பின்தங்கிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரியை வழங்கி, அதையும் எனது குளத்தூர் தொகுதி, விராலிமலையிலே ஏற்படுத்தி, கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கவனிப்பாரற்றுக் கிடக்கும் என்னுடைய தொகுதியிலே கல்வி வெளிச்சத்தை உண்டாக்கிட அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைக் கனிவோடு கேட்டுப் பணிவோடு அமருகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது ஓர் அரசுப் பாலிடெக்னிக்கும், மூன்று சுயநிதிப் பாலிடெக்னிக்குகளும், மற்றும் ஒரு சுயநிதிப் பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. சுயநிதிப் பொறியியல் கல்லூரியையும், சுயநிதிப் பாலிடெக்னிக்குகளையும் நடத்த முன்வருவோர் முறையான வசதிகளோடு கேட்பார்களேயானால் அவை வழங்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கனிவான பரிசீலனையை எதிர்பார்ப்பதைவிட— இப்படிப்பட்ட கல்லூரிகளை அமைப்பதற்காக இடம் தேடிக். கொண்டிருக்கிறவர்கள் பல பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய கனிவான ஆதரவைப் பெற்று—கல்லூரிகளை அமைக்க முயற்சி எடுத்துக் கொண்டால் எளிதிலே அந்தக் குறிக்கோள் வெற்றிபெறும்.



1998 ஏப்ரல் 2]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. த. நடராஜன்.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளை எங்கும் தொடங்க இயலாது என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், மிகவும் பின்தங்கிய Most Backward Area ஆக அமைந்திருக்கின்ற ஒன்றியங்களிலாவது அரசு பொறியியல் கல்லூரிகளைத் தொடங்க முன்வருமா? அதிலும், குறிப்பாக என்னுடைய செஞ்சி பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கே பொறியியல் கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை இடம் கொடுத்தாலன்றி கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ, நினைத்தபடி அரசு தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. செஞ்சி போன்ற, பிற்படுத்தப்பட்ட வட்டாரங்கள் என்று கருதப்படுகின்ற இடங்களில் தொடக்கக் கல்வியை மிகப் பரவலாக ஏற்படுத்தித்தர, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவைகளை அதிகமாக ஏற்படுத்துவதற்குத் தொடர்ந்து அரசு முயற்சி எடுத்து வருகிறது. பொருளாதார நிலை இடம் தருமானால், நிதிநிலை இடம் கொடுத்தால், வருங்காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுமானால், இவையெல்லாம் கருத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையிலே பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு 'ஒற்றைச் சாளர முறை'—Single Window System நடப்பாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டு, தொழில் நுட்பக் பயிலகங்களிலும் அந்த முறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 200-க்கும் மேற்பட்ட தொழில் நுட்பப் பயிலகங்களிலே இதுபோன்ற முறை அமல்படுத்தப்படுமானால் எங்களைப் போன்ற கிராமப் பகுதிகளில் இருக்கின்றவர்களுக்கு அந்த உத்தரவு வருவதற்கு முன்னாலேயே மாணவர்கள் சேர்க்கை முடிந்து விடும் என்று கருதுகிறேன். எனவே, அந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்து, தொழில் நுட்பப் பயிலகங்களில் அவர்களே நியமித்துக் கொள்ள அனுமதிக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒற்றைச் சாளர முறை என்பதைப் பொறியியல் கல்லூரிகளுக்கு மேற்கொண்டது போன்று பாலிடெக்னிக்குகளிலும் மேற்கொண்டு மாணவர்களைச் சேர்க்கும் முறை இடையூறு ஏற்படுத்தும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கேள்வியின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். உண்மையில், பாலிடெக்னிக்குகளிலும், அரசு அனுமதித்துத்தான் மாணவர்களைச் சேர்க்க வேண்டும். அனுமதி இல்லாமல் சேர்ப்பதற்கு பாலிடெக்னிக்குகளுக்கு உரிமை கிடையாது. கடந்த ஆண்டுகூட எப்படிப்பட்ட மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தது. அப்படி விதிமுறைப்படி மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்களா என்று மேற்பார்வை செய்யப்பட்டது. அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த முறையும் எந்தப் பாலிடெக்னிக்குகளுக்கு மாணவர்கள் விண்ணப்பித்தாலும்கூட அந்த விண்ணப்பத்தின் ஒரு படிவம் அரசுக்குக் கிடைத்து, அந்த வட்டத்திலே உள்ள மாணவர்கள் இடம் பெறும் வகையில் ரீஜினாகப் பிரிக்கப்பட்டு, மாணவர்களுக்கு இடம் கிடைக்காமல் போகின்ற நிலை ஏற்படாமல், அவர்கள் கேட்கின்ற பாலிடெக்னிக்குகளுக்கு முன்னுரிமை வழங்கி, அவர்கள் பெற்றிருக்கின்ற தகுதியின் அடிப்படையில், பொறியியல் கல்லூரியில் ஒற்றைச் சாளர முறை மேற்கொள்ளப்பட்டது போன்ற, ஏறத்தாழ அதையொத்த நிலை மேற்கொள்ளப்படும். அந்த வகையில், பாலிடெக்னிக்குகளில் அதற்கு முன்னால் மாணவர்களைச் சேர்ப்பதற்கு அவர்களுக்கு உரிமையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும்—பாலிடெக்னிக்கினுடைய தாளாளர் என்ற காரணத்தினால்—அவர்கள் மூலம்—அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டம். மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே, அரசு பொறியியல் கல்லூரியோ, தனியார் பொறியியல் கல்லூரியோ இல்லை. எனவே, அதைக் கருத்திற்கொண்டு, அரசு எதிர்காலத்தில் அங்கே பொறியியல் கல்லூரியைத் தொடங்க ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்காக ஒரு விடை அப்படி



இரண்டு கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால் எந்த இடமும் முன்னேறிவிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண். 125, திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**125—**

## ஆரம்பச் சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக்குதல்

***2140. திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியிலுள்ள மேல்நிலை ஆரம்பச் சுகாதார நிலையம் வட்ட மருத்துவமனையாக மாற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியிலுள்ள மேல்நிலை ஆரம்பச் சுகாதார நிலையத்தை 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

முற்பகல் 9-55

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களுடைய சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வட்ட மருத்துவமனைக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில், கூடுதல் படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய கட்டடமும், எக்ஸ்ரே பிளாக்குகளும் இந்த ஆண்டே அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பியதைப்போல, இந்த ஆண்டே 3 உதவி மருத்துவர்கள், 5 செவிலியர்கள், 1 பெண் உதவி செவிலியர், 2 ஆண் உதவி செவிலியர்கள், 1 இளநிலை உதவியாளர், 1 உதவியாளர், 1 பதிவறை எழுத்தர், 1 துப்புரவுப் பணியாளர், 1 மருத்துவப் பணியாளர், 1 சமையலர், 1

ஓட்டுநர் மற்றும் 1 காவலர் உட்பட இவ்வளவு பேரையும் நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் இந்த ஆண்டே கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு 30,000 ஜனத்தொகை தேவை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப்போல மேல்நிலை ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக ஆக்குவதற்கு என்னென்ன விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்களை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 385 ஆரம்பச் சுகாதார நிலையங்கள்தான் இருந்தன. தலைமையிட மருத்துவமனைகள் இப்போது மேம்படுத்தப்பட்டு, 24 மணிநேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனைகளாக அவற்றை மாற்றி வருகிறோம். இந்த ஆண்டோடு 250 மருத்துவமனைகள் அந்த வகையில் மாற்றப்பட்டு இருக்கின்றன. அடுத்த ஆண்டு, அனைத்துத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 24 மணி நேரமும் சேவை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பேரையூரிலே உள்ள மருத்துவமனை, தாலுக்கா மருத்துவமனையாக உயர்த்தப்பட்டும் போதிய படுக்கை வசதிகளோ, மருத்துவக் கருவிகளோ இல்லாமல் இருப்பது குறித்து அரசு அறியுமா? இந்த ஆண்டே அந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எவையெவை புதிய மருத்துவமனைகளாக அறிவிக்கப்பட்டனவோ, அந்த மருத்துவமனைகளுக்குத் தேவையான எல்லா வசதிகளும் இந்த ஆண்டு நிச்சயமாகச் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30,000 மக்கள் தொகை கொண்டுள்ள பகுதிகளுக்கு ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற கேள்வி அநேகமாக 2 ஆண்டுகளாக இந்தச் சபையில் சுற்றிச்சுற்றி வருகிறது. நம்முடைய அமைச்சர் அவர்களும் சளைக்காமல் இதற்குப் பதில் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே கேட்கிற உறுப்பினர்கள் 30,000 மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து விடுவார்களோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே இதற்கான முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். அடுத்து என்னுடைய சொந்த தொகுதியில் உள்ள கூத்தாநல்லூர், மன்னை மருத்துவமனைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட வேண்டுமென்று கேட்டிருந்தேன். அவர்களும் வருவதாக ஒப்புதல் அளித்தார்கள். இந்தத் தடவையாவது வந்து அந்த மருத்துவமனையைப் பார்வையிட்டு, அந்த மருத்துவமனைக்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முறை திருவாரூருக்கு வந்திருந்தபோது அங்கே சென்று பார்வையிடலாம் என்று முயற்சி செய்தேன். நேரம் இல்லை. நிச்சயமாக அடுத்த முறை அந்தப் பகுதிக்கு வந்து அந்த மருத்துவமனையைப் பார்வையிடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட்ட மருத்துவமனை, தாலுக்கா மருத்துவமனை ஆகியவற்றில் இருக்கின்ற அவசர ஊர்திகளுக்கு அளிக்கப்படுகின்ற, ஒதுக்கப்படுகின்ற எரி பொருள்கள் ஒரு மாதம் முடிவதற்குள், விரைவாகப் பயன்படுத்தப்படுகிறது. அவசர நேரங்களில் ஊர்திகளைப் பயன்படுத்த முடிவதில்லை. அப்படிப்பட்ட காலகட்டத்தில், ஊர்திகளைப் பயன்படுத்துவோர், அதற்கான கட்டணத்தையோ அல்லது தேவையான எரிபொருட்களையோ கொடுத்து பயன்படுத்தலாமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டார மருத்துவமனைக்கும்

ஒதுக்கப்பட்ட அந்த ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கு அரசாங்கம் ஒதுக்குகின்ற எரிபொருள் போதாது என்ற காரணத்தால், அவசர நிமித்தமாக நோயாளிகள் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினால்—தனியார் வாகனங்களிலே ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிட வேண்டி இருக்கிறது. அரசாங்கம் அதைப் பரிசீலித்து—ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு ரூபாய் 50 காசு கட்டணம் செலுத்தினால், அந்த ஆம்புலன்ஸ் வண்டியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. எல்லா மருத்துவமனைகளுக்கும் அந்த ஆணை பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 126, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**126—**

**ஒரத்தநாடு அரசு மருத்துவமனைக்கு வசதிகள்**

***9521—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் தேவையான மருத்துவர் மற்றும் வசதிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் மருத்துவர் மற்றும் மற்ற வசதிகள் தேவையான அளவு உள்ளன.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் 5 மருத்துவர்கள் இருக்க வேண்டும். 3 பேர் இருக்கிறார்கள். 2 பெண் மருத்துவர்கள்





விடுமுறையில் இருக்கிறார்கள். ஒரு மருத்துவர் உத்தரவு பெற்று நீண்டகாலமாக விடுப்பில் இருக்கிறார். அங்கே ஸ்கேன் இருக்கிறது; மருந்து இருக்கிறது; படுக்கை வசதி இருக்கிறது; அறுவை சிகிச்சை அரங்கம் இருக்கிறது. ஆனால், மருத்துவர்கள் இல்லை. எனவே, உடனடியாக அரசு, மருத்துவர்களை நியமிப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால், 2 பெண் மருத்துவர்கள் வரவில்லை என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு எங்கும் பெண் மருத்துவர்கள் அடிக்கடி பிரசவத்தின் காரணமாக விடுப்பில் போய்விடுகின்ற காரணத்தினாலே இந்தக் குறைபாடு இருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து, அவர்களுடைய பிரசவ காலங்களிலே கூடுதலாகப் பெண் மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவர்கள் அங்கு இல்லாமல் இருப்பதற்குக் காரணமே, அவர்கள் தங்குவதற்கு கட்டடங்கள் இல்லை; ஒரத்தநாடு மருத்துவமனையிலே தங்குவதற்கு கட்டடங்கள் இல்லாத காரணத்தினாலே, பல ஊர்களிலேயிருந்து வந்துபோகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பெண் மருத்துவர்கள் தங்க, கட்டடங்கள் இருந்தால், அவர்கள் அங்கே தங்கி மருத்துவ உதவி செய்ய ஏதுவாக இருக்கும்; பிரசவம் பார்த்துக் கொள்வதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, ஒரத்தநாடு மருத்துவமனைக்குக் கட்டடங்கள் கட்டித் தர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே, இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அத்தனைக்கும் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று முடிவு எடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தாராளமாக 40 கோடி ரூபாய் தந்து, இப்போதுதான் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்தப் பணிகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு, தாலுக்கா மருத்துவமனைகளில் அப்படிப்பட்ட குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதிநிலை அனுமதிக்குமானால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

[1998 ஏப்ரல் 2

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் அந்த அரசு மருத்துவமனையில் சித்தா பிரிவைத் தொடங்கியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, விரைவில் ஒரு எக்ஸ்-ரே பிரிவு தொடங்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது தாய்மார்கள் பிரசவ காலத்திலே உடலைப் பரிசோதித்துக் கொள்ள ஸ்கேன் வசதி எல்லா வட்டார மருத்துவமனைகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே, குழந்தைகள், எடை குறைவாகப் பிறந்தால் அவர்களைக் காப்பாற்றுவதற்காக பேபி வார்மர் போன்ற கருவிகளும் தமிழகமெங்கும் வழங்கப்பட்டு இருக்கின்றன. அடுத்த கட்டமாக எக்ஸ்-ரே வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யூரிலுள்ள மருத்துவமனை, வட்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டுள்ளது. அங்கே தேவையான மருத்துவர்கள் இல்லை. ஆகவே, தேவையான மருத்துவர்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பணியில் அமர்த்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யூரிலுள்ள மருத்துவனை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டவுடன், அங்கே போதிய சுற்றுப்புறச் சூழ்நிலையும் வசதியும் இல்லாத காரணத்தால் யாரை அந்த மருத்துவமனைக்கு நியமித்தாலும், 2 மாத காலத்திலே அவர்கள் விடுமுறையில் சென்று விடுகிறார்கள். நிரந்தரமாக அங்கே பணியாற்றுவதற்கு மருத்துவர்கள் யாரும் முன்வரவில்லை. இருந்தாலும் அரசாங்கம் அந்தப் பகுதியிலே உள்ளவர்களை அந்த மருத்துவமனைக்கு நியமித்து ஆணை பிறப்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொண்டு இருக்கிறது.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 127, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 2]

**127—**

**திருமறைக்காடு எனப் பெயர் சூட்டுதல்**

***4633—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு 'வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"வேதாரண்யம்" என்னும் வடமொழிப் பெயரை மாற்றி, "திருமறைக்காடு" எனத் தமிழ்ப் பெயரைச் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'வேதாரண்யம்' என்னும் பெயரைத் 'திருமறைக்காடு' என மாற்றம் செய்வது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடமொழிப் பெயர்களிலே இருக்கின்ற ஊர்களின் பெயர்களெல்லாம் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இந்தச் சபையிலே அறிவித்து இருக்கின்றார்கள். அப்படி மாற்றம் செய்யும்போது, ஏற்கெனவே எனது தொகுதியான வேதாரண்யம் என்பது திருமறைக்காடு என்ற தூய தமிழ்ப் பெயரிலே அழைக்கப்பட்டு வந்தது. மீண்டும் அதற்கு அதே திருமறைக்காடு என்ற பெயரைச் சூட்டிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஊரினுடைய பல்வேறு அமைப்புக்களின் பரிந்துரைகளோடு இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியினுடைய விருத்தாச்சலம் என்ற பெயரை 'திருமுதுகுன்றம்'

[1998 ஏப்ரல் 2

என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார். அதுபோக, 3-வது கோரிக்கையாக ஏற்கெனவே `Tuticorin' போன்ற ஆங்கிலத்தில் வருகின்ற சொற்களுக்கு 'தூத்துக்குடி' என்று எப்படித் தமிழ்ச் சொல் இருக்கிறதோ, அதேபோல ஆங்கிலத்தில் ஒலிப்புமுறை வர வேண்டும் என்ற கோரிக்கைகளும் இருக்கின்றன. இது தொடர்பாக, ஊர்களின் பெயர்களை மாற்றுவதற்குக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஆய்வில் இவை ஏற்கெனவே வைக்கப்பட்டு, சொற்கள் தொகுக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாவது வாரத்தில் மீண்டும் அந்தக் குழு கூடவிருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக உறுதி செய்யப்பட்டு, நடுவண் அரசுக்கு, அதனுடைய ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரம் கண்ட கலைஞர் ஆட்சியில், சுதந்திரப் பொன் விழா ஆண்டு நிறைவடையும் முன்பு, தமிழ்நாட்டில் ஜாதியின் பெயரால் அமைந்துள்ள ஊர்களின் பெயர்களை அரசு மாற்றுமா? உதாரணமாக, கவுண்டன்பட்டி, பறையப்பட்டி, சக்கிலிப்பட்டி, நாயக்கன் கொட்டாய், செட்டிப்பட்டி போன்ற கிராமங்களின் பெயர்களை அரசு மாற்றுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற பெயரை, வட மொழிப் பெயரை, திருவில்லிப்புத்தூர் என்று மாற்ற வேண்டும் என சட்டசபையில் நான் கேள்வி நேரத்தின்போது சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். நகராட்சியிலிருந்தும் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். ஏன் மத்திய சர்க்காரிலிருந்து இதற்கு ஒப்புதல் வரவில்லை. இந்த வடமொழிப் பெயர்களையெல்லாம் தமிழ்மொழிப் பெயர்களாக மாற்றுவதற்குப் பொதுமக்களிடமிருந்து ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா? மத்திய சர்க்காரை வற்புறுத்துவதற்கு



1998 ஏப்ரல் 2]

என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள்? எப்பொழுது முதல் அரசு ஸ்ரீவில்லிப்புத்தூர் என்பதை திருவில்லிப்புத்தூர் என்று பெயர் மாற்றி கெஜட்டில் உத்தரவிடும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறப்பாக வழங்கப்படுகின்ற சில ஊர்களினுடைய பெயர்களைத்தான், தமிழில் மாற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட முடியும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சரஸ்வதி அவர்கள் குறிப்பிட்டதைப்போல தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லாப் பெயர்களையும் மாற்றுவது என்பது இயலாத காரியம். ஒன்றிரண்டு, மிகப் பிரபலமாகச் சொல்லப்படுகின்ற பெயர்களைத்தான் மாற்ற இயலும். திரு. தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல ஸ்ரீவில்லிப்புத்தூர், 'திருவில்லிப்புத்தூர்' ஆவதிலோ அல்லது இந்த மூலக்கேள்வியிலே இடம்பெற்றுள்ள வேதாரண்யம் என்கின்ற பெயரை 'மறைக்காடு' அல்லது 'திருமறைக்காடு' என்று மாற்றுவதிலோ அரசுக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. அதுபற்றிய குறிப்புகளை மத்திய அரசுக்குத் தொடர்ந்து இவ்வரசு அனுப்பிக்கொண்டிருக்கின்றது. டால்மியாபுரம் என்கின்ற பெயரை 'கல்லக்குடி' என்று மாற்றுவதற்காகப் போராடி வெற்றி பெற்ற கழகத்தினுடைய ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நினைவூட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 128, திரு. அ. அசோகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**128—**

### சுக்கனாறு குடிநீர்த் திட்டம்

***2537—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் நகரில் சுக்கனாறு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1998 ஏப்ரல் 2

முற்பகல் 10-10

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருவாரூர் நகரில் நீண்ட காலமாகக் குடிநீர்ப் பற்றாக்குறை இருந்து வருகிறது. தற்போது அம்மையப்பன் கிராமத்திலிருந்து திருவாரூருக்கு வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை. மாவட்டத் தலைநகரம் ஆகிவிட்ட நிலையில் குடிநீர்த் தேவை அதிகரித்துள்ளது. புதிய குடிநீர் இணைப்புகளும் கொடுக்க முடியவில்லை. எனவே குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட திருவாரூர் நகரில் 'சுக்கனாறு' குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்படுவது உண்மை. திருவாரூர் நகராட்சியின் மக்கள் தொகை 1991 ஆம் ஆண்டின் கணக்குப்படி 49,194 ஆகும். ஆனால் இன்றைய நிலையில், அந்த மக்கள் தொகை எண்ணிக்கை அதிகரித்துப்போய் இருப்பது உண்மை. ஆனால் நம்முடைய அரசு, இன்னும் 30 ஆண்டுகள் கழித்து, 1991-லிருந்து 30 ஆண்டுகள் வரையில், மக்கள் எண்ணிக்கை எவ்வளவு கூடுதலாக வருமோ, அதன் அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு, புதிய திட்டத்தை நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அந்த அபிவிருத்தி செய்வதற்காக, அந்த எல்லை உட்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும், குறிப்பாக நாலுகால் மண்டபம், புதுத்தெரு, வேட்காடு கடைகோடிப் பகுதி, சீனிவாசபுரம், மருகைப்பட்டினம், அம்மாத்தோப்பு, கீராத்தோப்பு, இராமத்தப்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு இன்னும் சரியான முறையில் நீர் விநியோகம் இல்லை. அவைகளுக்கும் சேர்த்துக் கொடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கு, குடிநீர்ப் பகுதிகளில் நீர் வழங்க ஆய்வு செய்வதற்கு, ரூபாய் 5.1 இலட்சம் செலவில் ஆய்வு மதிப்பீட்டுக்காக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகஸ்ட் மாதம் 1998 வரையில் இந்தப் பணி நடக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகஸ்ட் திங்களில், இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதற்கான ஒப்புதல் வழங்கப்படலாம். அதோடுகூட, நாகப்பட்டினத்தில் நம்முடைய புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் போன்ற திட்டத்தில், ஏதாவது ஒன்றை இணைக்கலாமா என்ற பரிசிலனையையும் இரண்டொரு நாட்களுக்கு முன்னால் நான் தெரிவித்து இருக்கிறேன். அதையும் பரிசிலித்து விரைவாக



1998 ஏப்ரல் 2]

இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 129, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**129—**

## பாதாளச் சாக்கடைத் திட்டம்

***3823—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

வரகூர் தொகுதியில் அடங்கிய லப்பைக்குடிக்காடு பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தின்கீழ், லப்பைக்குடிக்காடு பேரூராட்சியில் தெருக் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குச் செல்லும் கழிவுச் சேகரிப்பு பிரதானக் குழாய்களும், 13 ஆளிறங்குக் கிணறுகளும் அமைக்கப்பட்டு விட்டன. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நிலம் பராதீனம் செய்யப்பட்டபின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பகுதி 100 சதவிகிதம் முஸ்லிம்கள் வாழுகின்ற பகுதி. தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஆதரவாக, விசுவாசமாக இருக்கும் அந்தப் பகுதி மக்களுக்காக, இந்தத் திட்டம் விரைவாகத் தொடங்கப்பட்டு அது முடிக்கப்படுமா? அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிலம் கையகப்படுத்துவதில் பலவிதமான கோளாறுகள் ஏற்பட்டு, பல ஆண்டுகளாகத் தடைபட்டு, நீதிமன்றங்களுக்கு வழக்கும் சென்று, அதற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்து, அதிலும் 30 ஏக்கர்

[1998 ஏப்ரல் 2

நிலம் கையகப்படுத்தப்பட பெரம்பலூர் வட்டாட்சியருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் தற்சமயம் அங்கு நரிக்குறவர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதால், அவர்களை வெளியேற்றுவது கடினமாக இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார். அதற்குப் பிறகு, மாவட்ட ஆட்சியர் மூலமாக நடவடிக்கை எடுத்து விரைவாகக் கையகப்படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். அதோடுகூட, வருவாய்த் துறை அலுவலர்கள், குடிநீர் வழங்கல் வாரிய அலுவலர்களுடன் கூட்டாகக் கலந்துபேசி, இந்தத் திங்கள் 7 ஆம் தேதி அன்று ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று தெரிவித்து இருக்கின்றேன். அந்த முடிவும் பிறகு அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திண்டுக்கல் நகரம் மாவட்டத்தினுடைய தலைநகரம். 1972-ஆம் ஆண்டு கழக ஆட்சி நடைபெற்றபோது, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ஆய்வு செய்யப்பட்டது. மீண்டும் 1989-91-ஆம் ஆண்டு கழக ஆட்சி இருந்தபோது மீண்டும் ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை. நிதிநிலை ஆதாரத்தைக் கருத்திற்கொண்டு, வரும் காலங்களில் செய்யவிருந்தாலும், இடைக்கால நிவாரணமாக, மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், 50, 60 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட கழிவுநீர் ஓடையாக இருப்பதால், மழைக்காலத்தில், அந்த ஓடையிலிருந்து நீர் சாலையில் செல்லக்கூடிய அவலம் இருப்பதால் அதை மாற்றியமைக்க அந்த ஓடைகளை அகலப்படுத்தி, ஆழப்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே பலமுறை பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அது நிறுத்தப்பட்டது உண்மை. அதற்கு என்ன காரணம் என்றால், பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது விரைவாகச் செய்யக்கூடியது அல்ல. ஆனால் தற்போது அவர்கள் குறிப்பிட்டதைப்போல இருக்கிற அந்தக் கால்வாய்கள், ஓடைகள் இவைகளைப் பயன்படுத்தி, அந்த நகரத்தில் தேங்கும் மழைத் தண்ணீர், மற்றும் அங்கே இருக்கின்ற கழிவு



1998 ஏப்ரல் 2]

நீரை அகற்றிவிடலாம் என்ற அளவிற்கு ஒரு நிலைமை இருக்கிறது. நான் கூட இதை இரண்டு மாதங்களுக்கு முன்னாலே சென்று பார்வையிட்டேன். அநேகமாக அந்த நிலையிலே, இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா என்பதைப் பற்றி, விரைவாக அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன்.

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு, சாக்கடைகளை வெளியேற்றக்கூடிய திட்டங்களைக் கொண்டுவருவதற்கு ஓரளவிற்குப் பண வசதி இருக்கிறது. அது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்யப்படுகிறது. ஆனால், அதேபோல், பேரூராட்சிகளுக்கு அந்த வழிவகையைச் செய்யாத காரணத்தால், பிரதான சாலைகளாக, பேரூராட்சிகளில் திகழப்படுகின்ற வழிகளில்கூட, சாக்கடைகள் நிறைந்து வழிந்து மக்கள் செல்லக்கூடிய பாதைகள் சீரழியக்கூடிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை உடனடியாகச் செய்து முடிக்கக்கூடிய இந்த அரசு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, பேரூராட்சிகளுக்கும் இத்தகைய வசதியைச் செய்து கொடுப்பதற்கு முன்வருமா? ஏனென்றால் பேரூராட்சிகளில் அதைச் செய்து முடிப்பதற்குப் போதுமான பண வசதி கிடையாது. ஆகவே, அதைச் செய்து முடிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாக்கடைத் திட்டத்தை, அதாவது கழிவு நீரைப் போக்குவதிலும், மழைநீரைப் போக்குவதிலும், பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி என்று பார்ப்பதில்லை. ஆனால், எந்தெந்தப் பகுதிகளில் இதை எப்படி வெளியேற்றுவது, எவ்வளவு குறைந்தகால நடவடிக்கையிலே முடிப்பது என்பதுதான் இப்போதுள்ள ஆராய்ச்சி. தற்போது ஏறத்தாழ 11 திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அதனுடைய ஆய்வுப் பணிகள் முடிவுற்றதற்குப் பிறகு, அதன் அனுபவ அடிப்படையிலே, சிலவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு எண்ணி இருக்கிறது. எனவே, கூடுமான வரையில், மாண்புமிகு உறுப்பினர்கள், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அதிக மோகம் கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எடுத்தவுடனேயே, பாதாளச் சாக்கடைத் திட்டம் என்று ஆரம்பிக்காமல், மழை நீரை வெளியேற்றுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதை முதலில் பரிசீலித்துவிட்டு, அப்படிப்பட்ட வாய்ப்புகள்

இருக்குமானால், அதை மேற்கொண்டு நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைக்கவேண்டுமே தவிர, பாதாளச் சாக்கடைத் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் என்று சொல்லி, திட்டத்தைப் பாதாளத்தில் போடாமல் இருப்பது நல்லது. இதை நான் எந்த அடிப்படையிலே சொல்கிறேன் என்றால், ஏறத்தாழ 1989-ல் நம்முடைய ஆட்சி அமைந்தபோது, பல திட்டங்களை எடுத்து, அவை முடியாத நிலைக்கு வந்தபிறகு, இப்போது, குடந்தை போன்ற 2, 3 நகரங்களில், பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாமல், அங்கெல்லாம் இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக, இருக்கிற வழித்தடங்களை, அதாவது நீர் வாய்க்கால்களைப் பயன்படுத்திக்கொண்டு, இதைச் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்து, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அது முடிவுற்றவுடன், அடுத்தடுத்து, பேரூராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், நிச்சயமாக இந்தத் திட்டங்களைப் பரிசீலிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடையிலிருந்து, கழிவுநீர் எந்தெந்த முறையிலே வெளியேற்றப்படுகின்றது? ஏனென்றால், சிதம்பரம் பாதாளச் சாக்கடையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கான்சாகிப் வாய்க்காலில், பாலமான் அருகில் கலக்கின்ற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக்கேள்வி வரகூர் தொகுதியைப் பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 130, திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**130—**

### விதைகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைத்தல்

***7083—திரு. மு.பெ. சாமிநாதன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் விதைகள் சுத்தம் செய்து தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதி ஈரோடு மாவட்டத்தின் தென் பகுதி. அந்தப் பகுதியிலே இதுபோன்ற விதைகளைத் தரம் பிரிக்கின்ற நிலையம் இதுவரையில் அமைக்கப்படவில்லை; எங்களுடைய மாவட்டத்தின் வடக்குப் பகுதியாக இருக்கின்ற பவானி மற்றும் சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில்தான் இருக்கின்றது. அதனால், தென் பகுதியிலே ஒரு விதை சுத்திகரிப்பு நிலையம், தரம் பிரிக்கின்ற நிலையத்தை அமைக்கின்ற அளவிலே, அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, சத்தியமங்கலத்திலும், பவானியிலும் விதைகள் சுத்திகரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. சத்தியமங்கலத்திலே இருக்கின்ற சுத்திகரிப்பு நிலையம் சிறிய அளவில், அதாவது ஆண்டு ஒன்றுக்கு 200 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிப்பு செய்யக்கூடிய அளவிலும், பவானியிலே இருக்கின்ற சுத்திகரிப்பு நிலையம் ஆயிரம் மெட்ரிக் டன் விதை சுத்திகரிப்பு செய்யக்கூடிய அளவிலும் இருக்கின்றன. இந்த இரண்டு சுத்திகரிப்பு நிலையங்களுக்குமே, போதிய அளவிற்கு இப்போது விதைகள் வருவதில்லை. ஆகவே இந்த நிலையில், மேலும் அங்கே தனியாகத் தென் பகுதியிலே, ஈரோட்டிலே சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அரசு கருதவில்லை.

முற்பகல் 10-20

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விதை தரம் பிரிக்கின்ற நிலையம் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு நிதியாதாரம் தேவைப்படுகிறது? அப்படிச் சிரமமான சூழ்நிலை ஏற்பட்டால் அந்த இரண்டிலே ஒன்றைத் தென் பகுதிக்கு மாற்றித் தருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிப்பதற்கு, மெஷினரிகளைப் பொறுத்தவரையில் ரூ.2 லட்சம் செலவாகும். கட்டட

[1998 ஏப்ரல் 2

வசதி சொந்தமாக இல்லாவிட்டால், வாடகை மற்றவையெல்லாம் சேர்த்து அமைத்துச் செய்வதானால், அதற்கு ரூ. 65,000. ஆக மொத்தம் ரூ. 2,65,000 செலவாகும். இந்த நிலையிலே, அவர்கள் கோருகின்றபடி, இங்கே இருக்கின்ற சத்தியமங்கலம், பவானி பகுதியிலே இருக்கின்ற ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை அவருடைய பகுதிக்கு மாற்றினால், உரிமைப் பிரச்சினை, உரிமைக் கோரிக்கை எழும். எனவே அதற்கு இப்போது வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 131, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**131—**

## அழகர் அணைத் திட்டம்

***5765—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதி, செண்பகத்தோப்பு அருகில் பேயனாறு படுகையில் கட்டும் அழகர் அணைத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அழகர் அணைத் திட்டம் கைவிடப்பட்டதால், அந்தத் திட்டப் பணிகள் எதுவும் இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே சட்டசபையில் அந்தத் திட்டம் இருக்கிறதாகச் சொல்லி சொக்கர் எம்.எல்.ஏ. கேள்வி கேட்கும்போது சொல்லியிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் விருதுநகர், சிவகாசி போன்ற இடங்களில் எல்லாம் கருத்தரங்கு நடத்தி, தேர்தல் வாக்குறுதியிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இல்லை என்று



1998 ஏப்ரல் 2]

சொல்கிறார்கள். இதிலே கேரளாவோடு ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்களா? இல்லாத திட்டத்திற்கு தேர்தல் வாக்குறுதி கொடுக்கிறீர்கள். கருத்தரங்கு நடத்துகிறீர்கள். இப்போது இல்லை என்று சொல்கிறீர்கள். முன்னுக்குபின் முரணாக இருக்கிறது. அந்த அணைக்கட்டுத் திட்டம் இல்லாவிட்டாலும், மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்கிற அந்த மழைத் தண்ணீரை வைத்து, ஒரு அணைக்கட்டு கட்டினால், விவசாயிகளுக்கும் உதவும், திருவில்லிப்புத்தூர் நகராட்சியிலுள்ள மக்களுக்குக் குடிநீர் பிரச்சினையும் தீரும். ஆகவே தமிழக அரசே இந்த அழகர் அணைத் திட்டம் என்கிற பெயரிலே குடிநீருக்கும் விவசாயத்திற்கும் பயன்படுகிற வகையில் - ஆய்வு செய்து முடித்தாகிவிட்டது. அதை நிறைவேற்ற அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல் அழகர் அணை கட்டுவதற்கு என்று தனியாக எந்தக் கருத்தரங்கும் நடத்தவில்லை. ஆனால் பாசனக் கருத்தரங்கு நடத்திய நேரத்திலே மற்ற நேரத்திலே, பொதுமக்களிடமிருந்தும், பலரிடமிருந்தும் அழகர் அணை கட்டவேண்டுமென்ற கோரிக்கை வந்ததுண்டு. அந்தக் கோரிக்கைக்கு மதிப்பு அளிக்கிற வகையில் அரசு அதுகுறித்து ஆய்வு நடத்தியது. அழகர் அணை என்பது, மேற்குத் தொடர்ச்சி மலையிலே ஒரு பகுதியாக இருக்கின்ற பேய்மலை என்ற ஒரு பகுதியிலிருக்கின்றது. கழுகுமலை தெற்குப் பகுதியிலே இன்னொரு மலை இருக்கிறது. இரண்டும் சந்திக்கிற இடம் கன்சாபுரத்தினுடைய கணவாய். அந்த கன்சாபுரத்தினுடைய கணவாயிலே இரண்டு மலைகளுக்கும் இடையிலே இருக்கிற தூரம் 3200 அடி. அந்த இடத்திலே 278 அடிக்கு மேலே ஒரு டாம் கட்டினால் சுமார் 4000 மில்லியன் கன அடித் தண்ணீரைத் தேக்கினால், அதைக்கொண்டு திருவில்லிப்புத்தூர், சாத்தூர், ராஜபாளையம் பகுதிகளில் 165 குட்டைகளுக்கு, பாசனத்திற்குரிய 8000 எக்டேர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கலாம் என்று முதலிலே ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் அந்த நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் வரத்து வேண்டும். பேயனாறு என்பது வைப்பாற்றினுடைய ஒரு துணை நதி. அந்த நீர் வரத்தை எப்படிக் கொண்டுவருவது என்று ஆய்வு நடத்தியபோதுதான், மூல வைகையிலே ஓர் அணை கட்டி—வாலிப்பாறை என்ற ஓர் இடம் இருக்கிறது—அங்கே ஓர் அணை கட்டி—அங்கே டன்னல் மூலமாகவும் கான்டூர் கெனால் மூலமாகவும் கொண்டு வரலாம் என்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால், ஏற்கெனவே

வைகைத் தண்ணீர் கீழே கிடைக்கவில்லை என்று இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களிலே ஒரு பெரும் குறை இருக்கிற காரணத்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒத்துழைப்புத் தராத காரணத்தாலும், அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. சரி போகட்டும். பேயனாறு ஆற்றினுடைய கிளை நதிகளாக இருக்கக்கூடிய பாலாறு, கோரையாறு, இவைகளிலே எல்லாம் சின்னச் சின்ன அணைகள் கட்டி, அந்த நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டுவரலாம் என்று பார்த்தால் போதிய மழை அங்கேயில்லை.

மூன்றாவதாக ஒரு திட்டம் தீட்டப்பட்டது அதுதான் பம்பா-கல்லாறு, பம்பா-அச்சன்கோயில். அந்தத் திட்டத்திலேயிருந்து தண்ணீரைக் கொண்டுவந்து இங்கே சேர்க்கலாம் என்று ஒரு திட்டத்தை ஆய்வு நடத்தினோம். அதற்கிடையில் 'National Water Development Agency' ஒரு ஆய்வு நடத்தினார்கள். அந்த ஆய்வின் அடிப்படையில் பம்பா-அச்சன்கோயில்—வைகை அணை இணைப்பைவிட, பம்பா-அச்சன்கோயில்-வைப்பாறு இணைப்புத்தான் சரியாக இருக்குமென்று அவர்கள் ஆய்வு நடத்தியிருக்கின்றார்கள். காரணம், அழகர் அணையிலே இப்போது பம்பா, அச்சன்கோயிலை இணைத்தால் 1.08 டி.எம்.சி.தான் தண்ணீர் வரும். ஆனால் பம்பா, வைப்பாறையை இணைத்தால் 22 டி.எம்.சி. தண்ணீர் வரும். பம்பா, அழகர் அணையை இணைத்தால் 20,000 ஏக்கர்தான் பாசனம் வரும். பம்பா, வைப்பாறையை இணைத்தால் ஒரு இலட்சம் ஏக்கருக்கு மேலே பயனுக்கு வருகிறது. எனவே, this is not feasible; அது feasible, அதாவது பம்பா-அச்சன்கோயில் திட்டம்தான் சாத்தியக்கூறானது என்று 'National Water Development Agency' கருதியிருக்கிறது. இதற்கிடையில் தண்ணீரைத் திருப்பிவிட வேண்டும். பம்பாவினுடைய கிளை நதியாய் இருக்கின்ற கல்லாற்றிலே ஒரு அணை கட்டி, அச்சன்கோயில் ஆற்றிலே ஒரு அணை கட்டி, இரண்டையும் tunnel மூலமாக இணைத்தால் மூன்றாவது 'reserving balance' அச்சன்கோயிலிலே கட்டிக்கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்றுதான் திட்டம் தீட்டினோம். ஆனால், கேரளாவிலே மேற்கு நோக்கிப் பாய்கிற ஆறும், பம்பாவும், அச்சன்கோயிலும், கல்லாறும், இப்படி இருக்கிற ஆறுகள் எல்லாம் கேரள மாநில எல்லைக்குள் வருகிற காரணத்தினால், நாம் அங்கே ஆய்வு நடத்தக்கூட அனுமதிக்கப்படவில்லை. கேரள அரசு ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைஞர் தலைமையிலே அமைந்த பிறகு, 28-11-1996 அன்று கேரள அமைச்சரோடு நான் இங்கே பேசுகிறபோது மீண்டும், இந்தத் திட்டத்திற்கு நீங்கள் அனுமதி தாருங்கள்





என்ற கேட்டபோது, நாங்கள் இன்னும் பம்பா, அச்சன்கோயில் பகுதியிலே ஆய்வு நடத்திக்கொண்டு இருக்கிறோம். வெம்பநாடு பகுதியிலே கடல் தண்ணீர் உள்ளே புகாமல் இருப்பதற்கு இந்தத் தண்ணீர் தேவைப்படுகிறது என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும், பம்பாவையும், வைப்பாறையும் இணைக்கிற அந்தத் திட்டத்திற்கு இந்த அரசு தொடர்ந்து பாடுபடும். ஆக, அழகர்கோயில் இல்லாவிட்டாலும், வைப்பாறு வாழ்வளிக்கும் திருவில்லிப்புத்தூருக்கு என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர் அதிலே திருப்தியடையலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-25

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அழகர் கோயில் அணைக்கட்டுத் திட்டமும் வரப்போவது கிடையாது. பம்பையாறு, வைப்பாறு, அச்சன்கோயில் திட்டமும் வரப்போவது கிடையாது. சும்மா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதை, வசனம், எழுதின மாதிரி என்னத்தையாவது சொல்லிக்கொண்டே போக வேண்டியதுதான். கேட்கிறதற்கு நன்றாகத்தான் இருக்கும். ஆனால், அணைக்கட்டு வருகிறமாதிரி இல்லை. ஆகையால் கேரள அரசோடு எத்தனை தடவை பேச்சுவார்த்தை நடத்துவீர்கள்? வருகிற கவர்ன்மெண்ட் பூராவும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே இருக்கிறீர்கள். ஆனால், அவர்கள் தண்ணீர் கொடுக்கிற மாதிரியே தெரியவில்லை. இந்தத் தடவைதான் நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறீர்கள். இறுதியாக நீங்கள் எப்போது பேச்சுவார்த்தை நடத்தினீர்கள்? இனி எப்போது பேச்சுவார்த்தை நடத்தப் போகிறீர்கள்? அதனால் ஏதாவது பிரயோசனப்படுமா? பிரயோசனப்படாததைப் போய் எதற்காக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள்? மேற்கு நோக்கி பாய்ந்து, அரபிக்கடலிலே வேஸ்ட்டாக விழுகிறதை, பாரதப் பிரதமர் அவர்கள் தலையிட்டு ஏதாவது காரியத்தை முடிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஏன் இந்தத் திட்டத்தை செயல்படுத்தவில்லை என்று கேட்டார்? செயல்படுத்தாததற்கு மூன்றுவிதமான காரணங்களை நான் சொல்லி, ஏன் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்ற விளக்கமும் அளித்தேன். பிறகு, ஏன் பேச்சுவார்த்தை நடத்துகிறீர்கள் என்கிறார்கள்? நடத்தினால், பேச்சு வார்த்தைக்குப் பலன் இல்லை, ஏன் நடத்துகிறீர்கள் என்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது, ஒருமுறை,

[1998 ஏப்ரல் 2

இரண்டு முறை, மூன்று முறை பேச வேண்டும். காரணம், இது இரு மாநிலங்களுக்கு இடையேயுள்ள உறவு. அதை எடுத்து நான் சொல்லும்போது, விளக்குகிறபோது, ஏதோ கதை, வசனம் எழுதுவதைப்போல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறார் என்று என்மீது குற்றம் சொல்கிறார். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வசனம் பேசுவதைப்போல பேசலாமே தவிர, கோமாளியைப்போலப் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதை, வசனம் என்றுதான் சொன்னேன்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி முதலிலே என் பேச்சைக் கேளுங்கள். நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். கேள்வி நேரத்திலே கேள்வி கேட்கிறபோது, இந்தத் திட்டம் வருமா, வராதா என்று கேட்கலாம். நீங்களே வராது என்று சொல்லிவிட்டு, அமைச்சர் மேலே உள்நோக்கம் கற்பித்து, குற்றஞ்சாட்டிச் சொல்லக்கூடாது என்பது மரபு. அப்படி இருக்கும்போது, நீங்கள் பேசியதற்கு அவர் பதில் சொன்னார். இப்போது நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கோமாளி என்ற வார்த்தையை....

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் மாண்புமிகு உறுப்பினரைக் குறித்துச் சொல்லவில்லை. அவர் சொன்னார், கதை, வசனம் பேசுவது போலப் பேசுகிறேன் என்று. நான் கதை, வசனம் பேசுவதுபோலப் பேசலாமே தவிர, கோமாளியைப்போலப் பேசக்கூடாது என்று சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் கோமாளி என்றோ, அப்படிக் கோமாளியைப்போலப் பேசுகிறார் என்றோ நான் சொல்லவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோமாளி என்ற அந்த வார்த்தையை எடுக்க வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி அவர்கள் கேள்வி நேரத்திலே ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிச் சொல்லவில்லையே! நீங்களாவது



1998 ஏப்ரல் 2]

அவரைக் குறிப்பிட்டு, கதை, வசனம் என்று சொன்னீர்கள். அவர் உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொன்னார், எப்படிப் பேச வேண்டும் என்று. அவர் முதலிலேயே மறுத்துவிட்டார். உங்களைப் பார்த்துச் சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொன்னேன் என்று சொல்கிறார்கள். ஆகவே, நீங்கள் உட்காருங்கள்.

*முற்பகல் 10-30*

பேரவையின் முன்னனுமதியோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 132, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**132—**

**போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்**

***9791—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லியில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அல்லது துணைப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை.

வினா எண். 133, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 2

**133—**

**தேரோட்டத்தை மீண்டும் செயல்படுத்துதல்**

***3338—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம், நெல்லூர்பேட்டை கருப்புலீஸ்வர் ஆலயத்தில் நின்றுவிட்ட தேரோட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998 ஆம் ஆண்டு சித்திரைத் திங்களில் தேரோட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. வி.ஜி. தனபால்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அந்தத் தேரோட்டத்தை வெகு சிறப்பாகச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, பாடாத தமிழ்ப் பாடல்களை எல்லாம் திருக்கோயிலிலே பாட வைத்தவர் கலைஞர். அதேபோல ஓடாத திருவாரூர் தேரை ஓடவைத்தார். இதனால் திருவாரூர் தியாகராஜரே அகமகிழ்ந்தார். இப்பொழுது அந்தத் தேர் ஓடுகிறதா அல்லது எப்போது ஓடும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டு காலத்திற்கு முன்பு ஓடாமல் இருந்த தேரை 1969 ஆம் ஆண்டு இந்த ஆட்சி பொறுப்பேற்றிருந்த நேரத்தில்தான் ஓட்டினோம். தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு



1998 ஏப்ரல் 2]

அந்தத் தேரை ஓட்டுவதற்குப் பணம் தேவை என்று அரசைக் கேட்டு இருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 134, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**134—**

**கோவில் சொத்துக்கள் ஆக்கிரமிப்பு**

***3898—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்களைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை சுமார் 100 வருடங்களுக்கு மேலாக 266 நபர்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். ஆக்கிரமிப்பாளர்களுள் சிலரை திருக்கோவில் நிலத்திலிருந்து வெளியேற்ற, தொடரப்பட்ட வழக்குகளில், கீழ்நீதிமன்றத் தீர்ப்புகள் ஆக்கிரமிப் பாளர்களுக்குச் சாதகமாகவும், திருக்கோவிலுக்குப் பாதகமாகவும் அமைந்து விட்டதால், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டு, கீழ்நீதிமன்றத் தீர்ப்பு மீது தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது. மேல்முறையீடு மீது தீர்ப்புப் பெற்ற பின் அந்த தீர்ப்பின் அடிப்படையில் மற்ற ஆக்கிரமிப்பாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. சொக்கலிங்கம், இருக்கையில் இல்லை.

[1998 ஏப்ரல் 2

வினா எண் 135, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**135—**

**நிலவள வங்கி அமைத்தல்**

***7403—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் நிலவள வங்கி இல்லாமையால் கடன் பெற ஏழை மக்கள் கொடைக்கானலுக்கும், திண்டுக்கல்லுக்கும் செல்வதால், நிலக்கோட்டையில் நிலவள வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கொடைக்கானல் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் விரிவாக்கக் கிளை நிலக்கோட்டையில் 1993 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது, நிலக்கோட்டையில் புதிய நிலவள வங்கி ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் அமைந்திருக்கிற வத்தலகுண்டு பகுதியிலிருந்து கொடைக்கானல் நிலவள வங்கிக்குப் போகிற நிலை இருக்கிறது. நிலவள வங்கி என்று சொன்னால் ஆடுகள் வாங்குவதற்கு வழங்குகிற லோன், எருமைமாடு வாங்குவதற்கு வழங்குகிற லோன், பாக்டரிகளுக்கு வழங்குகிற லோன் மற்றும் விவசாய முன்னேற்றத்திற்கு லோன் வழங்குகிற வங்கியாக அது இருக்கிற காரணத்தினால் வத்தலகுண்டு பகுதியிலே இருக்கிற விவசாயிகளுடைய நன்மையைக் கருதி நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடைக்கானலில்



1998 ஏப்ரல் 2]

இருக்கிற நிலவள வங்கியை வத்தலகுண்டு பகுதிக்கு மாற்றித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வங்கியினுடைய கிளை ஒன்று இன்றைக்கு நிலக்கோட்டையிலே இயங்கிக் கொண்டு வருகிறது. தனியாக நிலக்கோட்டையிலே ஒரு புதிய ஊரக வளர்ச்சி வங்கி தொடங்க வேண்டும் என்றால், 2 கோடி ரூபாய் அளவுக்கு வரவு, செலவு நடக்குமானால்தான் வங்கி நடப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கும். அப்படி ஆராயப்பட்டபோது, இங்கு புதிதாக வங்கி ஆரம்பிக்கப்பட்டால் கொடைக்கானல் வங்கி நசிந்து விடும் என்று இன்றைக்கு ஆய்வாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் சாத்தியக்கூறு இல்லை என்று பதில் கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 2 கோடி ரூபாய்க்கு வரவு, செலவு செய்வதற்கு அங்கே சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று உறுதியாகச் சொன்னால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டிலோ, கொடைக்கானலிலோ புதிய நிலவள வங்கி தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்டால் ஆட்சேபணை இல்லை. ஆனால் கொடைக்கானலில் இருக்கக்கூடிய நிலவள வங்கியை வத்தலக்குண்டிற்கு மாற்றித்தர வேண்டும் என்று கேட்பது எந்த வகையில் நியாயம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 136, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**136—**

**சட்டப் பல்கலைக்கழகத்திற்குக் கட்டடம் கட்டுதல்**

***13541—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

*மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சட்டப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்ய அரசு பரிசீலித்துள்ளதா?*

[1998 ஏப்ரல் 2

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட சென்னையில் ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பன் கோவிலுக்கு அருகில் இடம் தேர்வு செய்து, அந்த இடத்தைப்பெற நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சட்டப் பல்கலைக்கழகமானாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டவேண்டும் என்றாலும் சரி நிலத்தை அரசு கையகப்படுத்த நீண்ட காலதாமதம் ஆகின்றது. அதில் ஏதாவது சட்டச் சிக்கல் இருக்குமானால் அரசு அந்தச் சிக்கலை நீக்கி எளிதாக நிலத்தைக் கையகப்படுத்த ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் எந்த நெறியை மேற்கொண்டாலும் நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற உரிமையை நாம் தடுக்க முடியாது. அண்ணல் அம்பேத்கர் நினைவு மண்டபத்தைக் கட்டுவதாக இருந்தாலும் சரி, அதே பகுதியில் அண்ணல் அம்பேத்கர் திருப்பெயரால் சட்டப் பல்கலைக்கழகம் அமைப்பதாக இருந்தாலும் சரி, அது அரசுக்குச் சொந்தமான நிலம்தான். ஆனால் Public Litigation Petition என்ற அடிப்படையில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காடும்போது அந்த உரிமையை நாம் தடுத்துவிட முடியாது. அதைச் சந்தித்து வெற்றி பெற நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 137, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**137—**

## கூட்டுறவு நூற்பாலை தொடங்குதல்

***13454—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 2]

கிருஷ்ணகிரியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை தொடங்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகுந்த வேதனையோடு இந்தத் துணைக் கேள்வியைக் கேட்க நான் நின்று கொண்டிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் தர்மபுரி மாவட்டத்தில் முழுக்க, முழுக்க பெண்களால் நடத்தப்படக்கூடிய ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வந்தது. அதற்குப் பிறகு, வழக்கம்போல அதைச் செயற்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். அதை நீங்கள் ஏற்படுத்திக் கொடுப்பீர்களா என்று கேட்கத்தான் இந்தத் துணை வினாவைக் கேட்க நின்றேன். இருக்கின்ற நிலையைப் பார்த்தால் இருப்பதைத் தக்க வைத்துக் கொண்டாலே போதும், புதிதாக எதையுமே கேட்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகுமோ என்று நான் அஞ்சுகிறேன். நேற்று கிருஷ்ணகிரியில் உள்ள நீதிமன்றத்தைக் கேட்டார்கள். வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். இன்றைக்கு 'D.I.E.T.' வேண்டும் என்று கேட்கிறார்கள். நாளைக்கு கிருஷ்ணகிரியில் உள்ள மலையை பெயர்த்துக் கொண்டு வந்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சரிடம் கேள்வியைக் கேட்டு, பதிலை வாங்குங்கள்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்து கொள்ள விரும்புவதெல்லாம் கிருஷ்ணகிரியில் கூட்டுறவு முறையில் ஒரு நூற்பாலை ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதும் இந்த அவையினுடைய ** மற்றவர்கள் கேட்காமல் இருப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த ** வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் எந்தச் செயற்குறிப்பும் இல்லை. ஆனால் தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் ஒரு கூட்டுறவு நூற்பாலை 25 ஆயிரம் கதிர்களோடு தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது. குறிப்பாக, கூட்டுறவுச் சங்க ஆலைகளுடைய ஒட்டுமொத்த உற்பத்தி மாதம் ஒன்றுக்கு 25 லட்சம் கிலோ நூலாக இருக்கிறது. ஏறத்தாழ கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கு மேலே இந்த நூல் உற்பத்தி இருக்கின்ற காரணத்தால் இதற்கு வெளி மாநில வெளிச் சந்தையை நம்பியிருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் புதிதாகக் கூட்டுறவுச் சங்க நூற்பாலைகள் உருவாக்க இயலாது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 138, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**138—**

### மேலூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்

**•11729—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது மேலூரில் வீட்டுவசதித் திட்டம் எதுவும் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், இருக்கையில் இல்லை.



1998 ஏப்ரல் 2]

வினா எண் 139, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**139—**

### ஆட்டுப் பண்ணை அமைத்தல்

**•10134—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் ஆட்டுப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-40

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டியிலே அடர்ந்த காடுகள் இருக்கின்றன. மேய்ச்சல் நிலங்களும் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதியைச் சுற்றி, ஆடு வளர்ப்போர் சங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகிய, ஆடு வளர்ப்போர் சங்கத்தினுடைய கோரிக்கையாகிய இந்த ஆட்டுப்பண்ணை அமைக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டத்தில், சின்னசேலத்திலே ஒரு ஆட்டுப் பண்ணை இயங்கி வருகிறது. மேலும், விருதுநகர் மாவட்டம் சாத்தூரிலும், வேலூர் மாவட்டம் முகுந்தராயபுரத்திலும் ஆட்டுப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. புதியதாக ஆட்டுப் பண்ணை ஏற்படுத்த வேண்டுமானால், அவற்றிற்குத் தேவையான நிலம், நீர் ஆதாரம், கொட்டகை மற்றும் இதர வசதிகளுடன் போதிய பணியாளர்களும் தேவை. தவிர, ஆட்டுப் பண்ணை ஏற்படுத்திட போதுமான நிதி ஆதாரமும் தற்போது அரசிடம் இல்லை. எனவே, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி அமைந்ததற்குப் பின்னால், நம்முடைய முதல்வரவர்களுடைய ஆணைக்கேற்ப கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களெல்லாம் நடத்தப்பட்டு இன்றைக்கு ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களிலே தலைவர்கள் பொறுப்பேற்று இருந்தாலும்கூட, தற்போது ஆடுகள் வாங்கக் கடன் வழங்குகிற திட்டம் நடைமுறையிலே இல்லையென்று தெரிவிக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து ஒரு ஆட்டுக்கு இவ்வளவு என்று பணம் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். தற்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்க அவர்களுக்கு ஆடு வளர்க்கக் கடன் வசதி செய்து தர புதிய திட்டம் ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பாக, ஆடு வளர்ப்போர் சங்கங்களுக்கு மானிய அடிப்படையில் உதவி வழங்குவது தற்போது இல்லை. தாட்கோ மூலமாக ஆதிதிராவிடர்களுக்கு வழங்குகின்ற திட்டம் அரசின் அனுமதியுடன் ஒவ்வோராண்டும் நடைபெற்று வருகிறது. அதைப்போல, ஐ.ஆர்.டி.பி., - ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் அடிப்படையிலேதான் ஆடு வளர்ப்பவர்களுக்கு, அந்த ஊராட்சி ஒன்றியங்களிலே கடனுதவி வழங்கப்படுகிறது. எனவே, துறையின் சார்பாக வழங்கப்படுவது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 140, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**140—**

**மாணவிகள் தங்கும் விடுதி கட்டுதல்**

***7811—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 2]

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் பகுதியில் ஆதிதிராவிட மாணவிகள் தங்கும் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ச. நாகரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட கடவூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதி. வாடகைக் கட்டடம்கூட கிடைக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்ற அந்தப் பகுதியிலே அரசு மாணவிகள் விடுதி இயங்கி வருகிறது. ஆகவே, மாணவிகளுடைய வசதியைக் கருத்திற்கொண்டு நடப்பாண்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டிருக்கும் மூலக் கேள்வியில் கடவூரில் மாணவிகள் விடுதி கட்டித் தரப்படுமா என்பது கடவூரில், இத்துறையின் சார்பாக எந்த மாணவிகள் விடுதியும் நடத்தப்படவில்லை. ஆகவே, இந்தக் கேள்வி எழ இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கடந்தகால ஆட்சியிலே கட்டப்பட்டு பாதியோடு நிற்கிறது. இது அமைச்சருக்கும், அரசுக்கும் தெரியுமா? அதை எடுத்த ஒப்பந்தக்காரர் பணியை நிறுத்திவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்குப் பின்னால், இன்றையதினம் அது அப்படியே நிலுவையில் இருக்கிறது. மீண்டும் அந்தப் பணியைத் தொடர்ந்து விரைவில் முடித்துக் கொடுக்க முடியுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சியில் பாதியிலே கட்டடம் கட்டி நிறுத்தப்பட்டிருக்கிறது என்கின்றார். அது சம்பந்தப்பட்ட கருத்துரு அரசுக்கு வரவில்லை. சம்பந்தப்பட்ட உறுப்பினரவர்கள் கருத்துருவைக் கொடுத்தால் அதைப்பற்றி ஆய்ந்து, விரைவில் கட்டி முடிக்கப்படும் என்று கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு): ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரியார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) குண்டுப்பட்டி (கொடைக்கானலுக்கு அருகே) கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் காவல் துறையினரால் தாக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. குண்டுப்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் காவல் துறையினரால் தாக்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. நா. பெரியசாமி, திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி, திரு. சி. ஞானசேகரன், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. கே. சுப்பராயன், திரு. லா. சந்தானம் ஆகியோர் கவன ஈர்ப்பாகவும், ஒத்தி வைப்புத் தீர்மானமாகவும் எடுத்துக் கொள்ள அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, கட்சிக்கு ஒருவர் வீதம் பேச அழைக்கிறேன். முதலில் டாக்டர் க. கிருஷ்ணசாமி.

*முற்பகல் 10-45*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதியன்று திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகேயுள்ள குண்டுப்பட்டி என்று அழைக்கப்படுகின்ற பகுதியில் 10-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி தேர்தல் புறக்கணிப்பு செய்திருந்தார்கள். தேர்தல் புறக்கணிப்பு செய்திருந்த அந்த மக்களை





வாக்களிக்க வேண்டுமென்று வலியுறுத்தியும், வேண்டுகோள் விடுத்தும்—வேதனையோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும்கூட—வடிவேலு என்று சொல்லக்கூடிய ஒன்றியச் செயலாளர் அங்கே சென்றிருக்கிறார். அங்கே நாங்கள் ஏற்கெனவே 10-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த 20 ஆண்டு காலமாக விளைவிக்கக்கூடிய விளை பொருட்களாகிய உருளைக்கிழங்கு; கேரட் போன்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நாங்களே கொத்தடிமைகளாக இருந்து, சுப்ரீம் கோர்ட் ஆணையின் பேரில் விடுதலை பெற்று 2 ஏக்கர் நிலங்களைப் பெற்று, கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த மக்கள் அனைவரும் 1972 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வந்த மக்கள் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழையெளிய மக்களாகிய நாங்கள் இந்த அளவுக்கு, கஷ்டப்பட்டு விளைவிக்கக்கூடிய பொருள்களைக் கொண்டுச் செல்வதற்கு வழியில்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம், எனவே, எங்களுக்குச் சாலை வசதி செய்து தாருங்கள் என்று சொல்லி தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் பல ஆண்டுகாலம் கவனிக்கப்படாதக் - காரணத்தினால் அவர்கள் தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார்கள். ஆனால், தேர்தலுக்கு 4 நாட்களுக்கு முன்பு, ஒன்றியச் செயலாளர் வடிவேலு அவர்களும், டி. பழனிசாமி, பி. பழனிசாமி போன்றவர்களெல்லாம் வற்புறுத்தியதன் பேரில் சிறு சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கடந்த, அதே மாதத்தில் 26 ஆம் தேதியன்று அதிகாலை காவல் துறையினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சென்று அந்த மக்களை அடித்துத் துன்புறுத்தியது மட்டுமல்லாமல் இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அவர்களுடைய பண்டபாத்திரங்கள் முதல் வீடுகளையெல்லாம் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். இதை நானே நேரிடையாக மார்ச் மாதம் 26 ஆம் தேதியன்று மாலை 5 மணிக்குச் சென்று ஏறக்குறைய 4 மணிநேரம் அவற்றையெல்லாம் பார்த்து வந்திருக்கிறேன். ஆனால், வேதனைக்குரிய விஷயம், ஷியாம் சுந்தர் என்று அழைக்கக்கூடிய டி.ஐ.ஜி., குடியுரிமைப் பாதுகாப்பு டி.ஐ.ஜி-ஆக இருக்கக்கூடியவர், அவர் செய்தித் தாள்களிலே செய்தி கொடுக்கின்றபோது, தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுடைய பண்ட பாத்திரங்களையெல்லாம் அவர்களே உடைத்துக்கொண்டார்கள் என்று கொடுத்திருக்கிறார். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய

ஒன்றல்ல. அடுத்த வேளைக்கு சமையல் செய்வதற்கு, பண்டபாத்திரங்கள் இல்லாமல் எந்த ஒரு பெண்ணும் தன்னுடைய பாத்திரங்களை உடைத்துக்கொள்ளத் தயாராக இருக்க மாட்டாள். இதை நானே நேரிடையாகச் சென்று எல்லாவற்றையும் பார்த்த காரணத்தினால் சொல்கிறேன். எனவே, கவனத்தை ஈர்க்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் இது. அந்த மக்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் இப்போது விவசாயம் செய்வதற்குரிய நேரத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய பொருள்களையெல்லாம் இழந்துவிட்டதோடு, தாங்கள் வைத்திருந்த காசு, பணமெல்லாம் கொள்ளை அடிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். எனவே, மனிதாபிமான அடிப்படையில்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடந்த சம்பவத்தைப் பற்றிச் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முதலமைச்சர் அவர்கள் கமிஷன் போட்டிருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் வழங்க வேண்டும். அதேபோல; பலமுறை அதிகாரிகள் உண்மையை திரித்துக் கூறுகின்ற காரணத்தினால், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை முதல்மைச்சர் அவர்கள் அனுப்பி உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே போல அவர்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்தச் சாலை வசதியைச் செய்து தருவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல, அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுககொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே கொடைக்கானலிலிருந்து ஏறக்குறைய 25 கிலோ மீட்டர் தொலைவிலேயுள்ள கூக்கல் ஊராட்சியைச் சேர்ந்த குண்டுப்பட்டி கிராமம், கோம்பைக்காடு, கணேசபுரம், சத்தியாகரே, தாளம்பத்தூர், பாரதி நகர்—ஏ காலனி, பாரதி நகர்—பி காலனி, வாளநாசம், விடுதலை நகர் போன்ற 10 கிராம மக்கள் சுதந்திரம் பெற்ற காலத்திலேயிருந்து இதுவரை நாங்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வருகிறோம்.



ஆகவே, இந்த வசதிகளைக் கோரிக்கையாக வைத்து தேர்தலைப் புறக்கணிக்கிறோம்" என்று சொல்லி, அந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதாக முடிவு செய்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-50*

அந்த வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றியச் செயலாளர் பொறுப்பிலே இருக்கக்கூடிய மரியாதைக்குரிய வடிவேலு அவர்களும், நகரச் செயலாளராக இருந்த ஜீவா அவர்களும், அவர்களிடத்திலே சென்று வாக்குப் போட வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதனாலே, அவர்களிடத்திலே சின்ன சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அந்த வாய்த் தகராறு முற்றியிருக்கிறது. இருந்தாலும்கூட, எங்களுக்கு அடிப்படை வசதியான சாலை வசதி இல்லாத காரணத்தாலே தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லி அந்த, பத்துக் கிராம மக்களும் தேர்தலைப் புறக்கணித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தச் சின்ன மோதல் பெரிய வடிவிலே வடிவெடுத்து அங்கே இருந்தவர்களையெல்லாம் தாக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே, அந்தப் பகுதியிலேயிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், அதிலும் குறிப்பாக சிரிமாவோ பண்டாரநாயகா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி தாயகம் திரும்பிய தமிழர்கள், சாதாரண மக்கள் என்ற காரணத்தாலே காவல்துறையிலே அவதூறான புகார்களைக் கொடுத்து—அங்கே காவல்துறை மட்டும் அந்தப் புகாரின் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் சரியாக இருந்திருக்கும். ஆனால்—அங்கே கூலிப்படையினுடைய தலைவன் என்று சொல்லக்கூடிய ஜீவா என்பவனுடைய தலைமையிலே 50-க்கும் மேற்பட்டவர்களை அழைத்துச்சென்ற காரணத்தாலே, காவல்துறை அமைதியாக இருந்தாலும்கூட, அந்த ஜீவா என்பவனுடைய தலைமையிலே சென்ற அந்த அடியாட்கள் கும்பல், வீடுகளையெல்லாம் அடித்து நொறுக்கி, பாத்திர பண்டங்களையெல்லாம் சேதப்படுத்தியிருக்கிறது. அது மாத்திரமல்ல, அரிசியையெல்லாம் வெளியே எடுத்துப் போட்டதோடு மட்டுமல்லாமல், இரண்டு வீடுகளிலே அடுப்பிலேயிருந்த உணவிலே - சாப்பாட்டிலே - சீமெண்ணெயை ஊற்றியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கோர, கொடூரமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அந்தத் தாக்குதலிலே மூன்று கர்ப்பிணிப் பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்பட்டிருக்கிறது. மூன்று குழந்தைகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இருபத்தைந்தே நாளான குழந்தை ஒன்று இறந்திருக்கிறது. இதையெல்லாம் நான் வேண்டுமென்றே சொல்லவில்லை; புள்ளிவிவரங்களோடுதான் சொல்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட அந்த

[திரு. ஜி.கே. மணி] [1998 ஏப்ரல் 2

அடியாட்களை வைத்து, காவல்துறை நடத்திய இந்தச் சம்பவம் மிகவும் வேதனைக்குரிய, எல்லோரும் ஆச்சரியப்படக்கூடிய, வருந்தத்தக்க ஓர் அம்சமாக இருக்கிற காரணத்தாலே, இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நம்முடைய தமிழகத்திலே நடைபெறக்கூடாது என்ற அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, அவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டயீட்டுத் தொகையை வழங்குவதோடு, அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதோடு, அதே நேரத்திலே அவர்களுடைய உன்னதமான கோரிக்கையான அந்தச் சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கும் வகையிலே எல்லா நிலைகளிலும் அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று—அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கிலே மதுரையிலே ஜாமீனிலே வருகின்ற நேரத்திலே, நடந்து செல்லக்கூட முடியாத நிலையிலே இருந்த முருகையா என்பவர்கூட வழியிலே இறந்திருக்கிறார். இறந்தவருடைய சடலம் அங்கே பிரேதப் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று சொல்லி மருத்துவமனைக்குச் சென்றாலும்கூட அங்கே பிரேதப் பரிசோதனை செய்யப்பட மாட்டாது என்று திருப்பியனுப்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடூரமான சம்பவங்கள் எல்லாம் நடைபெறக்கூடாது என்ற அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, அவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே அங்கே விதைக்கிழங்குகூட போட முடியாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எல்லா வகையிலும் நிவாரணம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று வேண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், குண்டுப்பட்டி கிராமத்தில் விடுதலை நகர், பாரதி நகர்—பி காலனி ஆகிய இடங்களில் கடந்த மாதம் 26 ஆம் தேதி நடைபெற்றச் சம்பவம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே உயரதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்து, அந்தக் குழுவும் சம்பவ இடத்திற்குச் சென்று வந்திருக்கிறது. வழக்கு விசாரணை சி.பி.சி.ஐ.டி. பிரிவிற்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியின்



1998 ஏப்ரல் 2] [திரு. நா. பெரியசாமி]

தலைமையிலே விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பல துரிதமான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த விடுதலை நகர், பாரதி நகர்—பி காலனியில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருந்த போதிலும், அந்தக் கிராமத்திலே இன்னமும் அச்சமும் பயமும் தொடர்ந்து நீடித்து வருவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலமாக அடிப்படை வசதிகள், குறிப்பாக சாலை வசதி இல்லாமல், இணைப்புச் சாலை வசதி இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டு வருவது பற்றி அவர்கள் தொடர்ந்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலேகூட தேர்தல் புறக்கணிப்பு செய்வது என்று 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே முடிவு எடுத்திருக்கிறார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில், அரசு நிர்வாகம் அந்தக் கோரிக்கையின்மீது என்ன முறையான நடவடிக்கையை மேற்கொண்டது என்பது பற்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. இதுபோன்ற அடிப்படையான, சாதாரண கோரிக்கைகளான சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவை மீது உரிய காலத்திலே நடவடிக்கை எடுக்காத காரணத்தால்தான் இப்படிப்பட்ட தேர்தல் புறக்கணிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு மக்கள் ஆளாகியிருக்கிறார்கள்.

இதிலே சில கருத்து வேறுபாடுகள் வந்திருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பவம் நடந்த இடத்திற்கு இரண்டு நாட்கள் கழித்துச் சென்று, விசாரித்து, முதல் தகவல் அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சம்பவம் நடந்த இடத்திலே ஏறத்தாழ 43.57 இலட்சம் ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கவனம் செலுத்தி அக்கறையோடு நடவடிக்கை எடுத்து வந்திருந்தாலும், மேலும் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, ஒரேயொரு யோசனையை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

ஏற்கெனவே நீதிபதி வேணுகோபால் அவர்களுடைய கமிஷன் அறிக்கையில் இதுபோன்ற பிரச்னைகள் பற்றி சில வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலேயும் அரசு கவனம் செலுத்த

[திரு. நா. பெரியசாமி] [1998 ஏப்ரல் 2

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கிருந்த மக்களின் தேர்தல் புறக்கணிப்பு நிகழ்ச்சியிலிருந்து அவர்களை விடுவிப்பதில் காவல்துறை மேற்கொண்ட அணுகுமுறை தவறாகப் போயிருக்கிறது. அந்தப் பிரச்சினையையும் பரிசீலித்து அவர்கள்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை, காவல்துறை அதிகாரிகள், அங்குள்ள மக்கள் பிரதிநிதிகள், வருவாய்த் துறை அதிகாரிகள் போன்றவர்களை வைத்து ஒரு சுமூகமான முறையிலே வாபஸ் பெறுகின்ற அடிப்படையிலே செயல்படவேண்டும். வழக்குகள் நீடிக்கக் கூடாது. அப்படி நீடித்துச் செல்லுமேயானால், அங்கிருக்கின்ற பகைமை உணர்வு தொடர்ந்து நீடித்துச் செல்லும். எனவே, வழக்குகள் நீடிக்காமல் இருக்கின்ற அளவுக்கு அந்தப் பகுதியிலே ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அவர்களுடைய கவனத்தை ஈர்த்து விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக கொடைக்கானல் பகுதியைச் சேர்ந்த குண்டுப்பட்டி கிராமமும், அதன் சுற்றுப்புறத்திலுள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய அடிப்படை வசதிகளாகிய குடிநீர் வசதி, சாலை வசதி போன்றவற்றை அரசு செய்து தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, அவர்களுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமையைப் பின்பற்றி, 'நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலிலே, எங்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவு செய்யாத காரணத்தால், வாக்களிக்கச் செல்வதில்லை' என்று புறக்கணித்த நேரத்தில், 'நீங்கள் ஜனநாயகக் கடமையைச் செய்ய வேண்டும். உங்களுடைய கோரிக்கைகளெல்லாம் நிறைவு செய்வதற்கு ஆவன செய்வோம்' என்கின்ற நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒன்றியப் பெருந்தலைவரும், மற்ற தலைவர்களும் சென்று அந்த மக்களைச் சமாதானப்படுத்தி, அவர்கள் நாடாளுமன்றத்திற்கு நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும், அவர்களுடைய ஜனநாயகக் கடமையைச் செய்ய வைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு சென்ற நேரத்தில், அவர்களைச் சிறைப்படுத்தி வைத்துக் கொண்டதாகவும், அவர்களை மீட்பதற்காகச் சென்ற காவல்துறையினரையும் சிறைப்படுத்தியதாகவும் பத்திரிகைகளிலே செய்திகள் வந்தன. அந்த நிலையிலே சிறைப்பிடிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக காவல் துறையினர் சென்ற நேரத்தில், பொதுமக்களுக்கும் காவல் துறையினருக்கும் சில சச்சரவுகள் ஏற்பட்டு, விரும்பத்தகாத சில செய்கைகள் நடந்தன. அவர்களுடைய வீடுகளெல்லாம் அடித்து



1998 ஏப்ரல் 2] [திரு. லா. சந்தானம்]

நொறுக்கப்பட்டன. அதன் மூலமாக அந்த மக்கள் பல்வகைத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்கின்ற செய்தியை அறிந்தவுடன், நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் உண்மை நிலையை அறிய வேணடும் என்கின்ற நோக்கத்தோடு ஒரு விசாரணைக் குழுவை ஏற்படுத்தி, சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டதோடு, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணக்கும் அனுமதி வழங்கினார்கள். விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது. உண்மை நிலை எப்படியாக இருந்தாலும், அங்கிருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்கள் பல ஆண்டு காலமாக அவர்களுக்குச் சாலை வசதி வேண்டும்; அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அவர்களுக்கு அந்த வசதி மிகவும் அவசியம் என்கின்ற நோக்கத்தோடு கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்று சொன்னால், அது அவர்களுடைய உரிமை என்ற நிலையிலே இந்த அரசு அதையெல்லாம் பரிவோடு பரிசீலனை செய்து அவர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து தருவதோடு, அடித்து நொறுக்கப்பட்ட வீடுகள், பாதிக்கப்பட்ட மக்களுடைய உடைமைகள், சொத்துக்கள் ஆகியவற்றுக்குரிய நிவாரணத் தொகையை நமது கருணையுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் வழங்க வேண்டும். மேலும் அவர்கள் மீது போட்டிருக்கின்ற வழக்குகளையும், மனிதாபிமான அடிப்படையில் வாபஸ் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு செய்து தர முன்வர வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

முற்பகல் *11-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டு காலமாக நடைபெறுகின்ற இந்த ஆட்சியில் சில கோரிக்கைகள் நிறைவேற வேண்டுமென்பதற்காகவும், அது நிறைவேறப் போகிறது என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டுள்ள காரணத்தினாலோ, என்னவோ, அந்தக் கோரிக்கைகளுக்காக மறியல், சாலை மறியல், ஆர்ப்பாட்டம், போராட்டம் போன்ற கிளர்ச்சிகள் நடப்பது வாடிக்கையாகிவிட்டிருக் கிறது. கறக்கிற மாட்டைத்தான் மேலும், மேலும் தொந்தரவு செய்வார்கள் என்பதைப் போல, கேட்டதைக் கொடுக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்ற காரணத்தால், தங்களுடைய கோரிக்கைகள், உடனடியாக, சொன்னவுடனே நிறைவேற வேண்டும் என்ற ஆதங்கத்தோடு, எதிர்பார்ப்போடு கோரிக்கைகளை வைத்து, அதற்கான

போராட்டங்களிலே ஒரு சில பகுதிகளிலே உள்ளவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களிலே மக்கள் பிரதிநிதிகளும் இதற்கு விலக்கல்ல. அவர்களும்கூட, கோரிக்கைகள் நாளைக்கு நிறைவேறப் போகின்றன என்றால், முதல் நாளே ஒரு போராட்டத்தை நடத்தி தங்களுடைய முயற்சியினால்தான் இந்தக் கோரிக்கை நிறைவேறுகிறது என்று எடுத்துக்காட்டுகின்ற திறமையைப் பெற்றிருக்கிறார்கள். இந்தத் திறமையை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், அரசுக்கு எதிராக, வேண்டுமென்றே அரசின்மீது பழி சுமத்துகின்ற அளவிற்கு, அந்தத் திறமை பயன்பட்டுவிடக் கூடாது என்பதை மிகுந்த பணிவன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று இந்தக் குண்டுப்பட்டி பிரச்சினையில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. நா. பெரியசாமி அவர்களும். திரு. சந்தானம் அவர்களும் எடுத்துக்கூறிய இந்தக் கருத்துகளின் அடிப்படையில் ஒரு சில விளக்கங்களை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சந்தானம் அவர்கள் பேசும்போது, அங்கே ஆரம்பத்திலே என்ன நடைபெற்றது என்ற செய்திகளை, பத்திரிகைகளிலே வெளிவந்ததை அப்படியே எடுத்துக் கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் சில கிராமங்களுக்கு அத்தியாவசிய அல்லது அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்றும், குறிப்பாகவும், சிறப்பாகவும் சாலை வசதி உடனடியாகச் செய்து தரப்பட வேண்டுமென்றும் எண்ணி, அந்தக் கோரிக்கைகளை முன்வைத்து, அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் — பெரும்பாலும் இலங்கை அகதிகளாக வந்து வசித்துக் கொண்டிருக்கிறவர்கள் — ஒரு குரலை எழுப்பினார்கள். அதுதான் அரசுக்கோ அல்லது தேர்தலுக்கோ எதிர்ப்பான குரல் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய குரல் ஆகும். அவர்கள் இவ்வாறு மனம் புண்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, அந்தப் பகுதியிலேயுள்ள ஒன்றியத் தலைவர் திரு. வடிவேலு அவர்கள், அவர்களைச் சமாதானப்படுத்தி, இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லவும், 'நபார்டு' மூலம் இந்தச் சாலை வசதிகளைச் செய்து, சீர்திருத்துவதற்கான பணம் கோரப்பட்டு, அதற்கான பணமும் கிடைத்திருக்கிறது என்ற செய்தியை சொல்வதற்காகவும் சென்றிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால்



2.63 இலட்சம் ரூபாய்க்கு டெண்டரும் விடப்பட்டிருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு, இந்தச் செய்திகள் எல்லாம்—டெண்டர் நிலையிலே இருக்கிறது, விரைவிலே சாலைகள் அமைக்கப்படும் என்ற நிலை இருந்தும்கூட, இவை—எல்லாம் இல்லை என்பது போன்ற ஒரு கற்பனை உலகத்திலே, தெரிந்தோ, தெரியாமலோ அல்லது அவர்களுக்கு முறையாக அறிவிக்கப்படாத காரணத்தினாலோ, சஞ்சரித்துக் கொண்டிருந்த அந்த மக்கள் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று கூறியவுடன், ஒன்றியத்தினுடைய தலைவர் என்கின்ற முறையிலே, கழகத்தினுடைய ஒன்றியச் செயலாளர் என்ற முறையிலே, அவர்களிடத்திலே சென்று நிலைமையை எடுத்துக்கூறி, விளக்கி, அவர்கள் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளச் சென்றிருக்கிறார்.

*முற்பகல் 11-05*

தேர்தல் நேரத்திலே வாக்குக் கேட்கச் செல்ல எல்லாக் கட்சியிலே உள்ளவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமையின் அடிப்படையில் சென்றிருக்கிறார். சென்றவருடைய விளக்கங்களை அவர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளாமல், அவரை அங்கே பிடித்து வைத்துவிட்டார்கள் என்றும், அந்தச் செய்தி காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு—அவர்கள் கழக ஒன்றியச் செயலாளர் என்பது மாத்திரமல்ல; ஒன்றியத்தினுடைய தலைவரும்கூட—அவரை மீட்பதற்காக அங்கே சென்றபோது. மீட்கச் சென்ற காவலர்களும் அங்கே பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் செய்திகள் வந்தன. அதைத் தொடர்ந்து காவலர்கள் அங்கே சென்று, அங்குள்ள வீடுகளில் புகுந்து, சற்று வன்முறை மிகுந்திருக்கக்கூடிய அளவிற்குச் செயல்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, வீடுகளிலேயுள்ள பண்டம், பாத்திரங்களெல்லாம் சேதமுற்றன; சில பேர் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள் என்ற செய்திகளெல்லாம் வெளிவந்தன. இந்தச் செய்தி வந்தவுடன், உடனடியாக நான் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை அந்தப் பகுதிக்கு அனுப்பி, விசாரணை செய்து, உடனடியாகத் தகவலை எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதிகாரிகள் குழு அங்கே சென்று, அவர்களையெல்லாம் பார்த்து, அவர்கள் சென்று நடத்திய அந்த விசாரணையினுடைய குறிப்புகளையெல்லாம் எனக்குத் தந்தார்கள். அங்கே, மாவட்டத்திலுள்ள அதிகாரிகளிடையேகூட இருவேறு கருத்துக்கள் அந்த நிகழ்ச்சியைப் பற்றி இருந்த காரணத்தால், நீதி விசாரணைக்கு உடனடியாக, நம்முடைய நண்பர் பெரியசாமி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல ஏற்பாடு செய்து, நீதி விசாரணையும் தொடங்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், சி.பி.,சி.ஐ.டி. விசாரணைக்கு இந்த நிகழ்ச்சி விடப்பட்டு, உண்மை உடனடியாகக்

கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கின்றது. இதிலே இலட்சக்கணக்கான ரூபாய், பல இலட்சக்கணக்கான ரூபாயெல்லாம் பறிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். சிலபேர் இருபதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய் களவு போய்விட்டது என்று தெரிவித்திருக் கிறார்கள். ஒரு சிலர், 150 ரூபாய், 180 ரூபாய் களவு போயிருக்கிற தகவலைத் தந்திருக்கிறார்கள். நான் இதிலேயுள்ள ஏற்றதாழ்வுகளையோ, மாறுபாடான கருத்துக்களையோ பெரிதுபடுத்த விரும்பவில்லை. அவர்கள் செய்ததும் தவறு. ஆனால், தவறைக் கண்டிப்பதற்காகச் சென்ற காவல் துறையினர் அப்படி நடந்து கொண்டிருந்தால், அதுவும் அதைவிடப் பெரிய தவறு. ஏனென்றால், சட்டவிரோதமாக ஒருவர் நடந்துகொள்ளும்போது சட்டப்படிதான் நாம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமேயல்லாமல், சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளை யார் எடுத்தாலும், அவர்கள் காவல் துறையில் உள்ளவர்களாக இருந்தாலும், அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, நீதி விசாரணை முடிவுற்று, உண்மையிலேயே எவ்வளவு இழப்பீடு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தர வேண்டுமென்று சொல்லும்போது, அந்த நிதி- Compensation - அவர்களுக்கு வழங்கப்படும் என்றாலும்கூட, இப்பொழுது இடைக்கால நிவாரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்த வீடுகளுக்குத் தருவதற்கு, ஐந்து இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர்கள், நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள், ஜி.கே. மணி அவர்கள், பெரியசாமி அவர்கள், சந்தானம் அவர்கள் ஆகியோர் குறிப்பிட்டதைப்போல அனுதாப உணர்வோடு இந்த அரசு அணுகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். திரும்பப் பெற்ற பிறகு அவர்கள் நன்றி பாராட்டுகிறார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. எத்தனையோ பேர்களுடைய வழக்குகளை நாலாயிரம், ஐந்தாயிரம் பேர்களுடைய வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்ற ஆட்சிதான் இது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் கிடைத்த பரிசையும் பெற்றுக்கொண்ட ஆட்சிதான் இது. ஆகவே, “நன்றி எதிர்பாராமல் கடமையாற்றுவோம்” என்று சொன்ன பெரியாருடைய வழியிலே நின்று, இந்த அரசு நடைபோடும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் அமைகின்றேன், வணக்கம்.





## (ஆ) ஒட்டப்பிடாரம் மெக்கவாய் பள்ளியின் நிர்வாகி பள்ளி மாணவிகளிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, ஒட்டப்பிடாரம் மெக்கவாய் பள்ளியின் இயக்குநர், பள்ளி மாணவிகளிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. டி. மணி ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள். முதலில், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.*

*முற்பகல் 11-10*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் அமைந்துள்ள டி.எம்.பி. மெக்கவாய் பள்ளி, அரசு உதவியோடும், அந்நிய நிறுவனங்கள் உதவியோடும் நடந்து வருகிற ஒரு பள்ளி. அந்தப் பள்ளிக்கு, இப்போதுதான் மேல்நிலைப் பள்ளி அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. அந்தப் பள்ளியினுடைய நிர்வாகி, ஏ. கோவில்பிள்ளை ஆவார்கள். அவருடைய புதல்வர் பீட்டர் என்பவர், கடந்த பல ஆண்டுகளாக அந்தப் பள்ளியில் பயிலுகின்ற, அந்தப் பள்ளியின் வளாகத்திற்குள்ளே, விடுதியிலே தங்கிப் பயிலுகின்ற, அனைத்து ஏழையெளிய மாணவிகளிடத்திலே முறைகேடாக நடந்துவரக் கூடிய நிகழ்ச்சி, பல்வேறு பத்திரிகைகளிலே செய்தியாக வெளிவந்திருக்கிறது. இப்படி ஏழையெளிய மாணவிகளிடத்திலே—தவறாக நடந்த அந்த நிர்வாகத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏழ்மையின் காரணமாக, அங்கே பயிலுகின்ற அந்த மாணவிகளிடத்திலே ஒரு மாணவி அல்ல; ஏறைக்குறைய 20 அல்லது 30க்கும் மேற்பட்ட மாணவிகளிடத்திலே—முறைகேடாக நடந்ததன் காரணமாக, கடந்த நான்கைந்து ஆண்டு காலத்திலே, அவர்கள் பள்ளியை விட்டே செல்லக்கூடிய அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும்கூட, அபாயகரமான, அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி என்னவென்றால், பல மாணவிகள் கருவுற்று அதைச் சிதைத்ததனுடைய காரணமாக, உயிரிழந்ததாகவெல்லாம் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்த உண்மை நிலையை எல்லாம் கண்டு அறியவேண்டும். அந்தக் கொடுமையான குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனை கொடுக்கப்பட வேண்டும். இப்படி மாணவிகளிடத்திலே, தவறாக நடந்து கொண்ட அந்தப் பள்ளிக்கு அங்கீகாரத்தை இரத்து செய்ய வேண்டும். எப்படி பிரேமானந்தா, அவருடைய ஆசிரமத்திலே, முறைகேடாக பெண்களிடத்திலே நடந்து

கொண்டாரோ, அதேபோல நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்தப் பள்ளி நிர்வாகத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சரியான அதிகாரிகளை அதற்காக நியமித்து, தக்க விசாரணை மேற்கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், இந்தப் பள்ளியை உடனடியாக அரசே மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம், மெக்கவாய் பள்ளி என்பது ஒரு மேல்நிலைப் பள்ளி. அந்தப் பள்ளியினுடைய நிர்வாகி, மாணவிகளிடத்திலே நடந்து கொண்ட முறைகேடான அந்த நடவடிக்கைகள் கண்டிக்கப்படத்தக்கவை. கண்டிக்கப்படத்தக்கது மட்டுமல்ல; கடுமையான ஒரு நடவடிக்கைக்கு அவர்கள் ஆளாக்கப்பட வேண்டும். இது சில வருடங்களாக நடந்து வருகின்ற பிரச்சினையாக, பத்திரிகையிலே, செய்தியாக வெளிவந்துள்ளது. எனவே, அந்தப் பள்ளியினுடைய நிர்வாகிகள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதோடு, நிர்வாகத்தின் கையிலிருந்து அந்தப் பள்ளியை எடுத்து அரசினுடைய கட்டுப்பாட்டிலே கொண்டு வருவதுதான், இந்தத் தருணத்தில் நியாயமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, அந்த அடிப்படையில், சீர்கேடான, முறைகேடான, மிகத் தவறான நடவடிக்கை மேற்கொண்ட அந்த நிர்வாகிகள்மீது அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சவர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே உள்ள குறிப்பை, இங்கே நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. மணி அவர்களும் கொண்டு வந்துள்ள இந்தப் பிரேரணையின்மீது, வழங்க விரும்புகிறேன். தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் கிராமத்தில் நடந்துவரும் டிஎம்.பி. மெக்க வாய் உயர்நிலைப் பள்ளி, தனியார் நிர்வாகப் பள்ளி. இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்துவரும் பள்ளி நிர்வாகி திரு. கோவில்பிள்ளை என்பவருடைய மகன் பீட்டர் என்பவர், பள்ளி விடுதி மாணவிகளைக் கற்பழித்துவிட்டதாக, வார இதழ் ஒன்றில் ஒரு செய்தி வந்துள்ளது. இந்தச் செய்தியைத் தொடர்ந்து, 'புதிய தமிழகம்' கட்சியைச் சார்ந்த சுமார் 100 பேர், பீட்டர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி,



22-3-1998ஆம் நாள், ஒட்டப்பிடாரம், தேரடித் தெருவில் ஆர்ப்பாட்டம் நடத்தியதன்பேரில், கோவில்பட்டி வருவாய்க் கோட்ட ஆட்சியர், அந்தக் கிராமத்திற்குச் சென்று, இரகசியமாக விசாரணை செய்து 'அளித்துள்ள அறிக்கையில், பத்திரிகைச் செய்தியிலே குறிப்பிடப்பட்டுள்ள கற்பழிப்புச் சம்பவங்கள் நடந்ததற்கான ஆதாரம், சாட்சியம், சம்பவ இடம், நாள், நேரம், இன்னலுக்குட்பட்ட மாணவியின் பெயர், முகவரி எதுவுமில்லாத நிலையில் அப்படிப்பட்ட சம்பவம் நடந்துள்ளதா என்பது குறித்து அறுதியிட்டுத் தன்னால் தீர்மானிக்க இயலவில்லை என்றும், பாதிக்கப்பட்டவர்கள் யாரும் காவல் துறைக்கோ, முதன்மைக் கல்வி அலுவலருக்கோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், மேற்காணும் சம்பவம் குறித்த உண்மை நிலையைக் காவல் துறை இரகசிய விசாரணையின் மூலம்தான் அறிந்துகொள்ள முடியும் என்றும் தெரிவித்துளளார்.

முற்பகல் 11-15

இதைத் தொடர்ந்து அதற்குப் பிறகு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அதை விசாரிக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பள்ளிக்கு 26-3-1998 அன்று மாவட்ட வருவாய் அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் ஆகியோரோடு நேரில் சென்று மாணவ. மாணவிகளைச் சந்தித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அப்போது விடுதியிலிருந்த எந்த மாணவியும், எந்தப் புகாரும் கொடுக்க முன்வரவில்லை. புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த சிலர் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினர். மாணவிகள் எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் காவல் துறையில் புகார் கொடுக்கலாம் என்றும், எவரேனும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவந்தால் குற்றவாளிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். இந்தப் பள்ளியின் விடுதியில் சிறிது காலமாகக் காப்பாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி ஆர். மாரியம்மாள் என்பவர் மாத்திரம், அந்தப் பள்ளி நிர்வாகியினுடைய மகன் தன்னைப் பாலியல் பலாத்காரம் செய்ய எத்தனித்ததாகவும், ஆனால் அவனுடைய முயற்சி நிறைவேறவில்லை என்றும் தனது புகார் மனுவில் தெரிவித்திருக்கிறார். அந்த மனுவைக், காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்துள்ளார். அந்தப் பள்ளியின் நிர்வாகி சில புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளதாக வந்துள்ள புகாரின்மீது, வருவாய்க் கோட்டாட்சியரை உடனடியாக விதிமுறைப்படி நடவடிக்கை

மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

திருமதி மாரியம்மாளின் புகார் மனுத் தொடர்பாக ஒட்டப்பிடாரம் காவல் நிலையக் குற்ற எண் 60/98 இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 345 மற்றும் 506(2)-ன்படி குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கு காவல் துறையின் புலன் விசாரணையில் உள்ளது. மேற்கொண்டு, டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், மற்றவர்களும் கூறியுள்ள இந்தப் புகார் பற்றி தொடர்ந்து மேலும் விசாரிக்கப்படும். நம்முடைய திரு. டி.மணி அவர்களும் நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவை எல்லாம் உடனடியாகச் செய்யக்கூடிய காரியங்களா என்பதையும் எண்ணிப் பார்த்து, இந்தப் புகார் பற்றியும் தீவிர விசாரணை நடைபெறும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

## (இ) விருதுநகரில் காவல் துறையினரின் குடும்பத்தினர் சாலைமறியலில் ஈடுபட்டது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, விருதுநகரில் காவல் துறையினரின் குடும்பத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டது குறித்து திரு. இரா. தாமரைக்கனி, திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமும், திரு. ஐ. கணேசன் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. கே. சுப்பராயன், திரு. நா. பெரியசாமி, திரு. லா. சந்தானம் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பும் எடுத்துக் கொள்ள அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு கட்சிக்கு ஒருவர் வீதம் என்ற அடிப்படையில் முதலில் திரு. தாமரைக்கனி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

முற்பகல் 11-20

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் 1-3-1998 ஆம் தேதி காவல் துறையினரின் குடும்பத்தினர் மதுரை-கன்னியாகுமரி சாலையில் தங்களது 10 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி சாலை மறியல் செய்தனர். ரோட்டில் கற்களைப் போட்டு சாலை மறியல் செய்தனர். அது சுமார் 2 மணி நேரம் நடந்தது. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு. திருபாதி அவர்கள் அவர்களை சமாதனப்படுத்தியும், முடியவில்லை. அதற்குப் பிறகு ஐஜி., டி-ஐஜி. போன்றவர்கள் வந்து வெகுநேரம் கழித்துத்தான் அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்கள். அவர்களுடைய



கோரிக்கை, இடைநிலை ஆசிரியர்களுக்கு இணையான சம்பளம் காவலர்களுக்கு வழங்க வேண்டும்; 10 ஆண்டுகள் பணிபுரிந்த ரிசர்வ் போலீசாரை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவிற்கு மாறுதல் செய்ய வேண்டும்; பதவி உயர்வே கிடையாது, அப்படி பதவி உயர்வு கொடுத்தாலும் உடனே பதவி இறக்கம் செய்துவிடுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் காவலர்கள் மருத்துவ விடுப்பு எடுத்தால் சம்பளத்தில் பிடித்தம் செய்கிறார்கள். போலீசிலே சங்கம் அமைத்துக்கொள்வதற்கு அனுமதி தரவேண்டும்; காவலர்கள் பணிபுரியும் அந்தந்த மாவட்டங்களில் அனைத்துப் பேருந்துகளிலும் இலவசமாகச் செல்ல அனுமதிக்க வேண்டும்; காவலர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை 7 ஆண்டுகள் ஆகியும் வழங்கப்படவில்லை; அரசுப் பணியாளர்கள் இறந்துவிட்டால் அவர்களின் வாரிசுகளுக்கு இரண்டு ஆண்டுகளில் வேலை வழங்கப்படுவதுபோல் காவலர்களுடைய வாரிசுகளுக்கும் வழங்க வேண்டும், காவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை வைத்து குழந்தைகளைப் படிக்க வைக்க முடியவில்லை என்று அந்தப் பெண்கள் கவலையோடு, பாவம் நடுரோட்டிலே அதிகாரிகளிடம் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, போலீஸ் காலனிகளுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை என்று சொல்கிறார்கள். இது குறித்து நேற்றைய தினம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தால் பிரச்சினை இல்லாமல் இருந்திருக்கும். நேற்றும் அந்தப் பகுதியிலுள்ள காவல் துறையினருடைய குடும்பத்தினர் சாலை மறியல் செய்திருக்கிறார்கள். கலெக்டர், எஸ்.பி. ஆகியோர் சென்று பார்த்திருக்கிறார்கள். போராட்டம் அங்கே தீவிரமடைந்து இருக்கிறது. ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் போராட்டம் நடத்தக்கூடாது, அமைதியாக இருங்கள் என்று ஐஜி. விஜயகுமார் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே எங்களது மாவட்டத்தில் சாதிக் கலவரம், மதக் கலவரம் உள்ள காரணத்தால், பதட்ட நிலை தணியவேண்டும். பதட்ட நிலையைப் போக்குவதற்காக, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தினர் நடுத்தெருவிலே நிற்கிற அளவில் போராட்டம் நடத்துகிறார்கள். இந்நிலை மற்ற மாவட்டங்களுக்கும் பரவக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில்தான், இது மிகவும் அவசியம், இந்தத் தீர்மானத்தை உடனே எடுக்க வேண்டுமென்று சொன்னேன். இருந்தாலும் பரவாயில்லை. அங்கே ஐஜி. அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், "அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறேன், என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள

இரண்டு கோரிக்கைகளை நான் நிறைவேற்றி விடுகிறேன், முதலமைச்சரிடமிருந்து நல்ல பதில் வரும், அதுவரை காத்திருங்கள்" என்று காவல் துறை குடும்பத்தினரிடம், பெண்களிடம் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையினரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் இவ்வாறு போராட்டம் நடத்திவிட்டார்களே என்று ஆதங்கப்பட்டு, காவல் துறையினர்மீது பழிவாங்குகின்ற உணர்வு இல்லாமல்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரச்சினையைப்பற்றிச் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும். நீண்ட விவாதம் வேண்டாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் கேட்கின்ற சலுகைகளை நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இத்தகைய போராட்டங்கள் மற்ற மாவட்டங்களுக்குப் பரவாமல் இருப்பதற்கு, தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் சங்கம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த சில காலமாக சாலை மறியல் போன்ற செயல்களில் அவர்களது குடும்பத்தினர் ஈடுபடுவது, மிகுந்த, ஆழ்ந்த கவலைக்கிடமான சம்பவமாகும். இந்த நாட்டில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டக் கூடியவர்களே, சட்டத்திற்குப் புறம்பான செயல்களைக் கையில் எடுத்துக்கொள்வது என்று சொன்னால், அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். பல அரசு ஊழியர்கள் தங்கள் சங்கங்கள் வாயிலாக பல போராட்டங்களை நடத்தி, அவர்களுக்கு உரிய சலுகைகளை மிகவும் சுலபமாகப் பெற்றுவிடுகிறார்கள். நமக்கு அந்த வாய்ப்பு இல்லையே, சம்பள உயர்வு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தில் அவர்கள் கடமையை ஒழுங்காகச் செய்யாமல், குறுக்கு வழியிலே இதுபோன்ற நிலைகளை உண்டாக்கி தங்களுடைய முறையான கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி செய்கிறார்கள்.

காவலர்களுக்கு மற்ற துறைகளில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் முறையான சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்பது நியாயமான கோரிக்கை. இதுபோன்ற அடிப்படைப்



பிரச்சினைகளை இந்த அரசு ஆய்ந்து அறிந்து அவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் அவர்களுடைய போராட்டத்தை நம்மால் தடுக்க முடியும். பொதுவாக அவர்களுக்குச் சம்பளம் முறையாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால்தான் கிம்பளத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. சம்பளத்தை முறையாக வழங்கினால் அவர்கள் கிம்பளத்தை எதிர்பார்க்க மாட்டார்கள், இதுபோன்ற பிரச்சினைகளில் ஈடுபட மாட்டார்கள் என்ற நிலை இருக்கிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கோவையில் நடந்த துப்பாக்கிச் சூடு போன்றவைகள் காவல் துறையினரின் குடும்பத்தினர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக, அந்த அளவுக்கு படு பயங்கரமாக ஏற்பட்டன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இது குறித்து அரசு ஆழ்ந்து கவனித்து முறையான நடவடிக்கை எடுத்து, பிரச்சினை மீண்டும் தலைதூக்காவண்ணம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

*முற்பகல் 11-25*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும், அவர்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் இரண்டாம் முறையாக சாலை மறியலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். போலீஸ் இலாக்காவை கையிலே வைத்து இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக என்ன செய்யப் போகிறார்கள் என்பதை நாடு அறிய மிக ஆவலாக இருக்கிறது.

விருதுநகர் மாவட்ட போலீஸ் குடியிருப்புகளில் உள்ள பெண்கள் மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள அரசு தொழிற்பேட்டைக்கு அருகே ரோட்டிலே கற்களைப் போட்டு பஸ் மறியல் செய்து, அந்த வழியாக வந்த வேன்களினுடைய கண்ணாடிகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. இதைக் கேள்விப்பட்ட மாவட்ட உயர் போலீஸ் அதிகாரி வந்து எவ்வளவோ சமாதானப்படுத்தியும் அந்தப் பெண்கள் நகர மறுத்திருக்கின்றார்கள். எங்களுடைய 10 அம்சக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றும், உடனடியாக நிறைவேற்றினால்தான் நாங்கள் வழி விடுவோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். போலீஸ் துறையினுடைய ஐ.ஜி. திரு. விஜயகுமார் வந்து எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்

அவர்கள் அதைக் கேட்காமல் இருந்திருக்கின்றார்கள். பிறகு சமாதானம் அடைந்து சென்றிருக்கின்றார்கள். ஆசிரியர்களுக்கு இணையான சம்பளம் போலீசுக்கு வழங்க வேண்டும்; அதைப்போல போலீஸ் குடியிருப்புக்கு பஸ் வசதி செய்ய வேண்டும்; போலீசார் சங்கம் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும், போலீசார் மருத்துவ விடுப்பு எடுத்தால் சம்பளம் பிடித்துக்கொள்ளக் கூடாது போன்ற அடிப்படை வசதிகளுக்காக இந்தச் சாலை மறியல் நடந்திருக்கிறது. போலீசார் குடும்பமே சாலை மறியல் செய்ததனால், காவல்துறையின் மரியாதை காயப்பட்டுள்ளது என்பதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகரிலே காவல்துறையினரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சாலை மறியல் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கின்ற சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் சில தகவல்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் காவல் துறையினருக்குப் பல்வேறு சலுகைகளை, அதாவது பணி உயர்வு, ஊதிய விகிதம் உட்பட பல கோரிக்கைகளை மாற்றியமைத்த அரசின் நடவடிக்கைகளை அனைவரும் அறிவார்கள். சாலை வசதிக்காக, சாலை மறியல் நடத்துகிறார்கள், குடிதண்ணீருக்காகக் குடங்களை வைத்து சாலை மறியல் நடத்துகிறார்கள். அந்தப் போராட்டங்களையும் இந்தப் போராட்டத்தையும் ஒன்றாக ஒப்பிட முடியாது என்றாலும் காவல் துறையினரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நடுரோட்டில் கற்களைப் போட்டு தேசிய நெடுஞ்சாலையை இரண்டு மணி நேரத்திற்கு மேலாக மறித்திருக்கின்றார்கள். உயர் அதிகாரிகள் வந்து பேச்சு வார்த்தை நடத்தியும்கூட, அவர்கள் அழைத்த இடத்திற்கு பேச்சு வார்த்தைக்குப் போகாமல், இவர்கள் இடத்திற்கு உயர் அதிகாரிகள் வரவேண்டும் என்று நிர்பந்தம் செய்திருக்கின்றார்கள் என்ற தகவல்களையெல்லாம் நாம் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். நான் ஒன்றை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த இரண்டு ஆண்டு காலமாகவே, இந்த ஆட்சியினுடைய சரியான செயல்பாட்டிற்கு, ஒரு திறமையான செயல்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய முனைப்பான முயற்சிகள் அரசியல் அரங்கில் மட்டுமல்ல, இந்த அரங்கிலும் இருக்கின்றது என்பதை இந்தச் சம்பவம் வெளிக்காட்டுவதாக இருக்கின்றது. உண்மையிலேயே காவல் துறை அலுவலர்களின், காவல்துறையினரின்





நியாயமான கோரிக்கைகள் அதாவது சங்கம் அமைக்கின்ற கோரிக்கைகள் அல்லது ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் என்ற கோரிக்கைகள் எல்லாம் அரசு மட்டத்திலே, கொள்கை ரீதியாகப் பேசித் தீர்வு காணவேண்டிய கோரிக்கைகள் ஆகும் என்பதை உணர்ந்து அரசோடு வாதாடக்கூடிய வழிமுறைகளைப்பற்றி யோசிப்பதற்கு அரசியல் ரீதியான விவாதமும் முடிவும் இருக்க வேண்டுமே தவிர, இப்படியான நிகழ்வுகள் வந்துவிடக்கூடாது. ஆனாலும் நடந்துவிட்ட இந்த நிகழ்வில் மனிதாபிமானத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அணுகவேண்டுமென்று வலியுறுத்தி அமருகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 31-3-1998-ம் நாள் விருதுநகர் காவலர் குடியிருப்பிலே வசித்து வருகின்ற காவலர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள், மனைவிமார்கள் தேசிய நெடுஞ்சாலையிலே வந்து காவலர்களுடைய ஊதிய உயர்வு, மருத்துவ விடுப்பு போன்ற கோரிக்கைகளையெல்லாம் வலியுறுத்தி மறியல் நடத்தினார்கள் என்றும் அவர்களைச் சமாதானம் செய்வதற்கு ஐஜி. போன்றவர்கள் எல்லாம் சென்றும் அந்த மறியல் பல மணி நேரத்திற்கு நீடித்தது என்றும் கேள்விப்படுகிறோம். காவலர்கள் நம்மையெல்லாம் காக்கின்ற கடமையைப் பெற்றிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் இந்த அரசு ஏற்று நிறைவாக நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் மக்கள் அறிவார்கள். இருந்தாலும், காவலர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், தங்கள் கணவன்மார்கள் அவர்களுடைய பணிக்குச் சென்று, சில சமயங்களில் இரவு பகல் என்று இல்லாமல் வீடுகளிலே தங்காது சென்றுவிடுகின்ற காரணத்தினால், அந்தக் குடும்பத்தைப் பராமரிக்கின்ற பொறுப்பு தங்களுக்கு இருக்கின்றது என்ற உணர்வோடு, காவலர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த முடியவில்லை என்கின்ற உணர்வோடு, இந்த மறியலிலே அவர்கள் ஈடுபட்டிருக்கலாம். மேலும், அதற்குப் பின்னணி கூட ஏதாவது இருக்கலாம் என்ற நிலை எல்லாம் இருக்கின்ற நேரத்தில், எது எப்படியாக இருந்தாலும், அந்தக் காவலர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து, நம்முடைய அரசால் எந்த அளவுக்குப் பரிகாரம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

[1998 ஏப்ரல் 2

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு இரண்டு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன. ஒன்று, குண்டுப்பட்டியில் அத்துமீறி நடந்து கொண்ட காவலர்களைப் பற்றியது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக, கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்ட தீர்மானம். அதுவும் விவாதிக்கப்பட்டது.

அடுத்தது, விருதுநகரிலே சாலை மறியலிலே ஈடுபடுத்தத் தங்களுடைய துணைவியர்களை அனுப்பி வைத்த காவலர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டுமென்ற மற்றொரு தீர்மானம். இதுதான் ஜனநாயகம். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டையும் விவாதிக்கிறோம் அல்லவா? இதற்குப் பெயர்தான் ஜனநாயகம்.

நம்முடைய தாமரைக்கனி அவர்கள் இங்கே பேசும்போது மென்மையாகத்தான் இருக்கும். 'பதட்ட நிலை காவலர்களே போராட ஆரம்பித்து விட்டார்கள்' என்ற இந்த வார்த்தைகள் எல்லாம் பத்திரிகைகளிலே வரும்போது, 'தமிழ்நாட்டிலே காவலர்கள் பதட்டம்' என்று வரும், சில பத்திரிகைகள் இருக்கின்றன; காவலர்கள் வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுகின்ற அளவுக்குக்கூட சில பத்திரிகைகள் இருக்கின்றன.

சமீபகால நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, சில மத்திய அமைச்சர்கள் பேசுகிறார்கள், "இந்த அரசை வீழ்த்த, வீட்டுக்கு அனுப்ப '356' தேவையில்லை, அதை நாங்கள் பிரயோகிக்கப் போவதில்லை, வேறு சில முறைகள் இருக்கின்றன இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு" என்று சொல்கிறார்கள். அந்த முறைகளிலே இது ஒன்று போலும். அப்படித்தான் நான் யூகிக்கின்றேன். காவலர்களை விருதுநகரிலே தூண்டிவிட்டவர்கள் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்கள். அந்த அரசியல் கட்சி இந்த மாமன்றத்தில் இடம் பெறவில்லை. அது எது என்பது திரு. தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். தெரிந்திருக்காவிட்டால், தனியாகக் கேட்டால், அவர்களிடத்தில் சொல்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஓர் அரசியல் கட்சி, காவலர்களுடைய இத்தகைய போராட்டத்தை விருதுநகரிலே மறைமுகமாக இருந்து தூண்டிவிட்டு, அவர்களுடைய அந்தப் போராட்டம் மாநிலத்தின் பல பகுதிகளிலேயும் பெருகி, அதன்



1998 ஏப்ரல் 2] [கலைஞர் மு. கருணாநிதி]

காரணமாக அரசுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று யாராவது கருதுவார்களேயானால், போலீசார் என்ற அளவிலே இருந்த போராட்டம் என்று இருக்காமல், கடைசியிலே 'யானையே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதுபோல' போலீஸ் துறையிலே இருந்து ஆரம்பிக்கின்ற போராட்டம் கடைசியிலே இராணுவம் வரை போனால் என்ன ஆகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இராணுவமானாலும், போலீஸ் துறையானாலும், அவர்களுக்கு என்று ஒரு கட்டுப்பாடு இருக்கிறது.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது, அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன், பட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற தலைவர் பேசும்போது, சாலை மறியல் செய்தார்கள் காவலர்களுடைய மனைவிமார்கள்; கற்களைப் போட்டு சாலையைத் தடுத்தார்கள்; பேருந்துகளுடைய கண்ணாடிகளை எல்லாம் உடைத்தார்கள் என்றெல்லாம் சொன்னார். யார்? காவலர்கள் வீட்டுப் பெண்மணிகள் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். சாலையிலே கற்களைப் போட்டுத் தடுத்தால், பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்தால், அப்படிச் செய்கின்ற சமூக விரோதிகளைப் பிடித்துக் கைது செய்து வழக்குப் போடவேண்டிய காவலர்களுடைய குடும்பத்தினரே பஸ்கள் மீது கற்களை வீசினார்கள்; சாலையின் குறுக்கே கற்களைப் போட்டுத் தடுத்தார்கள் என்ற நிலைமை வருமானால், இதையும் ஓர் அரசு பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால், அவ்வளவு கோழைத்தனமாக இந்த அரசை நடத்த நான் விரும்பவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை நாளைக்கு நான் ஆளுகிறேன் என்பதல்ல, எப்படி ஆட்சி நடத்தினேன் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முக்கியம் என்பதை ஒரு சுயமரியாதைக்காரன் என்ற முறையிலே, இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. தாமரைக்கனி, திரு. நிஜாமுதீன், திரு. கணேசன், திரு. பெரியசாமி, திரு. சந்தானம் ஆகியோர் எடுத்துரைத்த இந்தக் கருத்துக்கள் மிக ஆழமானவை; சிந்திக்கத்தக்கவை. பத்து கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற அதே ஊதியத்தை மாநில அரசினுடைய ஊழியர்களுக்கும் தருவேன் என்று ஏற்கெனவே நான் அறிவித்து, அதற்கென்று பல அரசு அலுவலர்களுடைய அமைப்புகளோடு இரண்டு, மூன்று நாட்கள், பல மணி நேரம் கலந்து பேசி, அவர்களும் திருப்தி அடைகின்ற அளவுக்கு, மறுப்புச் சொல்லாத அளவுக்கு,

ஏற்றுக்கொள்ளுகின்ற அளவுக்கு, அவர்கள் கேட்ட தேதியின்படி அவர்கள் கேட்ட சலுகைகளை எல்லாம் அறிவித்து, முரண்பாடுகள் இருந்தால் அவற்றை மூன்று மாத காலத்திற்குள்ளாகத் தீர்த்து வைக்க, ஒரு நபர் கமிஷன் ஒன்றும் நியமிக்கப்படும் என்று இதே அவையில் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபிறகும், அதிலே ஒரு போராட்டம் நடத்துகிற அளவுக்கு என்ன பிரச்சினை வந்தது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

*முற்பகல் 11-35*

தற்போதுள்ள 25 ஊதிய விகிதங்களுக்கு இணையாக மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்கப்படும் என்றும், மத்திய அரசால் வழங்கப்பட்ட 40 விழுக்காடு ஊதிய நிர்ணயப் பயன் மாநில அரசின் முழுநேர அலுவலர்கள், பகுதிநேர அலுவலர்கள் - சத்துணவுத் திட்டம் போன்றவற்றில் பணியாற்றுகிற - பகுதிநேர அலுவலர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் பொதுவாகத்தான் நான் அறிவித்திருக்கிறேனே அல்லாமல், ஒவ்வொருவருக்கும் இன்னின்ன ஊதிய உயர்வு என்று குறிப்பிட்டு அறிவிக்கப்படவில்லை. இதிலே காவலர்கள் யாரும் விடுபட்டுப் போய்விடவில்லை. அவர்களும் அரசு ஊழியர்கள் என்ற பட்டியலில்தான் சேர்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல, அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்ற ஒன்று உண்டு. அவர்கள் பணியாற்றுகின்ற நேரத்தில் வருகின்ற இடையூறுகளையும் கடந்து, அதைப்பற்றிக் கவலைப்படாமல் பணியாற்றுவதற்காகத் தரப்படுகின்ற இந்த ரிஸ்க் அலவன்ஸ் என்பதைக்கூட காவல் துறை மானியம் வரும்போது விவாதித்து, காவல் துறை உயர் அதிகாரிகளோடும், காவல் துறையினுடைய ஹோம் செக்ரடரி உள்-துறைச் செயலாளரோடும், தலைமைச் செயலாளரோடும் கலந்துபேசி, உயர்த்தித் தர வேண்டும் என்கின்ற ஓர் எண்ணத்தோடு இந்த அரசு இருக்கின்ற இந்த நேரத்தில், சில கோரிக்கைகளை வைத்து, உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் சாலை மறியல் என்று சொன்னால், இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

சாலை மறியல் நல்ல காரியங்களுக்காக நடைபெறும்போது அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், சாலை மறியலே, தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒரு நடவடிக்கை என்று ஆகிவிடுமேயானால் அதை அரசு பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. சாலை மறியல் யார் நடத்தினாலும் இனிமேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்து, நம்முடைய எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கின்ற தலைவர்கள்,



அவர்கள் இந்த ஆட்சிக்குத் தோழமையாக உள்ளவர்களாக இருந்தாலும் சரி அல்லது ஜனநாயக முறையில் எதிர்க்கட்சியாகச் செயல்பட்டாலும் சரி, அனைவருமே சிந்தித்து இதுபோன்ற சாலை மறியல்களால் நடக்கப்போவது என்ன, உட்கார்ந்து, கலந்து பேசி ஏன் பல பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடாது என்ற அறிவுரையை அவர்களுக்கெல்லாம் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே காவலர்களுடைய துறைக்காக நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது, அவர்களுக்கு எந்த, எந்த வகையிலே இந்த ஊதிய விகிதாச்சாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது, அவர்கள் அலட்சியப்படுத்தப் படவில்லை என்ற அந்த உண்மை நிலவரத்தை எல்லாம் இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்று கூறி, இந்த அளவிலே அமைகின்றேன்.

## 3. அறிவிப்பு

### மேதகு ஆளுநர் அவர்கள் 18-3-1998 அன்று அவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பெறப்பட்டது குறித்த ஆளுநரின் செய்தி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 29-3-1998 ஆம் நாளிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

"I have received with pleasure the resolution adopted by the Assembly on 23rd March, 1998 thanking me for my address delivered on 18th March 1998 to the Members of the Tamil Nadu Legislative Assembly."

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

முற்பகல் 11-40

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடந்து கொண்டிருக்கும் பொது விவாதத்தில் பங்குகொள்ள எனக்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கும் நமது தி.மு.க. அரசின் நோக்கம், நீர்த் தேவையைக் கோரும் எல்லாப் பகுதியினரும் பயன்பெறும் வகையில்,



1998 ஏப்ரல் 2] [திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்]

நில மேற்பரப்பு நீரையும் நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கிடு செய்து, அதன்மூலம் பொது மக்களுக்குத் தேவையான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் என்பதாகும். இந்த உன்னதமான குறிக்கோளை நோக்கி தமிழகம் வெகுவிரைவில் முன்னேறிச் செல்கிற இந்த வேளையில், அவினாசி என்னும் அத்திக்கடவு திட்டத்தை முழுக்க முழுக்க குடிநீர்த் திட்டமாகக் கருதி, ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களில் உள்ள மேட்டுப்பாளையம், அவினாசி, பவானிசாகர், திருப்பூர், கோபி, பெருந்துறை, காங்கேயம் ஆகிய 7 சட்டமன்றத் தொகுதிகளுக்குள் அடங்கிய காரமடை, அன்னூர், அவினாசி, பவானிசாகர், நம்பியூர், திருப்பூர் வடபகுதி, ஊத்துக்குளி, கோபி தென்பகுதி, பெருந்துறை, சென்னிமலை ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களின் வறட்சிப் பகுதிகளில் வாழும் ஏறத்தாழ 20 இலட்சம் மக்களுடைய நீண்ட நாளைய குடிநீர்த் தேவைகளைத் தீர்த்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் இப்பகுதி வாழ் மக்கள் சார்பாக என்னுடைய கோரிக்கையை வைத்து அதை நிறைவேற்றிக் கொடுக்கும் வகையில் முதல்கட்டப் பணியாக இந்தக் குடிநீர்த் திட்டத்தினை இவ்வாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள தமிழக அரசு முன்வந்துள்ளதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை]**

பாசனம். நீரின்றி அமையாது உலகு எனினும், அதனை வகைப்படுத்த ஆறின்றி இயலாது என உணர்ந்தார்; ஆறு கண்டார்; அதனாலே சோறு கண்டார் என்று வையகத்திற்கு உணர்த்திய ஒப்பற்றத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்களிடம் காங்கேயம் தொகுதிக்குட்பட்ட குண்டடம் ஒன்றியத்தில் உள்ள மிகவும் வறட்சிப் பகுதிகளான குறுக்கபாளையம், எல்லப்பாளையம் புதூர், புங்கன்துறை, செங்கோடன்பாளையம், சிறுகிணறு, பெருமாள்பாளையம், ஆரத்தொழுது, முதலிப்பாளையம் ஆகிய 8 ஊராட்சிகளுக்கு பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தினை விரிவுபடுத்தி பாசனத்திற்கு நீர் கொடுக்குமாறு இப்பேரவையின் வாயிலாக மெத்தப்பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே, இந்தப் பாசனத் திட்டத்தின்கீழ் பயன் பெற்றுக் கொண்டிருந்த விவசாய நிலங்களில் தற்பொழுது காற்றாலைகளும், கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு இருப்பதால், இந்த நிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட நீர் தற்போது உபரியாக உள்ளதால், இந்த உபரி நீரைக் கொண்டு மேற்சொன்ன என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுப்பதில் சிரமம் இருக்காது என்று முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*கைத்தறி.* ஏழை நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு விற்பனைத் தள்ளுபடி என்று அறிவித்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணத்தால் உருவாகியுள்ள பிரச்சினைபற்றி ஆராய்ந்து, 1993 மே மாதம் முதல் தேதிக்குள் அரசுக்கு அறிக்கை தர ஒரு குழு அமைத்து இருப்பது நெசவாளர்களுடைய பாராட்டுதலைப் பெற்றுள்ளது. மேலும், கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட 11 இரகங்கள் சட்டத்தை அமல்படுத்துதல், 1994-95, 1995-96 ஆம் ஆண்டுகளில் வழங்கப்படுவதாக உறுதி செய்யப்பட்ட தள்ளுபடி மானியத்தினை இனியும் காலம் தாழ்த்தாமல் வழங்குதல், இலவச வேஷ்டி சேலைகளை முழுமையாகக் கைத்தறி மூலமாக உற்பத்தி செய்தல், தரமான நூல்களை பிரதமக் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களுக்குத் தடை இல்லாமல் தேவைக்கேற்ப நியாயமான விலையில் வழங்குதல், தள்ளுபடி மானியம் பெறுவதற்கு, சில்லறை விற்பனை மொத்த விற்பனை என்ற பாகுபாடற்ற ஒரு நிலையை ஏற்படுத்துதல், கைத்தறித் துணியிலிருந்து தயாராகும் தலையணை உறை போன்றவைகளுக்கு வரி விலக்கு போன்றவைகளையும் இந்தக் குழு ஆராய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பருத்தி நூற்கண்டு தமிழகத்தில் தயார் செய்யப்படும் மொத்த கைத்தறி உற்பத்தியில் 40 விழுக்காடுக்கு மேலாக என்னுடைய காங்கேயம் தொகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, மேற்சொன்ன பிரச்சினைகளுக்குத் துரிதமாக, சுமூகமாகத் தீர்வு ஏற்பட, விவசாயத்துக்கு அடுத்தபடியாக உள்ள நெசவுத் தொழிலையே நம்பி இருக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் குடும்பங்கள் முழுமையாகப் பயன் பெற வேண்டும் என்று பெரிதும் விரும்புகின்றேன்.

*வணிகவரிகள்.* ஏழை எளியவர்கள் மற்றும் நடுத்தரப் பிரிவினர் பயன்படுத்தும் அன்றாட மற்றும் விவசாயப் பொருட்களின் மீதான வரிச் சுமையைக் கடந்த காலங்களில் குறைத்து எல்லோருடைய நெஞ்சத்திலும் நிறைந்திருக்கும் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. இந்த வரிசையில் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் பருத்தி விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



*முற்பகல் 11-45*

காங்கேயம் வட்டத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலைகள் 70-க்கு மேலாக உள்ளன. இந்த ஆலைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் 15,000 நபர்களுக்குமேல் வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றன. மாநிலத்தில் உற்பத்தியாகும் மொத்தத் தேங்காய் எண்ணெயில் 80 விழுக்காடு இந்தப் பகுதியில்தான் தயார் செய்யப்படுகின்றது. மூலப் பொருளான தேங்காய்க் கொப்பரைக்கு 2 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது இத்தொழிலுக்கு ஒரு பெரும் ஊக்குவிப்பாக அமையும். இதனால் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழில் மேலும் விரிவடைந்து, அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு பெருகவும் வாழ்க்கைத் தரம் உயரவும் மற்றும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேங்காய்க்கு நல்ல விலை கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

அன்றாட வாழ்க்கையில் குடும்பத் தலைவிகள் உபயோகிக்கும் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு 16 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் ஆகவும், முத்திரைச் சின்னம் இடப்பட்ட பிற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் ஆகவும் வரி குறைக்கப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகச் சிலவற்றை இந்த அவைமுன் நான் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண் டபிள்யூ. ஏ.54/96 என்ற வழக்கில் 12-6-1997 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பைத் தொடர்ந்துதான் மசாலாப் பொடிகளுக்கு வரி விதிக்கப்படுகிறது. அதற்குமுன் இந்த வரியில்லை. மசாலாப் பொருட்களை Foods என்று, அதாவது உணவுப் பொருள் என்ற அடிப்படையில் தற்போதைய தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் முதல் பிரிவு, பகுதி-இ, தொகுப்பு எண் 4-க்கு 3-ன்கீழ் 16 சதவீதம் வரி சில வணிக வரி அதிகாரிகளால் தவறுதலாக விதிக்கப்படுகிறது. இது சரியில்லை. மசாலாப் பொருளானது, உணவுப் பொருள் தயாரிப்பில் ஒரு துணைப் பொருளேயொழிய தனியாகவே அது உணவுப்பொருள் ஆகாது. ஆகவே, மசாலாப் பொருள் அந்தப் பிரிவிலே சொல்லப்படாத காரணத்தால் அதனை Residual Item என்று கருதி முதல் பிரிவு பகுதி-டி, தொகுப்பு எண் 67-ன்கீழ் 11 சதவீதம் வரிதான் விதிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் வணிகச் சின்னம் இடப்பட்ட மசாலாப் பொருள்களுக்குச் சொல்லப்பட்ட

வரிக் குறைப்பால் ஆதாயம் கிடைப்பதற்கான வழிவகை இல்லை. மேலும் நடைமுறையில் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொருள்கள் விற்கப்படுவது என்பது சொல்லக்கூடிய அளவில் இல்லை. ஆகவே, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொருள்களுக்கு 4 சதவீதம் வரி என்பதுகூட அதிகப் பலன் தர முடியாததொன்று. அத்தியாவசியப் பண்டங்களுக்கு முற்றிலும் வரி நீக்கம், பலமுனை வரி நீக்கப்பட்டு ஒருமுனை வரி, உபரி வரிகள் ஒழிப்பு, என்று பல்வேறு சலுகைகளை அறிவித்து வணிகர்களுடைய பாராட்டை இந்த அரசு பெற்றுள்ள இன்றைய சூழ்நிலையில் ஏற்கெனவே ஒருமுறை வரி செலுத்தப்பட்ட அல்லது வரிவிலக்கு பெறப்பட்ட மூலப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மசாலாப் பொருள்களுக்கு வரி விதிப்பது என்பது அரசின் நல்லெண்ணத்திற்கு மாறாக அமைந்துள்ளது. ஆகவே, வணிகச் சின்னம் உள்ள வணிகச் சின்னம் இல்லாத சில மசாலாப் பொருள்கள் என்று பாகுபடுத்திப் பார்க்காமல் இரண்டுக்கும் ஒரே விதமாக 4 சதவீத வரி விதிக்க அரசு முன்வர வேண்டும். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அத்தியாவசியப் பொருள்களான மசாலாப் பொருள்களுக்கு அறவே வரியில்லாமல் செய்வது சாலச் சிறந்ததாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பால்வளம். 8,607 பிரதமப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள 26.60 இலட்சம் விவசாயிகள் சார்பாக முக்கியமான (மணியடிக்கப்பெற்றது) . . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** உறுப்பினர் அவர்களுக்கு வழங்கப்பட்ட 10 நிமிட நேரம் முடிந்துவிட்டது. இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சில முக்கியமானக் கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான பரிசீலனைக்காக வைக்க விரும்புகிறேன்.

மாட்டுத் தீவனத்திற்கு மொத்தமாக வரிவிலக்கு கொடுக்க முடியவில்லை என்றாலும்கூட கூட்டுறவுத் துறையின் மூலம் தயாரிக்கப்படும் ஆவின் கால்நடைத் தீவனத்திற்கு மட்டுமாவது வரி விலக்கு அளித்து உதவ வேண்டும் என்பது என்னுடைய முதல் கோரிக்கையாகும். இதனால் கிலோ ஒன்றுக்கு 19 பைசா இழப்புத்தான் அரசுக்கு ஏற்படும். ஆனாலும் விவசாயிகளுக்கு இது ஒரு பெரும் உதவியாக அமையும்.



இரண்டாவது கோரிக்கையாக, பால் உற்பத்தியாளர்களுக்கு, லிட்டர் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 1 ரூபாய் 50 காசு என்று உயர்த்திக் கொடுத்து, பாலின் உற்பத்தி விலையைக் கட்டுப்படியானதாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழகத்தில், பாலுக்குக் கொடுக்கப்படும் விலை மிகக் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, விரைவில் ஒரு நல்ல முடிவினை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு லிட்டருக்கு, பால் விலையாக 1 ரூபாய் 50 காசு உற்பத்தியாளருக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார். அதை யாரிடமிருந்து வசூல் செய்வது என்று தெரிவித்தால் வசதியாக இருக்கும். ஏனென்றால், பால் வாங்குகின்றவர்கள், பாலின் விலையைக் குறைக்க வேண்டுமென்று ஒரு பக்கத்திலே போராடுகிறார்கள்; உற்பத்தி செய்கின்றவர்கள் அதிக விலை வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்கிடையில், அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்ற ஆலோசனையையும் வழங்கினால் நன்றாக இருக்கும்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** நுகர்வோரிடமிருந்துதான் அதை வசூல் செய்ய வேண்டும். ஏனென்றால், அரசு மூலமாகக் கொடுக்கப்படும் பாலின் விலையைவிட அதிக விலை கொடுத்துத்தான் வெளியே வாங்கிக் கொண்டிருப்பது ஒரு உண்மையான நிலை என்பதையும் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) மொத்தத்தில், தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், விவசாயிகள் உட்பட அனைவரின் நன்மையைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை அளித்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை வெகுவாகப் பாராட்டி எனது நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட 1998-99 ஆம் ஆண்டுக்கான

வரவு-செலவுத் திட்டத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, ஒரு பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் பல்வேறு தரப்பு மக்களுக்கு நன்மை பயக்கின்ற வரிக்குறைப்பு என்பது பாராட்டுக்குரிய ஓர் அம்சமாகும். இரண்டாவதாக, உணவுப் பொருள்கள், எண்ணெய் வித்துக்கள், பஸ் கட்டணக் குறைப்பு, சமூக நலன், பென்ஷன் தொகை உயர்வு, தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குச் சலுகைகள் போன்ற இந்த விஷயங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெகுவாக ஆதரிக்கிறது; வரவேற்கிறது. அதுபோன்று முதுபெரும் தேசப் பக்தர் ஜமதக்னி அவர்கள், காரல் மார்க்சின் 'மூலதனம்' நூலை மொழிப்பெயர்க்க உதவிய மாண்புமிகு முதலமைச்சரை வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு ஊழியர்களுக்கு ஈடான சம்பளத்தை உயர்த்தி வழங்கியிருப்பதையும் வரவேற்கிறோம். ஆனால், நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான சத்துணவு ஊழியர்கள் இதிலே விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைந்தபட்ச சம்பளத்தை 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நம்முடைய சாலைப்பணியாளர்கள்—புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள்—ரூபாய் ஆயிரத்திற்கும் அதிகமான சம்பளத்தைத்தான் பெறுகிறார்கள். அதேபோன்று துப்பரவுத் தொழிலாளர்களும் இன்றைக்குக் குறைந்தபட்ச சம்பளத்தைத்தான் பெறுகிறார்கள். ஆகவே, சாலைப் பணியாளர்கள், துப்பரவுப் பணியாளர்கள் ஆகியோருடைய சம்பளத்தை உயர்த்தி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசு ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம், நம்முடைய ஆசிரியப் பெருமக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில், அதைப் பரிசீலனை செய்து நம்முடைய மத்திய அரசுக்கு ஈடான சம்பளம், நம்முடைய ஆசிரியர்களுக்கும் கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே, தேர்தல்கள் எல்லாம் முடிந்த பிறகு, மத்திய அமைச்சர்கள், பொதுவாக நம்முடைய மாநில அரசை அச்சுறுத்துகின்ற வகையிலே அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அது எந்தவகையில் சரியாகும் என்பதுதான் நமக்கெல்லாம் புரியவில்லை. அதுமட்டுமல்ல, மத்திய அரசினுடைய சில அமைச்சர்கள், இந்த மாநிலத்தில் இருக்கின்ற பல்வேறு வழக்குகள் சம்பந்தமாக ஈடுபட்டு இருக்கின்ற அரசு வழக்கறிஞர்களைக்கூட கட்டாயப்படுத்தி, ராஜினாமா செய்ய வைக்கும் முயற்சி இன்று



நடைபெறுவதுகூட, கவலை தரக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றுகிறது. அதிரடி நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி, மாநில அரசை மிரட்ட வேண்டாம் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இன்னும் ஒரு படி மேலே என்னவென்று சொன்னால், அந்த அமைச்சர்களுக்கு எல்லாம், என் சார்பிலும், நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பிலும் ஓர் எச்சரிக்கையாகக்கூட சொல்ல விரும்புகிறேன், இந்த நேரத்திலே. ஏன் என்றால், சட்டபூர்வமாக, மக்கள். ஜனநாயகத்திலே நம்பிக்கை உடையவர்கள். நேற்றுவரையிலும் எப்படி அவர்கள் இருந்தார்கள் என்பதை எல்லாம் நாம் பரிசீலனை செய்வோம் என்று சொன்னால், அந்த அமைச்சர் பெருமக்கள் எப்படி இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த வகையிலே இந்த மாநில அரசை அச்சுறுத்த வேண்டாம் என்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அடுத்தபடியாக மூடியிருக்கின்ற ஆலைகள். இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நீண்டகால முயற்சிக்குப் பின்னால், பின்னிஆலை விஷயத்தில் ஓரளவிற்கு ஒரு முடிவு ஏற்பட்டு இருந்தாலும்கூட, ஆயிரத்திற்கும் சொச்சமான ஊழியர்களுக்குத்தான் 10 மாதம் கழிந்த பிறகு அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு என்று சொல்லி இருக்கிறார்கள். இதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதனுடைய பின்னணியிலே இன்னும் அதிலே விடுபட்டுப் போயிருக்கின்ற, அல்லது அதிலே இருக்கின்ற சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் உத்தரவாதம் ஏற்படவேண்டும். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த பின்னி ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் இன்னும் அதிகப்படியான கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று டன்லப், என்பீல்டு, ஸ்டான்டர்டு போன்ற மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு ஒரு கொள்கையைக்கூட நாம் வகுத்தாக வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று தொழிற்சங்க உரிமைகள், பல்வேறு கட்டங்களிலே இன்று அதனுடைய ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். சில இடங்களிலே காவல் துறையினுடைய அத்துமீறல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அதற்கு இடம் கொடுக்காத வகையில் நம்முடைய தொழிற்சங்க உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், நான் அதனுடைய மானியக் கோரிக்கை வருகின்றபோது சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்றாலும்கூட, அதன் தலைப்பிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மற்றும் நமக்கு நாமே திட்டம். ஆகிய இவற்றைப்பற்றி என்னுடைய அனுபவத்திலிருந்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள தூத்தூர் சிற்றூராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கி எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அங்கே என்ன வேலை நடந்திருக்கிறது என்று பார்த்தால் இதுவரையிலும், 4 வீடுகளுக்கான பேஸ்மென்ட் மட்டும்தான் ஆரம்பித்து இருக்கிறார்களே தவிர, சுமார் 80 இலட்சத்திற்கும் அதிகமாகப் பணம் ஒதுக்கியும், அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்குத் திட்டங்கள் சென்றடையவில்லை என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, நம்முடைய அரசு, ஒதுக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள், சாமானிய மக்களை, ஏழை எளிய மக்களைச் சென்றடைவதற்காக அரசு திட்டங்களைத் தீட்டுகின்றது. அவ்வாறு சென்று அடைகின்றனவா என்று கேட்டால் இல்லை என்பதுதான் என்னுடைய நேரடியான அனுபவம் ஆகும். நான் இந்தச் சட்டமன்றக் கூட்டத்திற்கு வருவதற்கு 5 நாட்களுக்கு முன்பு கூட அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது, வேலை ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கெனவே, 2 முறை அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். இதைப்பற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பேசினேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் 3 நாட்களுக்குள் வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். வேலை இப்போது துவங்கி நடந்து கொண்டிருக்கிறது. விரைவாக அந்த வேலைகளை முடிப்பதற்கு சில இடையூறுகள் இருந்த காரணத்தால், அவற்றிலே சில வேலைகளை மட்டும் தொடங்காமல் இருந்தார்கள். இப்போது அனைத்து வேலைகளையும் தொடங்குகிறோம் என்று என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். விரைவாக அந்தப் பணிகள் நிச்சயமாக முடிவுறும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, இந்தத் தகவலைச் சொன்னதற்காக, நன்றி.



இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுசம்பந்தமாக எந்தவிதமான தகவலும் சொல்லப்படுவதில்லை; கலந்து ஆலோசிப்பதில்லை. அதிகாரிகள் அந்த ஊராட்சி, சிற்றூராட்சியினுடைய தலைவர்களைக் கூப்பிட்டு விஷயங்களை முடிக்கிறார்கள் என்ற நிலை தொடருகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான தகவல் தற்போதுகூட, தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. மாவட்டத்தில் நடைபெறுகிற வேலைகளில், அவரவர்கள் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்கின்ற கிராமங்களில், என்னென்ன பணிகள் ஆற்றுகிறார்கள் என்பதைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, அவர்களுடைய அனுமதியைப் பெற்றே நடத்தவேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. அப்படி நடைபெறாமல் இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**திரு. டி. மணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இதற்குள்ளே ஆழமாகச் செல்ல விரும்பவில்லை. அதுபோன்று நமக்கு நாமே திட்டம் ஒரு நல்ல திட்டம். அங்கே இருக்கக்கூடிய கூடுதல் கலெக்டர் அவர்கள், மருதங்கோடு சிற்றூராட்சியிலே போய் - நானும் கூட ஒருநாள் போய், - குளத்தின் உள்ளே இறங்கி, அவரும் ஒரு மண்வெட்டியை வைத்து வெட்டினார், நானும் மண்வெட்டியை வைத்து வெட்டி, இரண்டு கூடை மண்ணை வெட்டிப்போட்டோம் வெளியிலே. ஆனால் அதோடு சரி, நமக்கு நாமே திட்டம். அந்தப் பஞ்சாயத்திலே இருக்கிற சீர்கேடு என்னவென்று கேட்டால், ஒரு பெண் உறுப்பினர் அந்தப் பஞ்சாயத்தினுடைய தலைவி. அந்த அம்மாள் இருக்கக்கூடிய கட்சி பி.ஜே.பி.யினுடைய அமைப்பு. ஒரு இலட்சம் ரூபாய்க்கு மராமத்துப் பணி நடந்தால், அந்த அம்மாவிற்கு 10 ஆயிரம் ரூபாய் மாமூல் கொடுக்கவேண்டும். இன்னும் அதற்கு மேலே, கூட என்னவென்றால், 2 சதவீதம் அவர்களுடைய கட்சிக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பஞ்சாயத்திலே அவர்களுக்குப் பெரும்பான்மை இல்லை. 12 உறுப்பினர்கள் சேர்ந்து, அதனுடைய பெரும்பான்மை உறுப்பினர்களால் பஞ்சாயத்துக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைக் கூட அவர்கள் ரெக்கார்டு பண்ணுவதில்லை. ஏற்கெனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உதவித் தலைவர் உட்பட பெரும்பான்மை உறுப்பினர்கள்

தந்த ஒரு புகார் மனுவைக் கொடுத்திருக்கிறேன். விசாரணை செய்யவேண்டும். இன்னும் சொல்லப்போனால், கூடுதல் கலெக்டர் அவர்கள் கொஞ்சம் உடந்தையாகச் செயல்படுகின்ற ஒரு புகாரை நான் சொல்லவேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் *12-00*

அதேபோல என்னுடைய கோரிக்கைகள் எல்லாம் என்னவெனில் அரசு சார்ந்த திட்டங்களுக்கு *100* ரூபாய் செலவழித்தால், *90* ரூபாய் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அதற்குரிய ஏற்பாடுகளை நம்முடைய அதிகாரிகள் செய்வதில்லை. ஆகவே, அதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவல்துறை. இங்கே காவல் துறையைப் பற்றிச் சொல்கிறபோது மானியத்திலே சொல்ல வேண்டிய சமாச்சாரங்கள் நிறைய இருந்தாலும், இந்த மாநில அரசுக்கு சொல்லிக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தமட்டில் நான் தினந்தோறும் எங்கேயாவது ஒரு கிராமத்திலே *100* மக்களைச் சந்திக்காமல் என்னுடைய பணிகளை நான் தொடங்குவதில்லை. அங்கே போனால் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் காவல்துறையினுடைய சாராய சாம்ராஜ்யம் எல்லாக் காவல் நிலையங்களிலும் உள்ளது, குறிப்பாக களியக்காவிளை காவல் நிலையத்தில் இருக்கிறது. பக்கத்திலே இருக்கக்கூடிய சாராய வியாபாரிகள் ஒரு வாரத்திலே ஒரு வியாபாரியிடமிருந்து ரூ.*5,000* அந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பல வியாபாரிகளிடமிருந்து பல்லாயிரக்கணக்கான ரூபாய் வருகிறது.

நாம் கொடுக்கக்கூடிய சம்பளத்தைவிட, இந்த அரசு தருகின்ற சம்பளத்தைவிட நான்கு, ஐந்து மடங்கு சாராய வியாபாரிகளிடமிருந்து, ஸ்பிரிட்டை கடத்துவதற்காக மாமூல் வருகின்ற நிலை களியக்காவிளை போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறது. கடந்த வருடக் கடைசியில் ஒரு கொலை நடந்தது. நான் என்னுடைய ஆபிசிலிருந்து *1½* மணிக்கு வீட்டிற்கு பஸ்ஸில் வருகிறேன். குழித்துறை பிரிட்ஜிற்குப் பக்கத்தில் ரோடில் ஒரு அடிதடி நடந்தது. வந்தவுடன் நான் காவல்துறைக்கு போன் செய்தேன். இப்படி ஒரு தகராறு நடக்கிறது. நீங்கள் தயவுசெய்து அவசரமாக இதிலே தலையிடவேண்டுமென்று நான் தொலைபேசியில் சொன்னேன். ஆனால் அவர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை.



என்ன நடந்தது? இரவு சுமார் *9* மணிக்குக் கொலை நடந்தது. இப்படிப்பட்ட நிலை, இந்த அரசிற்கு ஒரு கெட்ட பெயரை சாதாரண மக்களிடமிருந்து சம்பாதித்துத் தருகின்ற ஒரு சூழ்நிலை *1997* பாதியிலிருந்து ஆரம்பித்திருக்கிறது. இது ஒரு சாபக்கேடான நிலை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** *12* நிமிடங்கள் ஆகிவிட்டன. தயவுசெய்து உறுப்பினர் உரையை முடித்துக் கொள்ளவேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

**திரு. டி. மணி:** அதேபோல் கணபதிகல். அரிசன மக்கள் வாழ்கின்ற ஒரு பகுதி. அதற்கு அடுத்த பகுதிக்கு செம்பகதரிசலுக்குச் செல்லவேண்டுமென்றால் தனியாருக்குச் சொந்தமான தோட்டக் காடுகளைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். சாலை வசதி வேண்டுமென்று கேட்டு, பாதை வசதி வேண்டுமென்று கேட்டு, நீண்டகால இயக்கம் எல்லாம் நடத்தி, கடைசியில் அந்தப் பாதையை அங்கேயிருக்கின்ற முதலாளிகள் அடைத்துவிட்டார்கள். எனவே, இதிலே ஒரு சச்சரவு வந்தது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்த ஊருக்கு செம்பகதரிசலுக்கு, அதாவது கணபதிகல்லிலிருந்து செம்பகதரிசல் செல்வதற்காக பாதை வசதி, சாலை வசதி செய்து தரவேண்டும். அவர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும்.

அதுபோல் சாலைகளை இப்போது தனியாருக்குக் கொடுப்பதுகூட எனக்கு விருப்பம் கிடையாது. அது நாளடைவில் வேறு சிக்கல்களை உண்டாக்கும். அடுத்து தேசிய நெடுஞ்சாலை. கன்னியாகுமரி மாவட்டத்தில் நீண்ட தூரம் இருக்கக் கூடிய தேசிய நெடுஞ்சாலையிலே இரண்டு வருடத்திற்கு ஒரு முறை தார்தளப் பணி செய்துதான் ஆகவேண்டும். ஏனென்றால் 'ஹெவி டிராஃபிக்' இருக்கக்கூடிய, மழையுள்ள பகுதி அது. ஆனால் இரண்டு வருடங்களாக எந்தப் பணியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்போது செய்ய வேண்டிய நேரம். இந்த மாதம் முடிந்துவிட்டால் மே மாதம் *2* ஆம் தேதியிலே எங்கள் ஊரிலே மழை பெய்யும். வரும் நான்கு மாதங்களில் வேலையே செய்ய முடியாது. நான் இதைப்பற்றிப் பெரிய அதிகாரிகளிடம் பலமுறை பேசினேன். இப்போது Patch works செய்து கொண்டிருக்கிறார்கள், ரோடு பள்ளங்களாகக் காட்சி தருகிறது.

இன்னொன்று நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ரப்பரை மிக்ஸ் செய்து சாலைகளைப் போடுவதற்குத் தக்க, தகுதியான நேரம் இது. அதுவும் ரப்பருடைய விலை குறைந்து போயிருக்கிறது. அதற்கு நாம் ஒன்றும் செய்யமுடியவில்லை. அரசாங்க ரப்பர் துறையில் ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. கேரளாவிலே, கோட்டயத்திலும், திருவனந்தபுரத்திற்கு அருகாமையிலும் பல ரோடுகளில் போட்டுப் பார்த்திருக்கிறார்கள். அது 10 வருடங்களுக்கு ஈடு கொடுத்து நிற்கக்கூடிய சாலைகளாக அமைந்திருக்கின்ற காரணத்தால், இங்கேயும் சென்னை மாநகரினுடைய நம்முடைய தலைமையகத்தில், இங்கே ஏதாவது ஒரு ரோட்டை பரீட்சார்த்தமாக எடுத்து, 5, 6 கிலோ மீட்டர் அளவிற்கு அந்த ரப்பரைப் பயன்படுத்தி, அதிலே வெற்றி காணுவோம் என்று சொன்னால், நம்முடைய தோட்டக் காடுகளில் இருக்கின்ற ரப்பரைப் பயன்படுத்தினால், அதனுடைய விலையைச் சற்று உயர்த்த முடியும். விவசாயிகளையும் பாதுகாக்க முடியும். நம்முடைய ரோடுகளையும் சற்று பாதுகாத்துக்கொள்ள முடியும். ஆகவே, அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோல் பொதுப்பணித் துறை. நான் சமீபத்தில்கூட சொன்னேன். நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 1980-லிருந்து கோரிக்கைகள் வைத்திருக்கிறோம். ஒன்றும் நடக்கவில்லை. முந்தைய ஆட்சியிலே ஒன்றும் நடக்கவில்லை. அதற்கு முந்தைய ஆட்சியிலேயும் ஒன்றும் நடக்கவில்லை. இப்போது இந்த ஆணை சம்பந்தமாக ஒரு சின்ன விவரம். கடந்த வருடத்திலே பொதுப் பணித் துறையிலே இருந்த மூன்று அணைகளுடைய பராமரிப்பிற்கான வேலை என்று சொல்லி ரூ.572 லட்சம் ஒதுக்கி இருக்கின்றார்கள். பேச்சிப்பாறை, மணிமுத்தாறு மற்றும் இன்னொரு அணை. நான் பேச்சிப்பாறைக்கு மூன்று முறை சென்று பார்த்தேன். அங்கே போய்ப் பார்த்தால், அந்த அணையினுடைய லீக்கேஜை அடைப்பதற்கு, சிமெண்ட்பால் அடைப்பதற்கு - அந்த சிமெண்ட்பால் அடைப்பது என்பது தண்ணீர் இருக்கும்போது அடைக்க முடியாது. ஆனால், அதில் 19 அடியோ, 20 அடியோ தண்ணீர் இருந்தது. அப்போது அந்தப் பணியைச் செய்ய முடியாது. அதை வழி நடத்துகின்ற இரண்டு அதிகாரிகள், குலசேகரத்தில் இருக்கிறார்கள். அந்த இரண்டு சூப்பரின்டெண்டண்டுகள் எப்படி வழி நடத்தினார்களோ நமக்குத் தெரியவில்லை. கொஞ்சம் வேலை ஆரம்பித்து, பிறகு நிறுத்தி விட்டிருக்கிறார்கள். ரூ. 95 இலட்சம் அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பம்பாயிலே உள்ள கம்பெனிக்காரன் அதை



எடுத்திருக்கிறான். அதிலே நிறைய முறைகேடுகள் உள்ளன என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பிற்பகல் 12-05

அதேபோல, குழித்துறை ஆற்றுப் பாலம், நூறு வருடத்தைத் தாண்டியாகிவிட்டது. அதன்கீழே முழுவதுமாக மணல் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த நேரம் அது உடையும் என்று யாரும் சொல்ல முடியாது. ஏற்கெனவே மணல் எடுப்பது சம்பந்தமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கன்னியாகுமரியிலே இருக்கக்கூடிய தாமிரபரணி ஆற்றிலே 60-க்கு மேற்பட்ட குடிநீர்க் கிணறுகள் இருக்கின்றன. அங்கே மணல் எடுக்கக்கூடாது என்று சொல்கின்றோம். நம்முடையத் தேவைக்குக் கொஞ்சம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். ஆனால், அதை கேரளாவிற்குக் கடத்துகிறார்கள். கடத்தும்போது, அங்கே செக்போஸ்ட் திறந்துவிடப்படுகிறது. திறந்துவிடப்பட்டு, மாமூல் வாங்கப்படுகிறது. குழித்துறை, வள்ளவிளைபாலம், கணபதியாங்கடவு பாலம், அதுபோல இன்னும் சப்பாத்து மூழ்குபாலம், மங்காடு மூழ்குபாலம், போன்ற இதற்கெல்லாம் எஸ்டிமேட் எடுத்தாகிவிட்டது. ஆனால் வேலை நடக்கவில்லை. காலங்கள் கடந்து விட்டன. குழித்துறை பாலம் சம்பந்தமாக எஸ்டிமேட் எடுக்கப்பட்ட காலத்திலே அதற்கு ரூ. 4 கோடி, இப்போது அதற்கு 10 கோடி ரூபாய் வேண்டும். மத்திய சர்க்கார் தர வேண்டும். தருவார்களா என்று நமக்குத் தெரியாது. ஆகவே, இந்த வேலையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஆதிவாசிகள், பழங்குடியினர் நலன். அவர்களுக்கு அரசாங்கத்தின் எந்த உதவியும் அந்த மாவட்டத்தைச் சென்றடைவதில்லை. அதற்கு வழிவகை செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரப் பற்றாக்குறையைப் பற்றி ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூடங்குளம், அது என்ன நிலைமையிலே இருக்கிறது என்று தெரியாது. நாம் இப்போது எங்கிருந்தோ கடன் வாங்குகிறோம். யாருடைய கையையோ, காலையோ பிடித்து, வாங்கும்போது, நான்தான் முதலிலே சொன்னேன், நீதான் முதலிலே சொன்னாய் என்றெல்லாம் வாதங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தக் கூடங்குளம் திட்டம் முடிந்துவிட்டால், நம்முடைய மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறையே இருக்காது என்பது என்னுடைய உணர்வு.

இதோடு சேர்த்து, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு அனல் மின்நிலையம் அளத்தங்கரையிலே அமைக்க சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு ஆய்வு நடத்தினோம். 100 ஏக்கர் நிலப்பகுதியை கண்டுபிடித்தார்கள். ஆனால் யாரோ போய் நீதிமன்றத்திலே தடை வாங்கிவிட்டார்கள். இதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதேபோன்று பால்வளம். இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். என்னுடைய ஊரிலே கடையால்மூடு என்ற இடத்தில் ஒரு சின்ன பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இருக்கிறது. அந்தப் பால் உற்பத்தியாளர்கள் கொடுப்பது 6 ரூபாய் சில்லரை காசு. இவர்கள் விற்பனை செய்வது, 10, 12 ரூபாய் சில்லரை காசு. கேட்டால் ஒரு கணக்குச் சொல்கிறார்கள். தருகின்ற பால் கெட்டியாக இல்லை என்று சொல்கிறார்கள். தோட்டத்தில் இருக்கக்கூடிய புல்லைத்தான் இந்த மாடுகளுக்குப் போடுகிறார்கள். அதிலே இன்னொன்று, இதிலே பிரச்சினை என்று வரும்போது மாட்டுத் தீவனமும் வருகின்றது. அதற்கு நாம் சப்சிடி கொடுத்தால்தான் வாடிக்கையாளர்கள் வாங்குகின்றார்கள். வாங்குகின்றவர்களுக்கு விலையைக் கூட்டாமல் இதைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். மாட்டுத் தீவனம் சப்சிடியிலே கொடுக்கவேண்டும். இப்போது என்னவென்று சொன்னால், மாட்டுத் தீவனத்தில் பயங்கரமான கலப்படம். அதையும்கூட நாம் தவிர்ப்போம் என்று சொன்னால், இந்த வரவு-செலவுத் திட்டத்திலே, பல்வேறு விதமான பிரச்சினைகளில், மக்களுடைய நலப் பணிகள், போன்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் ஒரு விடிவு வரும்.

நான் இறுதியாகச் சொல்ல விரும்புவது கையினாலே திரிக்கக்கூடிய கயிறு பற்றி. கொல்லங்கோட்டிலே, ஈத்தாமொழியிலே, வள்ளவிளையிலே, கையால் திரிக்கக்கூடிய கயிறுக்கு ஒரு சொசைட்டி இருக்கிறது. அதற்கு இருக்கக்கூடிய விற்பனை வரியை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அது ஒன்றுதான். கிராமத்திலேயிருந்து சாதாரண நகரத்திலே உள்ளவர்கள் வரை உபயோகிக்கக்கூடிய ரொட்டியை சின்ன பன் என்று சொல்வார்கள். இது மூன்று நாட்களுக்கு மேல் இருந்தால் உபயோகிக்க முடியாமல் போய்விடும். ஆகவே, அதற்கும் முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்ததற்குத் தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகின்றேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

பிற்பகல் 12-10

***திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதற்குரிய வாய்ப்பினை அளித்தத் தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குன்னூர் தொகுதியிலிருந்து வந்து இரண்டு முறை இந்தச் சட்டமன்றத்திலே குறுகிய காலம் பணியாற்றி எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்த என்னுடைய நண்பர் திரு. தங்கவேலு அவர்களுடைய மறைவுக்கு முதலில் எனது இரங்கலைத் தெரிவித்து அவர் இடத்தைப் பூர்த்தி செய்கின்ற அளவிலே என்னை இந்த அவைக்கு அழைத்து வந்த எங்களுடைய இனமானத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி இப்போது என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே நாங்கள் அங்கு போய் வாக்குகள் கேட்கின்ற நேரத்திலே அங்கு உள்ள விவரம் தெரிந்த மக்கள், அரசியல் தெரிந்த மக்கள், ஏழை எளிய மக்கள் எனக்காக வாக்களிக்கவில்லை. தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அங்கு வந்தார்கள். வாக்குகளைக் கேட்டார்கள். அதற்கு முன்பே நம்முடைய இளைய தளபதி அங்கு வந்து பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அவர்கள் ஆரம்பித்து வைத்த பிறகு மீண்டும் அந்தப் பகுதிக்கு வந்து நம்முடைய தலைவர் அவர்கள் வாக்குகளைக் கேட்டார்கள். அவர்கள் வாக்குக் கேட்டதன் காரணமாக எனக்கு வாக்களித்தார்களே தவிர தனிப்பட்ட எந்த குலப்பெருமையோ, குடும்பப் பெருமையோ அல்லது பெரிய எந்த நிலையோ இல்லாத எனக்கு அந்த மக்கள் வாக்களிக்கவில்லை. காரணம் நாங்கள் வாக்குக் கேட்கின்ற நேரத்திலே என்ன கேட்டோம் என்றால் ஊழலற்ற ஆட்சிக்கு வாக்குத் தாருங்கள்; அதே போல நேர்மையான ஆட்சிக்கு வாக்குத் தாருங்கள்; இந்த ஆட்சியை அங்கீகரிக்கின்ற அளவுக்கு வாக்குத் தாருங்கள் என்றுதான் அந்த மக்களைக் கேட்டோம். அந்த மக்கள் வாக்குரிமை என்ற ஒரு காரணத்தைக் காட்டி இந்த ஆட்சியை அங்கீகரித்தார்கள். குன்னூர் தொகுதி மட்டுமல்ல. நீங்கள் கூட்டிக் கழித்துப் பார்த்தால் நீலகிரி பகுதி மக்கள் அத்தனை பேருமே சேர்ந்து ஒன்று திரண்டு இந்த ஆட்சிக்குத் தங்களுடைய அங்கீகாரத்தை அளித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதற்காக எங்களுடைய மாவட்டச் செயலாளர் அவர்களுடைய தலைமையிலே தோழமைக் கட்சிகள் எல்லாம் உழைத்தன. அப்படி உழைத்த நேரத்தில்கூட அங்கு சுமோ காரிலேயே

சூட்கேசோடு எத்தனையோ பேர்கள் வலம் வந்தார்கள். வலம் வந்த அத்தனை பேரையும் விரட்டுகின்ற அளவுக்கு நம் 'கலைஞர்' என்ற மந்திர சக்தியில் மயங்கி அவர்கள் வாக்களித்தார்கள். நான் வெற்றி பெற்றேன். ஆக அந்தக் குன்னூர் தொகுதி வாக்காளர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூற இந்த நேரத்தை உபயோகப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக வட்டங்களைப் பிரிக்கும்போது நீலகிரியிலே உதகை, குந்தா, அதேபோன்று கூடலூர், பந்தலூர் என்று இரண்டு வட்டங்களை அதிகப்படுத்தியிருக்கிறீர்கள். நீலகிரியில் செய்கின்ற அந்தக் காரியம் நீலகிரி பகுதியில் வாழ்கின்றவர்களுக்குத்தான் தெரியும். ஒரு பகுதியை விட்டு மற்றொரு பகுதிக்குச் செல்லும்போது பல்வேறு மைல்களைக் கடந்து செல்ல வேண்டும். ஒரு வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் போவது என்றால் ஒருநாள் ஆகிவிடும். ஒரு சாதாரண தொழிலாளியால் அதுகூட முடியாது. எனவே, நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் மற்றும் கூடலூர் வட்டங்களைப் பிரித்து குந்தா மற்றும் பந்தலூர் என்ற இரண்டு புதிய வட்டங்களைத் தோற்றுவித்ததற்காக உள்ளபடியே நாங்கள் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அது, அந்தப் பகுதி மக்களால் பெரிதும் பாராட்டுவதாக அமைந்துவிட்டது.

இந்த நிதிநிலை அறிக்கையை எடுத்துக்கொண்டால் எல்லா மக்களும் பாராட்டுகின்ற அளவுக்கு எல்லோரும் புகழ்ந்து போற்றுகின்ற அளவுக்கு இருக்கிறது. யாருக்கும் எதுவும் இல்லாததனால்தான் ஒவ்வொருத்தரும் கொக்கரித்துக்கொண்டு வேறு ரூபத்திலே இந்த ஆட்சியை அகற்றுவதற்கு முடியுமா என்று பார்க்கின்றார்கள். நிதிநிலை அறிக்கையில் ஏதாவது காரணம் கிடைக்குமா, அதை வைத்து பிரச்சினையை உருவாக்கலாமா என்று பார்த்தார்கள். ஆனால் நிதிநிலை அறிக்கை எல்லா மக்களுக்கும், இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை மக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கிறது. 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று சொல்வார்கள். அதற்கேற்ப கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற பட்ஜெட்டிலே எடுத்துக்காட்டாக உள்ளாட்சித் துறை, குடிநீர் வழங்குதல், நகர்ப்புற வளர்ச்சி, பொது விநியோகம், கால்நடைகள், சத்துணவு, மகளிர் நலம், ஆதிதிராவிடர் நலன் ஆகிய எல்லா நலன்களும் அடங்கிய ஒரு நிதிநிலை அறிக்கையை இந்த நாட்டிற்கு அளித்து இருக்கின்றார்கள். நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்த நாடு எந்தக் காலமும், என்றுமே நன்றியுள்ள ஒரு நாடாகக் கண்டிப்பாக இருக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்வதிலே பெருமைப்படுகிறேன்.



அதேபோன்று போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் கடந்த காலங்களிலே - தமிழ்நாட்டிலேயே அதே நிலைதான் - நீலகிரியில், கூடலூரிலே, குன்னூரிலே ஓடுகின்ற பஸ்கள் எல்லாம் வழியிலே நிற்கும். எந்தப் பகுதிக்குப் போனாலும் ஒரு பஸ் ஒரு இடத்திலேயிருந்து புறப்பட்டு மற்றோர் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது என்று வரலாறே கிடையாது என்ற காலம் போய் இப்போது நம்முடைய கொறடா அவர்களுடைய முயற்சியாலும், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய உதவியாலும் பேருந்துகள் ஓரளவிற்கு வந்திருக்கின்றன. இவை போதுமா என்றால் போதாது. இன்னும் பேருந்துகள் நிறைய வேண்டும். கடந்த காலங்களிலே ஸ்பேர் பார்ட்ஸ் என்று சொல்லக்கூடிய அந்தச் சாமான்கள் இல்லாமல் வண்டி ஓட்டினார்கள். ஓட்டை உடைசல் பஸ்களை, டப்பா என்ற பெயரிலேதான் ஓட்டினார்கள். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்காமலே ஒரு நிர்வாகம் கடந்த காலத்திலே நடந்து வந்தது. அதை மாற்றுகின்ற பணி இப்போது நடந்து வருகிறது என்றாலும் இன்னும் பேருந்து எங்களுக்கு நிறைய வேண்டும். அதேபோல குன்னூர் பகுதியில், அதாவது நீலகிரி, கோவை என்று இரண்டு கோட்டங்கள் தனியாகப் பிரிந்திருக்கின்றன. அந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து நம்முடைய உதகைக் கோட்டத்தை கோவை பகுதிக்கு மாற்றி விட்டால், இரண்டு கோட்டங்களும் ஒரே கோட்டமாக இருந்தால் அந்த பஸ்களும் எங்களுக்கு வரும். அந்தப் பேருந்துகளால் நாங்களும் பயன்பெறுவோம். அந்த குன்னூர் பேருந்துகளை கோவை நிலையத்திற்கு மாற்றி கோவையையும், நம்முடைய உதகையையும், இரண்டு கோட்டத்தையும் ஒன்றாக ஆக்கி பஸ்களை அதிகபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல் ஆதிதிராவிடர்களின் நலன் காப்பதில் இந்த அரசு எப்போதும் தலைசிறந்த அரசாக இருக்கிறது. ஆதிதிராவிடர்கள் இந்த ஆட்சிக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எப்போதும் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். காலம் காலமாக ஆதிதிராவிடர்களின் நலனில் இந்த ஆட்சியைத் தவிர எந்த ஆட்சியும், இந்தத் தலைவரைத் தவிர எந்தத் தலைவரும் அதிகக் கவனம் செலுத்தவில்லை; அவர்களுக்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ததும் இல்லை. ஆகவே இப்போது செய்திருக்கின்ற அந்தப் பணிகளுக்கு நாங்கள் நன்றி உடையவர்களாக இருப்போம்; ஆதிதிராவிட சமுதாயமே இருக்கும். ஆக, ஆதிதிராவிடர்கள் நலனுக்கான ஒதுக்கீடு இப்போது

434 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது உள்ளபடியே ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த நாங்கள் எல்லாம் பெருமைப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

அதேபோல் 2 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறுகின்ற அளவுக்கு 40 மாணவர் இல்லங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு இருக்கிறது. கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு 400 ரூபாய் உணவுக் கட்டணம் வழங்குவதாகவும், ஆதிதிராவிடர்கள் தொழில் நடத்த தாட்கோ மூலமாக நிதி ஆதாரம் வழங்கப்படும் என்றும் அறிவித்து இருக்கிறீர்கள். உள்ளபடியே தாட்கோ மூலம் கொடுப்பதால் ஆதிதிராவிடர்கள் பயன்பெறுவார்கள். ஆனால், கடந்த காலங்களில் கடந்த ஆட்சியில் தாட்கோ என்று எடுத்துக்கொண்டால் அது ஒரு புரோக்கர் கையில் இருந்தது. அவர்கள் போனால்தான் அங்கே தாட்கோவில் நிதி கிடைக்கும் என்ற நிலை கடந்த காலத்தில் இருந்தது. அந்த நிலையை மாற்றி ஆதிதிராவிட மக்கள் சுலபமான முறையில் தாட்கோவில் கடன் பெற வசதி செய்து தந்தால் அவர்கள் வாழ்வு வளம் பெறும், வசதி பெறுவார்கள். ஆகவே, தாட்கோவை ஒரு சுய ஸ்தாபனமாக எந்த நச்சரிப்பும் இல்லாமல் நல்லபடியாக, நேரிடையாக மக்கள் தொடர்புகொள்ளக் கூடிய ஸ்தாபனமாக மாற்றித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஆதிதிராவிடர்களுக்குத் தரமான வீடுகளைக் கட்டித் தருவதற்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு 68 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதற்காக நாங்கள் எல்லாம் உள்ளபடியே பெருமைப்படுகிறோம். ஆதிதிராவிட மக்களாகிய நாங்கள் அதற்காக எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த காலத்தில் நீலகிரியை எடுத்துக்கொண்டால் வீடுகள் கட்டக்கூடாது என்று சொன்ன ஆட்சி இருந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்ட ஆட்சியில் நீலகிரியில் ஒரு வீடும் கட்டக்கூடாது, வீடு கட்டவேண்டும் என்றால் கூட சென்னைக்கு வந்து சென்னையில் தான் அதற்கு அனுமதி வாங்கவேண்டும் என்ற ஒரு நிலை இருந்தது. இந்த ஆட்சி வந்த பின்னர்தான் அங்கே குப்பனும், சுப்பனும் வீடு கட்டிக்கொள்ள முடிந்தது. காரணம் அவர்கள் சென்னைக்கு வர முடியாது. மாட மாளிகை, கூட கோபுரம் கட்டுகிறவர்கள் வேண்டுமானால் சென்னைக்கு வந்து அவர்களுடைய அனுமதியைப் பெறலாம். ஆனால், ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்ள



சென்னைக்கு வர முடியாது. அப்படி ஒரு காலம் இருந்தது. அந்தத் தடையைத் தகர்த்து எறிந்து, டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராக வந்த பின்னர் அந்த நிலையை மாற்றி, நீலகிரி மக்கள் நீலகிரியில் வீடு கட்டிக்கொள்ள அங்கே உள்ள அதிகாரிகளை அணுகினால் போதும் என்ற நிலையை ஏற்படுத்தித் தந்தார்கள். ஆக நீலகிரிக்கு இந்த அரசு செய்த சாதனைகளில் இது ஒரு பெரிய சாதனை, அந்த மக்கள் இன்று தங்களுக்கு என்று ஒரு வீடு கட்டிக்கொள்ள இருக்கிறார்கள்.

அதேபோல் கடந்த காலத்தில் அவர்கள் வேண்டுமானால் எஸ்டேட், தோட்டங்கள் எல்லாம் வாங்கிக்கொள்ளலாம், ஆனால் ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனை கொடுப்பதற்கு தடை போட்டிருந்தார்கள். 1982 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது நீலகிரியில் வீட்டு மனைகள் ஆதிதிராவிடர்களுக்கு அல்லது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு யாருக்குமே தரக்கூடாது என்று ஒரு தடையாணை இருந்தது. ஆனால் இந்த அரசு வந்த பின்னால்தான் அந்தத் தடையாணையை தகர்த்து எறிந்து நீலகிரி மாவட்டத்தில் எல்லோருக்கும் வீட்டுமனை கொடுக்கலாம் என்ற அளவுக்கு நிலைமை வந்தது. ஆனால் இன்னும் கொடுக்கவில்லை. காரணம், இடையில் நடந்த தேர்தல். இப்போது தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது, இப்போது கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படிக் கொடுக்கின்ற கால கட்டங்களில் அங்குள்ள ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமல்ல, சலவைத் தொழிலாளர்களுக்கும், சவரத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனை கொடுக்கவேண்டும் என்பது ஒரு நீண்டகால கோரிக்கை ஆகும். ஆகவே, அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தொடக்கக் கல்விக்கு அதிக அளவுக்கு நிதி ஒதுக்கி மக்கள் எல்லாம் பயன்பெறும் அளவுக்கு ஏற்படுத்தித் தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடக்கப் பள்ளி இல்லாத 700 குக்கிராமங்களில் இந்த ஆண்டு 300 குக்கிராமங்களுக்குத் தொடக்கக் கல்வி தருவதாக அறிவித்து இருக்கிறார்கள். காரணம் குக்கிராமங்களிலிருந்து பள்ளி செல்லுகின்ற குழந்தைகள் மிக நீண்ட தூரம் நடந்து போய் வருகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் அங்கே பக்கத்திலேயே அந்த குக்கிராமத்திலேயே ஒரு பள்ளி இருந்தால் அவர்கள் படிப்பார்கள்

என்ற உயர்ந்த எண்ணத்தின் காரணமாக, கல்விக்கு இந்த அரசு செய்த சாதனை மிகவும் போற்றுதலுக்குரிய ஒன்று.

அதேபோல் வரும் நிதி ஆண்டில் 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும், 80 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும், 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருப்பது குறித்து உள்ளபடியே நாங்கள் எல்லாம் எங்களுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். மாணவர்கள் படிப்பதற்காக, சீருடை இலவசம், புத்தகம் இலவசம், இலவசப் பேருந்துப் பயணம், நோட்டுப் புத்தகங்களுக்கு வரிச் சலுகை, ஆக இத்தனையையும் அளித்து, கல்வியின் தரத்தை மிக மிக அதிகமாக உயர்த்தியது மட்டுமல்ல; எல்லா மக்களும் கல்வி கற்ற மக்களாக வாழ வேண்டும் என்ற இந்த அரசின் சாதனையை நான் போற்றி மகிழ்ந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

நீலகிரியிலுள்ள அரசு மருத்துவமனையிலே போதுமான டாக்டர்கள் இருப்பது இல்லை. காரணம் நீலகிரி ஒரு மலைப் பகுதி. அங்கு வருவதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். காரணம், எப்பொழுது மாற்றுவார்களோ என்று டாக்டர்கள் வரவே பயப்படுகிறார்கள். அவர்களுக்கு வசதிப்பட்ட இடங்களுக்குப் போய்விடுகிறார்கள். ஆக, நீலகிரியிலே ஒரு பற்றாக்குறை; டாக்டர்களை எடுத்துக்கொண்டாலும் சரி, நர்ஸ்கள் போன்ற பதவிகளிலே இருக்கின்றவர்களும் சரி, கீழே சமதளத்திற்கு வரத்தான் விரும்புகிறார்களே தவிர நீலகிரிக்கு வர மறுக்கிறார்கள். அங்கே போதுமான வசதிகள் இல்லை என்ற நிலைகூட இல்லை. எல்லா வசதிகளும்கூட அமைந்திருக்கின்றன. ஆனால், அவர்கள் கீழே வந்து விடுகின்றார்கள். ஆனால் நீலகிரியிலேயே பணியாற்ற விருப்பப்படுகின்றவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை தந்து, அவர்கள் இவ்வளவு காலம்தான் அந்த மருத்துவமனையிலே இருக்க வேண்டுமென்று என்று இல்லாமல், அவர்கள் விரும்புகிற வரையிலும் அந்த மருத்துவமனையிலே பணியாற்றுகின்ற அளவுக்குச் செய்தால் நீலகிரியிலே போதுமான டாக்டர்கள் கிடைப்பார்கள். அவர்கள் வேறு இடத்திற்கு மாறிச் செல்லமாட்டார்கள். நீலகிரி போன்ற பகுதிகளுக்கு வந்தால் எப்பொழுது மாற்றுவார்களோ, இடம் இருக்குமோ, இருக்காதோ என்று வருவதற்கு



அஞ்சுகிறார்கள். அவர்களுக்கு வசதிப்பட்ட இடத்திற்குத் தேடிச் செல்லாமல், நீலகிரியிலேயே பணியாற்ற விருப்பப்படுபவர்களை நீலகிரியிலேயே பணியமர்த்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது டாக்டர்கள் பற்றாக்குறை உள்ளது. இருந்தாலும், தாலுக்கா மருத்துவமனையிலேயிருந்து டெபுடேஷன் என்ற முறையிலே எடக்காடு, கோத்தகிரி போன்ற பகுதிகளுக்கு அங்கிருந்து டாக்டர்களை மாற்றுகிறார்கள். ஆக, போதுமான டாக்டர்களை அங்கே போட வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குன்னூர் பஸ் நிலையம் விஸ்தரிப்பு என்ற ஒரு பணி நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது. எதிர்க்கட்சியிலே நான் இருந்த காலத்திலேயே அதைச் சொன்னேன். ஆனால், எதிர்க்கட்சியிலேயிருந்த நேரத்திலே எதையும் எடுத்துக்கொள்ள மறுத்தார்கள். அங்கே பேசவே அப்பொழுது சந்தர்ப்பம் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். எதிர்க்கட்சியினுடைய கொள்கையையா ஏற்றுக் கொள்வார்கள். அந்த நிலை இப்போது இல்லை. ஆக, குன்னூரிலே ஒரு பஸ் நிலையம் அமைப்பதற்குப் போதுமான இடத்தைத் தேடி, பல்வேறு கால கட்டங்களிலே அதற்காகப் பல்வேறு முயற்சிகளைச் செய்தும்கூட அந்த பஸ் நிலையத்தை விரிவுபடுத்த முடியவில்லை. காரணம் அங்கிருக்கின்ற தீயணைப்பு நிலையத்தை வேறிடத்திற்கு மாற்ற வேண்டும். அதை வேறிடத்திற்கு மாற்றினால்தான் அங்கே பேருந்து நிலையத்தை விஸ்தரிக்க முடியும். அதற்காகக் கடந்த காலத்திலேயே முயற்சி செய்து, நான் நகராட்சி மன்றத் தலைவனாக இருந்த காலத்திலேகூட, எல்லாக் கட்சிகளையும் சேர்த்து உண்ணா நோன்பு போன்ற போராட்டங்களை நடத்தியும்கூட அந்தத் தீயணைப்பு நிலையத்தை வேறு பகுதிக்கு மாற்ற முடியவில்லை. ஆக, நம்முடைய டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் எப்படியும் மனம் வைத்து— அங்கு 366 இலட்சம் ரூபாயிலே அந்தப் பேருந்து நிலைய விஸ்தரிப்புப் பணி நடக்க இருப்பதால் முன்னுரிமை தந்து அந்தத் தீயணைப்பு நிலையத்தை வேறிடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெங்குமராடா என்ற ஒரு பகுதி. பெரியார் மாவட்டம் மற்றும் கோவைக்குச் சென்று, கோவையிலிருந்து தெங்குமராடாவுக்கு 3 மாவட்டங்களைக் கடந்து போக வேண்டியிருக்கிறது, குன்னூர் தொகுதியைச் சேர்ந்த ஒரு பகுதி தெங்குமராடா என்ற பகுதி. அங்கே போவதற்குப் பாதை சரியாக இருக்காது. ஒரு பெரிய காட்டாறு ஓடும்.

காட்டாற்றிலே எப்பொழுதும் படகு மூலமாகத்தான் செல்ல வேண்டும். அரசுப் பணியாக இருந்தாலும் சரி, எந்தப் பணியாக இருந்தாலும் சரி, அங்கே 4,000, 5,000 பேர் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு, நீண்டகாலமாக அவர்களுடைய கோரிக்கையான பாலம் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தெங்குமராடாவிற்குப் பாலம் கொடுப்பது மட்டுமல்ல; கோத்தகிரி நேரு பூங்கா என்று ஒரு அழகான பூங்கா இருக்கிறது அது பாழ்பட்டு இருக்கிறது. அந்தப் பூங்காவையும் சீர்செய்து தர வேண்டும்.

குன்னூர் பஸ் நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக நம்முடைய அமைச்சரவர்கள் -- உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், நம்முடைய கொறடாவும் வந்து அந்த பஸ் நிலையத்தைப் பார்வையிட்டார்கள். பார்வையிட்டு, திட்டங்களை வகுக்கச் சொல்லி அன்றைய ஆணையாளரையும், மற்றவர்களிடமும் சொன்னதன் காரணமாக, அவர்கள் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். ஆகவே - குன்னூர் பஸ் நிலையத்தினுடைய நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.** சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் விவாதிப்பதற்கு எனக்கு அனுமதி கொடுக்காவிட்டாலும் இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அனுமதி கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையினுடைய பக்கங்கள் 55 ஆக இருந்தது. இந்த நிதிநிலை அறிக்கையினுடைய பக்கங்கள் 49 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. காரணம், இந்த நிதிநிலை அறிக்கையினுடைய பக்கங்களும் குறைவு, செயல்படுத்தக்கூடிய திட்டங்களும் மிகக் குறைவு. சாதாரண ஏழை எளிய கூலித் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், பீடிசுற்றும் தொழிலாளர்கள் போன்ற கிராமப்புற மக்களுக்குச் சாதகமான நிலையில்லை. குறிப்பாக அரசு ஊழியர்கள்,



தொழிலதிபர்கள், வணிகப் பெருமக்கள் ஆகியோருக்கு இந்த நிதிநிலை அறிக்கை சாதகமாக இருந்துகொண்டிருக்கிறது. எது இருக்கிறதோ இல்லையோ முதலமைச்சர் பற்றிய தற்பெருமை அதிகமாக இருக்கிறது. மக்கள் மிகவும் அச்சத்தோடு வாழ்வது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான். உங்கள் அரசு வந்தவுடன் சட்டம் ஒழுங்கு கெட்டுவிடுகிறது. முந்தைய உங்கள் ஆட்சியில் விடுதலைப்புலிகளால் சட்டம் ஒழுங்கு கெட்டு அதனால் பதவியைத் துறந்தீர்கள். இன்றும் தீவிரவாதிகளால் ஆங்காங்கே குண்டுவெடிப்பு ஏற்பட்டு அப்பாவி மக்கள் உயிர் இழக்க நேரிட்டது. தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் வெடிகுண்டு புதையலாக இருப்பதால் அது குடிசைத் தொழிலாக மாறிவிட்டது. மத்திய அரசு எச்சரித்திருந்தும் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்காதது மிகவும் கண்டனத்திற்குரியது. ஆட்சிப் பொறுப்புக்கு வருபவர்கள் முதலில் பொது மக்கள் அச்சமின்றி வாழ வழி காண வேண்டும். இதை உங்கள் அரசு செய்யவில்லை, செய்யப் போவதும் இல்லை.

**திரு. லா. சுந்தானம்:** பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சுந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் இங்குதான் குண்டு வெடிக்கிறது, எங்கு பார்த்தாலும் குண்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். நேற்றைக்குக்கூட ஹரியானா மாநிலத்திலே இரயில் நிலையத்தில் குண்டு வைக்கப்பட்டு அது சேதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அவருக்கு நினைவுகூர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர் பேசுகிறார். அவர் பதில் சொல்வார். திரு. கருப்பசாமி நீங்கள் பேசலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி பேசட்டும். அவரைப் பேசவிடுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** எனவேதான் உங்கள் அரசைக் கலைப்பதற்கு பொது மக்களே குரல் கொடுப்பார்கள். மக்களுக்கு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் முதலில் நிம்மதி வர வேண்டும். அந்த நிம்மதியை உங்கள் ஆட்சியில் கொடுக்க முடியாது. நிம்மதியான ஆட்சியை எங்களுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் மட்டும்தான் கொடுக்க முடியும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், சங்கரன்கோவில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தால் சங்கரன்கோவில் பகுதி மக்கள் ஓரளவுக்குக் குடிநீர் எடுத்து நிம்மதியுடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். அந்த நிம்மதியைக் கெடுக்கும் வகையில் சட்ட அமைச்சர் தொகுதியான ஆலங்குளம் பகுதிக்கு இத்திட்டம்...

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை இவர்களாலேயே தூண்டிவிடப்பட்டு, இப்போது அந்தப் பிரச்சினையே இல்லையென்று முடிவுக்கு வந்த பிறகு மீண்டும் சட்டமன்றத்திலே தொடங்குவது நல்லதா ?

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் சங்கரன்கோவில் பகுதி மக்களுக்குக் கிடைக்கும் தண்ணீர் பாதிப்பு ஏற்படும் என்று பொது மக்களே அஞ்சி ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கடையடைப்பு எல்லாம் நடத்தியுள்ளார்கள். பொது மக்கள் அனைவருக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்பதில் அனைத்திந்திய அ.தி.மு.க.-வுக்கு ஆர்வம் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது போடப்பட்டிருப்பது சங்கரன்கோவில் குடிநீர்த் திட்டமே அல்ல. சேந்தமங்கலம் குடிநீர்த் திட்டம். புதியதாகக் கிணறு வெட்டி அதன்மூலம் கிடைக்கிற தண்ணீரைக் கிராமங்களுக்குக் கொடுப்பதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, இவருடைய தொகுதியிலேயே 20-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. சங்கரன்கோவில் ஒன்றியத்திலேயுள்ள கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மூலியலூர் ஒன்றியத்திலுள்ள கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. குறியங்குளம் ஒன்றியத்தினுடைய கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆலங்குளம்



தொகுதியிலும் சில கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதில் இப்போது கிடைக்கிற தண்ணீரில் துளி அளவுகூடக் குறையாது புதிய கிணற்றிலிருந்து கிடைக்கிற தண்ணீர்தான் பயன்படுத்தப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இந்த அவையில் சொல்ல வேண்டாம். மக்களைத் திசை திருப்ப வேண்டாம் என்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்துள்ளீர்கள். ஒரு கிணறு மட்டும் கூடுதலாக வெட்டுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த ஒரு கிணற்றிலுள்ள தண்ணீரை எடுத்து எப்படி 73 கிராமங்களுக்கும் கொண்டு செல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஒரு கிணற்றிலிருந்து எப்படிக் கொடுக்க முடியும் என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்? இதையெல்லாம் முடிவு செய்ய வேண்டியது பொறியாளர், நீங்களும் நானும் அல்ல.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் தவறான செய்தியைச் சொல்கிறார். 6 கிணற்றிலிருந்து 88 கிராமங்களுக்கும், ஒரு நகரசபைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது கூடுதலாக ஒரு கிணறு மட்டும்தான் வெட்டுவதாக அறிவித்துள்ளீர்கள். ஆகவே, நீங்கள் கூடுதலாக சில கிணறுகளையும் வெட்டுங்கள்.

*பிற்பகல் 12-30*

**மாண்புகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் எவ்வளவு கிடைக்கிறது, அதை எத்தனை கிராமங்களுக்குப் பயன்படுத்தமுடியும் என்பது பொறியாளர்கள் நிர்ணயிக்கிற பிரச்சினை. கருப்பசாமியோ, ஆலடி அருணாவோ நிர்ணயிக்கிற பிரச்சினையல்ல. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவூட்ட ஆசைப்படுகிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியாளர்கள் உண்மையிலேயே சொல்லிவிட்டார்கள்.

மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல், நெஞ்சிலே கைவைத்து சொல்லும் போது, மேலிடத்திலிருந்து பிரஷர் இருக்கும்போது நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது உள்நோக்கம் கற்பித்து பேசுகிற பேச்சு. என்னைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். எங்கள் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தெளிவாக அறிக்கை விட்டு பத்திரிகையிலேயெல்லாம் அந்தச் செய்தி வந்திருக்கிறது. அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள்; இந்த அரசும் ஏற்றிருக்கிறது. இந்தத் திட்டத்தால் எந்தத் திட்டத்தினுடைய பயனும் குறையாது; நிறைவுதான் பெறமுடியுமே தவிர குறையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி, இத்தோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி முந்தைய நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசும்போது, நான் கண்டனம் செய்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சங்கரன்கோவிலுக்குப் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் நான் இந்தத் திட்டத்திற்குக் கையெழுத்திட மாட்டேன் என்ற வாக்குறுதியையும் அளித்துள்ளார்கள். ஆனால், இப்போது அவசர அவசரமாக இந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்திருப்பது சங்கரன்கோவில் மக்களை மிகவும் பீதியில் ஆழ்த்தியுள்ளது. மேலும், எங்களுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடியிருக்கிறார்கள், "உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே" என்று அருமையாகப் பாடியிருக்கிறார்கள். இதைச் சட்ட அமைச்சர் அவர்கள் பின்பற்ற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுக்கு, "சிரித்து வாழ வேண்டும்; பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே" என்றும் பாடியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய பாடலின் உட்கருத்தை நீங்கள் பின்பற்றினால் போதும்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஏமாறாதே, ஏமாற்றாதே" என்றும் பாடியிருக்கிறார். பாயின்ட் ஆப் ஆர்டர், உங்களுடைய கட்சிக்காரர்களுக்கு மட்டும் வாய்ப்புக் கொடுக்கிறீர்களே? எனக்கும் வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி பேசுகிறார். அவருக்குப் பேசத் தெரியாதா? அவர் பதில் சொல்லுவார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், திரு. கருப்பசாமி பேசுகிறார். அவர் பேசும்போது பதில் சொல்லிக் கொள்வார், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசுவதற்கு இடைஞ்சல் செய்யாதீர்கள். அவர் பேசட்டும், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், முதலிலே நீங்கள் உட்காருங்கள். நேரம் ஆகிக் கொண்டே இருக்கிறது. திரு. கருப்பசாமி, நீங்கள் பேசப்போகிறீர்களா இல்லையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற எதிர்க்கட்சிகளுக்கெல்லாம், பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டால் கொடுக்கிறீர்கள். எனக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். திரு. அழகிரிக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் கொடுக்கிறீர்கள்; திரு. சொக்கருக்கு பாயின்ட் ஆர் ஆர்டர் கொடுக்கிறீர்கள். எனக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் கொடுக்க மாட்டேன் என்கிறீர்களே? எங்களுடைய கட்சிக்காரர் பேசும்போது நான் பேசக்கூடாது என்று எந்த விதியிலேயும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் தயவுசெய்து அமரவும். திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் நிலவரியை இரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். ஆனால், இப்போது

விவசாயிகளிடமிருந்து நிலவரி கெடுபிடி வசூல் செய்துகொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய மக்களுடைய கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குரல் கொடுத்தார்கள். இப்போது மேலும் அதிகமான சுமையைச் சுமத்துகிறீர்கள் என்ற கருத்திலே விவசாயிகள் மனவேதனையோடு இருந்து வருகிறார்கள்.

அதிக மழையால் பாதிப்பு ஏற்பட்டு விவசாயப் பயிர் நிலங்களில் மண் அரிப்பால் மண்மேடு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இன்னும் நிவாரணத்தைக் கொடுக்க முடியவில்லை. அதிகமான மழையால் கால்நடைகள் இழப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ஆடுகள் இறந்துபோயின. இறந்த ஆடுகளுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட நிவாரணத்தையும் கொடுக்க முடியவில்லை.

சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இலவச வேஷ்டி சேலையும் கொடுக்க முடியவில்லை. என்னுடைய தொகுதியில் ஆடு மேய்ப்பவர்கள் கிடைகோமுகள் அனைவரும் ஒன்றுகூடி இன்னும் தாமதம் இல்லாமல் உடனடியாக நிவாரணத்தை வழங்கவில்லை என்றால் போராட்டம் செய்வோம் என்றே குரல் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

மேலும், தற்போதுள்ள மின்தடையின் காரணமாக தமிழகம் முழுவதும் இருளில் மூழ்கியிருக்கின்ற பட்சத்தில், தமிழ்நாட்டு மக்களுக்காக எங்கள் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டதன்பேரில் பற்றாக்குறையான 300 மெகாவாட் மின்சாரத்தில் 200 மெகாவாட் மின்சாரம் உடனடியாக விடுவிக்கப்பட்டதாக அறிவித்துள்ளார்கள். தாமதத்திற்குக் காரணம் மாநில அரசுதான் என்று மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மேலும், இராமகுண்டம் மின்நிலையம் மூலம்தான் வழங்க முடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது இராமகுண்டம் மின்நிலையம் அடிக்கடி மின்சாரக் கோளாறினால் ட்ரிப் ஆனதன் காரணமாக உடனே வழங்க முடியவில்லை, பழுதடைந்த மின்சேகரிப்பு கெப்பாசிட்டர் இயந்திரத்தை அரசு புதுப்பிக்கவில்லை, இதற்காக மத்திய அரசு அளித்த 20 கோடி ரூபாயை இராணுவத்திற்குச் சொந்தமான மொபைல் கெபாசிட்டர்-ஐக் கொண்டு வந்து, அதன் மூலமாக 200 மெகாவாட்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முழு விவரம் தெரிந்துகொண்டு பேசுவது நல்லது. இராமகுண்டத்திற்கு மத்திய அரசு நிதி கொடுத்திருக்குமேயானால், அதைச் செலவு செய்ய வேண்டியது ஆந்திர அரசாங்கம்தானே தவிர, தமிழக அரசாங்கம் அல்ல.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 300 மெகாவாட் மின்சாரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். தமிழகத்தில் இருளை நீக்கி ஒளியேற்ற முயற்சி எடுத்தார்கள். எங்கள் பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி அவர்களுக்கும், அவர்களுடைய கோரிக்கையை ஏற்ற மத்திய அமைச்சர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்தின் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே எங்களுடைய பொதுச் செயலாளர் முதலமைச்சராக இருந்த காலத்தில், திருச்செந்தூர் தொகுதி, குலசேகரப்பட்டினத்தில் கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு அமெரிக்காவிலிருந்து மூன்று விஞ்ஞானிகள் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு, இந்தியாவிலேயே அந்த இடம் அருமையான இடம் என்று அப்பொழுது தெரிவித்து, அதற்கு தமிழக அரசு அனுமதித்தால் மூன்றே ஆண்டுகளில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடலாம் என்று அப்பொழுது அந்த விஞ்ஞானிகள் கூறியிருந்தார்கள். அதற்காக எங்களுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்திற்கு ஒப்பந்தம் செய்திருந்தார்கள். ஆனால், இப்பொழுது இந்த ஆட்சி வந்தவுடன், அந்தத் திட்டத்தை இரத்து செய்துவிட்டார்கள். காரணம், எங்களுடைய பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்று நினைத்து, நீங்கள் அதை ரத்து செய்துவிட்டீர்கள்.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் பொது விநியோகம் பற்றிக் குறிப்பிடும்போது அரிசி விலையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. முந்தைய நிதிநிலை அறிக்கையில் பொது விநியோகம் பற்றிக் குறிப்பிட்டு விலைவாசி குறையும் என்று அறிவிப்புச் செய்துள்ளீர்கள். இப்பொழுது தமிழகத்தில் ஓரளவு மழை பெய்து அதிகமாக நெல் விளைந்திருக்கிறது. இருந்தாலும் அரிசி விலை குறையவில்லை. எங்கள் பகுதியில் வழங்கப்படும் அரிசியின் தரம் பற்றிச் சொல்லவேண்டுமேயானால், அதைச் சாப்பிடக்கூட முடியாது. அவ்வளவு துர்நாற்றம் வீசுகின்ற அரிசியாக இப்பொழுது என்னுடைய தொகுதியில் வழங்கப்படுகிறது. அந்த அரிசியை இப்பொழுது

நான் நேரடியாகக் கொண்டு வந்திருக்கிறேன், (ஒரு பிளாஸ்டிக் பையில் இருந்த அரிசியைக் காண்பித்தார்) இந்த அரிசி இரண்டு கலராக இருக்கிறது. கருப்பு, சிவப்பாக இருக்கிறது. இதை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த அரிசியை மாற்றுங்கள் என்று தமிழக மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அந்த அளவுக்கு துர்நாற்றம் உள்ள அரிசியைக் காலி செய்யவேண்டும், குறிப்பாக, ஏழையெளிய மக்கள் அரிசி வாங்குவதற்குக் கடைக்குச் செல்ல முன்வருவதில்லை.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி அரிசியைக் காண்பிப்பதற்கு முன்பு உங்களிடத்திலே ஏற்கெனவே அனுமதி பெற்றிருக்கிறாரா? இது ஏற்கெனவே இருந்த ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட அரிசியா? அதைக் கொண்டு வந்து காண்பித்துக் கொண்டிருக்கிறாரா என்று நமக்குத் தெரியவில்லை. இது இந்த ஆட்சியில்தான் கொடுத்தது என்பதற்கு என்ன ஆதாரம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி அவர்கள் இதுசம்பந்தமாக என்னிடம் முன்கூட்டியே எதுவும் தெரிவிக்கவில்லை, என்னிடம் காண்பிக்கவும் இல்லை, அனுமதியும் பெறவில்லை.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புளியம்பட்டி கிராமத்தில் வழங்கப்பட்ட அரிசி, எங்கள் குடும்பத்தில் வாங்கியது. அதைத்தான் கொண்டு வந்திருக்கிறேன். இதுபோல என்னுடைய தொகுதி முழுவதும் இருந்து கொண்டிருக்கிறது. இதை உடனடியாக மாற்றவேண்டும், துர்நாற்றம் உள்ள அரிசியை மாற்றுங்கள், மாற்றவில்லையென்றால் தமிழக மக்கள் அதற்குத் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி, நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அரிசி கருப்பு சிவப்பாக இருக்கிறது என்று



திரு. சொ. கருப்பசாமி சொன்னார். அது அரிசியாக இருப்பதால், இடையிலே வெள்ளையும் இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டைப் பற்றிச் சொல்லவேண்டுமேயானால், ஏற்கெனவே முந்தைய நிதிநிலை அறிக்கையிலே 3 வண்ண அட்டை என்று அறிவித்தீர்கள். இப்பொழுது இரு வண்ண அட்டை என்று சொல்கிறீர்கள். வண்ணம்தான் குறைந்திருக்கிறதே தவிர, கார்டு கொடுக்கப்படவில்லை. ஒரு சாதாரண ரேஷன் கார்டுகூட கொடுக்க முடியாத அரசு எதுவென்றால், அது இந்த அரசுதான்.

அடுத்து, வட்டாட்சியர் அலுவலகத்தில் நிரந்தர சாதிச் சான்றிதழ் கொடுப்பதில்லை, காரணம் கேட்டால், அட்டை இல்லை என்று சொல்கிறார்கள், மேற்கொண்டு ஏதாவது கேட்டால், இதையெல்லாம் மேலிடத்தில் சொல்லுங்கள், எங்களுக்கு வேறு வழியில்லை என்று தாசில்தார் அலுவலகத்தில் பேசப்பட்டு வருகிறது.

அதுபோன்று, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற திட்டத்தில் என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தேன், ஆனால், ஒதுக்கப்பட்ட 23 இலட்சம் ரூபாயையும் ரோடு போடுவதற்கு மட்டுமே எடுத்துக் கொண்டார்கள். இதில் என்ஜினியர், பி.டி.ஓ. மற்றும் சேர்மன் மூவரும் என்னிடத்தில் எந்த வேலை பற்றியும் கேட்கவில்லை. நான் முறையாக முன்னுரிமை கொடுத்து, என்னுடைய தொகுதியில் தேர்வு செய்த களப்பாகுளம் ஊராட்சியில் 6 கிராமங்களை உள்ளடக்கிய அந்தப் பகுதியில், 4 கிராமங்களில் குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது என்பதால், அந்த 4 கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியோ அல்லது தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியோ கட்டுவதாக நான் வாக்குறுதி கொடுத்திருந்தேன். ஆனால், அந்தத் திட்டத்தைப் பற்றி என்னிடத்திலே கேட்காமலே செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் குடிநீர்த் திட்டம் என்பது கூட்டுக் குடிநீர் திட்டமா, தனித்த திட்டமா, புதுப்பிக்கிற திட்டமா என்பதை ஆய்வு செய்து

அந்தத் துறையே முழு பங்கெடுத்துச் செய்வதற்கு முழு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதிலே அவர் இணைந்து வர மாட்டார். அங்குக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டில் இணையாது. தனித்தே நிதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் துறையினர் வேலையைத் தொடங்குவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி, ஒரு வரியில் பேசி முடியுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** அந்தத் திட்டத்தில் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. இந்தத் திட்டத்திலாவது தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். மேலும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லி முடியுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** எனது தொகுதியில் நீண்ட பகுதியை உள்ளடக்கியது சங்கரன்கோவில் காவல் சரகம். குருவிக்குளம் கிராமத்தில் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று முந்தைய ஆண்டிலேயே நான் கேட்டிருந்தேன். இந்த ஆண்டில் அது நிறைவேற்றித் தரப்படுமென்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். எங்கள் பகுதிகளிலே மின்சார வெட்டு காரணமாக கொலை, கொள்ளை போன்றவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சென்ற வாரம் மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று தீ வைத்து கொளுத்திவிட்டார்கள். பணத்திற்காகக் கிராமத்திற்குச் செல்கின்ற வழியிலே கொலை செய்யப்பட்டு, இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. தாலுக்கா



அலுவலகத்திலே தாசில்தார் மேசையில் வெடிகுண்டு வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்னும் இதைக் கண்டுபிடிக்கவில்லை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சி-2-ன் சார்பாக எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

கடந்த தேர்தலானது வதந்தியைப் பரப்புபவர்களுக்கு வாழ்வுமாய், மக்களின் வசதிகளைப் பெருக்கியவர்களுக்குத் தாழ்வுமாய் அமைந்துவிட்ட போதிலும், "The Federal Government is the people and the Budget is a reflection of their mind." என்று ஒரு முறை John F. Kennedy அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்கள். அதைப்போல இன்றைக்கு மக்கள்தரின் ஜனநாயக அரசாங்கம்; அவர்களுக்குத் திட்டப்படுகின்ற வரவு-செலவுத் திட்டம்தான் அவர்களுடைய தேவைகளுடைய பிரதிபலிப்பு என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையிலே அவரவர்களுடைய தேவைகளை நினைவிலே வைத்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகச் சிறப்பாக இந்த வரவு-செலவுத் திட்டத்தை அளித்து இருக்கிறார்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும்.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் குறிப்பிட்டு, ஒரு முறைச் சொன்னதைப் போல,

*பாலென அழுவோர்க்கு பால் தருவோம்*
*பசும் கூழெனத் துடிப்போர்க்கு சோறிடுவோம்*
*எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்*
*இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்*

என்று சொன்னதைப் போல, அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரும்பாடுபட்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தை இங்கே அளித்திருப்பதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வரவேற்பையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட இந்த ஆட்சியைத்தான் சில பேர்கள் குறை சொல்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரிய பதவிக்கு, உயர்ந்த பதவிக்குச் சென்றாலும் அவர்களுடைய எண்ணங்களெல்லாம் கீழ்நோக்கி இருப்பதை நாம் இன்றைக்குக் காண முடிகிறது. அந்த வகையிலே இங்கே மத்திய மின்துறை அமைச்சராக இருக்கின்ற மரியாதைக்குரிய திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்தபோது ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழக மக்களை தி.மு.க ஆட்சியிலிருந்து கூடிய விரைவிலே விடுவிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவருடைய பேச்சு குறித்து, மாநிலங்களவையிலே இன்றைக்கு மதிப்புக்குரிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களுடைய கேள்விக்கு பதில் அளிக்கின்றபோது விடையைத் தந்திருக்கிறார்கள். அதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

"The Prime Minister's statement came after Congress Member Pranab Mukherjee drew his attention to Power Minister P.R. Kumaramangalam's reported statement in Chennai yesterday that the people of Tamil Nadu would soon be relieved of the D.M.K. Government."

*பிற்பகல் 12-45*

அதற்கு மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, — "Mr. Vajpayee said his Government was opposed to imposition of President's rule in any State"— என்று திட்டவட்டமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிலருக்கு இந்நேரம் அவர்கள் எண்ணத்திலே இடி விழுந்திருக்கும். என்ன செய்வது என்று தெரியாமல்கூடத் தவித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆட்சி ஒன்றும், கவிழ்த்தால் கவிழ்ந்து போவதற்குக் காகிதப் கப்பல் அல்ல. கவிழ்ந்தாலும் கவிழாத கட்டுமரம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அழித்தாலும் அழிந்து போவதற்கு இது ஒன்றும் அப்பளம் அல்ல. அசைத்தாலும் அசைக்கமுடியாத அற்புதமான செஞ்சிக்கோட்டை, இந்த ஆட்சி என்பதை நான் இந்தநேரத்திலே உறுதியாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஊன்றுகோலாலே நடந்து கொண்டிருப்பவர்கள் ஒழுங்காக நடந்து கொண்டிருப்பவர்களைப் பார்த்து 'வீழ்த்திக் காட்டுகிறேன் பார்' என்று வீண் ஜம்பம் பேசுவதைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் யாரும் தயவு



செய்து இப்படிப் பேசாமல், பொறுப்பானப் பதவியிலே இருக்கிறபோது பொறுப்போடு சில கருத்துக்களைச் சொல்வது நலமாக இருக்கும். இன்றைக்குக்கூட மத்திய மின்துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய தேவைக்காக மின்சாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக, நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல, இன்றைக்குத் தமிழகத்தினுடைய திட்டங்களாக, அதாவது குறைந்தகால மின் உற்பத்தித் திட்டமாக 20 திரவ எரிவாயுத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால், போதுமான அளவில் மத்திய அரசாங்கமானது திரவ எரிபொருளைத் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யாத காரணத்தினாலே ஐந்தே ஐந்து மின் திட்டங்கள் மட்டும் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட முறையிலே மத்திய ஆட்சியிலே பங்கேற்றுக் கொண்டிருப்பவர்கள் தமிழகத்தினுடைய நலனைக் கருத்தில் கொண்டு இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து திரவ எரிபொருளைப் பெற்றுத் தருவதற்கு தங்களுடைய ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்பதை இந்தநேரத்திலே வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பொதுவாக நாங்கள் முன்னமே நன்றி சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் சில நேரங்களிலே அவருக்கு மனவருத்தம் வருவது இயல்பாக ஆகிவிட்ட ஒன்று. ஆளுநர் உரையின்போது மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இருபது சதவிகிதம் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடி உயிர் நீத்த அந்தத் தியாகிகளுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்று நான் வைத்த வேண்டுகோளை ஏற்று, தாயுள்ளத்தோடு, தலா ஒரு இலட்ச ரூபாயை அந்தக் குடும்பங்களுக்கு வழங்கி இருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் மீண்டும் மீண்டும் என் சார்பாகவும், அந்த மிகப் பிற்படுத்தப்பட்ட வன்னியர் சமுதாயம் சார்பாகவும் நன்றியை புலப்படுத்திக் கொள்கிறேன்; தெரிவித்துக் கொள்கிறேன்.

1989-லே எங்களுடைய இருபது சதவிகிதக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதும் கலைஞர் அரசுதான். 1997-லே இந்தக் கோரிக்கைகளுக்காகப் போராடிய அந்தத் தொண்டர்கள்மீது போடப்பட்ட பொய் வழக்குகளைத் திரும்பப் பெற்று, ஏறத்தாழ ஆராயிரத்திற்கும் மேற்பட்ட அந்தத் தொண்டர்களை விடுவித்ததும் இந்தக் கலைஞர் ஆட்சிதான். அதேபோல, 1998-லே அந்தச் சமூக நீதிப் போராளிகளை அங்கீகாரம் செய்து, அவர்களுடைய குடும்பங்களுக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதி

வழங்கியிருப்பதும் இதே கலைஞர் ஆட்சிதான். ஆக, சில நேரங்களிலே சில பேர்கள் வசதிக்காக மறந்துவிடலாம். ஆனால், வன்னியர் சமுதாயம் அதை ஒருபோதும் மறக்காது; நன்றியுணர்வோடு நடந்து கொள்ளத் தயங்காது என்பதை நான் இந்தநேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ப்பவர் யார், வெட்டுகிறவர் யார் என்கிற வேறுபாடு தெரியாதது ஆடு. அதேபோல, வன்னியர் சமுதாயம் எடுப்பார் கைப்பிள்ளையாகச் சில நேரங்களிலே போய்விடலாம். ஆனாலும்கூட, நம் தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; வசதிபடைத்தவர்களுக்குப் பாடுபடுவதற்கு பல தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒடுக்கப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயமான எங்களைப் போன்றவர்களுக்காகப் பாடுபடுவதற்கு உள்ள ஒரே நம்பிக்கை நட்சத்திரம் நீங்கள்தான் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று சொல்வார்களே, அதேபோல, 'என் கடமை தியாகிகளை மதிப்பதே' என்கின்ற அளவிலே இந்தக் குடும்பங்களுக்கெல்லாம் நீங்கள் வாரி வழங்கியிருக்கின்ற நிதியுதவிக்காக நாங்கள் என்றைக்கும் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம். அதைவிட, இதை ஒரு சமூகநீதிப் போராட்டமாக அங்கீகரித்திருக்கிறீர்களே, அந்த உயர்ந்த உள்ளத்தைத்தான் நாங்கள் இன்றைக்கு நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். இந்தச் சமுதாயம் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது. மண்ணைக் கிளறி வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு மகுடாபிஷேகம் செய்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவானோ அதைவிட பெருமகிழ்ச்சியை அடைந்து, இன்றைக்கு அந்தச் சமுதாயமே உங்களை மகிழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-50*

தமிழக முதல்வரே, தமிழ் இனத்தின் மஞ்சள் மெழுகுவர்த்தியே, தஞ்சைத் தரணியின் தமிழேர் உழவரே, நீங்கள் வாழ்கின்ற நாட்களோடு, எங்களது வாழ்நாட்களையும் சேர்த்து, பல்லாண்டு வாழ்ந்து, இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு நீங்கள் பாடுபட வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் சட்டம் இயற்றுகின்றபோது, பத்தாண்டு காலத்திற்குள்ளாக, 14 வயது நிரம்பியவர்களுக்குக் கல்வி வழங்கப்படும் என்ற உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது. ஆனால், பல மாநிலங்களிலே அது கனவாகவே



இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு, அந்த அரசியல் சட்டத்திலே தரப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றுகிற ஒரு மாநிலமாக, தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்கிற காரணத்தினாலேதான், இன்றைக்கு, தமிழ்நாட்டிலே தொடக்கப் பள்ளிகளே இல்லாத நிலை வரவேண்டாம் என்பதற்காக, 700 குக்கிராமங்களிலே, தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குகிற திட்டத்தினை அறிவித்திருக்கிறீர்கள். அதையும் நான் பாராட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய மக்கள் காவலர் டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள் அடிக்கடி சொல்வதை எல்லாம் நிறைவேற்றித் தருகின்ற ஒரே முதல்வர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் இந்தநேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தயவுசெய்து ஒன்றைக் கவனிக்க வேண்டும். அடிக்கடி கிராமப்புற முன்னேற்றத்தைப் பற்றி டாக்டர் ஐயா பேசுவார். அடித்தள மக்களுடைய முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவார். இன்றைக்கு அமைந்திருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, ஐந்தாம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகம் வழங்கி இருப்பது, அனைத்துத் தொழில் கல்வியிலும் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கியிருப்பது, அரசு விடுதியில் சேரும் ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வருமான உச்சவரம்பை ரூ. 50 ஆயிரமாக அறிவித்திருப்பது இவையெல்லாம் யாருக்காக என்பதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, டாக்டர் அவர்கள் என்னென்ன கோரிக்கைகளையெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறாரோ, கொடுத்துக் கொண்டிருக்கிறாரோ, அவற்றையெல்லாம் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஊனமுற்றவருக்குத் தரப்பட்ட ஊன்றுகோலைப் போல, இந்த உன்னதமான திட்டங்கள் எல்லாம் எப்படிக் கிடைக்கின்றன? ஒரு ஆதிக்க சக்தி, இன்றைக்கு முதலமைச்சர் பதவியிலே இருந்தால், இத்தகைய வசதிகள் நமக்குக் கிடைக்குமா? ஆனால், நாதியற்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகக் கலைஞர் அவர்கள் இன்றைக்கு வீற்றிருக்கிற காரணத்தினாலேதான், இத்தகைய வசதிகள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்தநேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான வேண்டுகோளை நான் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், பயன்பெறுகின்ற வகையிலே, 75 சதவிகிதம் வருகைப் பதிவு இருந்தாலே, மூன்றாம் வகுப்பு வரையிலே, 'பாஸ்' போட்டுவிடுவார்கள்; தேர்ச்சியைத் தந்து விடுவார்கள். அதற்குப் பின்னாலே வந்த அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியிலே, அதனைப் பெருந்தன்மையோடு எடுத்து விட்டார்கள். ஏனென்றால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் படித்து விடக்கூடாது என்பதற்காக அப்படிப்பட்ட ஒரு சங்கடமான முடிவு, அவருடைய ஆட்சியிலே எடுக்கப்பட்டது. இதனால், பல மாணவர்கள், இடையிலே படிப்பை நிறுத்தவேண்டிய கொடுமை ஏற்பட்டது. இதனாலேகூட, குழந்தைத் தொழிலாளர்கள் முறை உருவாகக்கூடிய ஒரு சூழ்நிலை வந்தது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பி நான் கேட்டுக்கொள்கிறேன்; மீண்டும், நீங்கள் உங்களுடைய ஆட்சியிலே, மூன்றாம் வகுப்பு வரையிலே, Attendance — அதாவது, மாணவர்களின் வருகைப் பதிவு 75 சதவிகிதம் இருந்தாலே, அவர்களுக்குத் தேர்ச்சி அளிக்கின்ற ஒரு முறையினை நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒற்றைச் சாளர முறையினைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது கல்வியிலே ஒரு புரட்சி; சமூக நீதியிலே ஒரு புரட்சி என்று சொன்னால், இந்த ஒற்றைச் சாளர முறையினை, தொழில்நுட்பப் பயிலகங்களிலேயும் கொண்டு வந்திருப்பதைப் பெருமையாக நாம் நினைத்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். ஏனென்று சொன்னால், பண வசதி இல்லாத மாணவர்கள், படிக்கச் செல்கிறபோது, பணம் பறிக்கின்ற கொடுமையே, ஒரு கல்விக் கொள்ளையே தமிழ்நாட்டிலே; நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அந்தக் கல்விக் கொள்ளையைத் தடுத்து நிறுத்துகின்ற அளவுக்கு இந்த ஒற்றைச் சாளர முறையானது, அடித்தள மக்களுடைய மாணவர்களின் வாழ்வுக்கு வசதியாகச் சிறப்பாகக் கைகொடுத்து உதவும் என்பதால், இதனை நான் பாராட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், ஒரு வேண்டுகோளையும் நான் வைக்க விரும்புகிறேன். மருத்துவக் கல்லூரிகளிலேயும்—ஏனென்றால், இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளுக்கு ஏழைகள் சென்றால், ரூ. 20 இலட்சம் என்று தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே ரூ. 15 இலட்சம், கேட்கிறார்கள்; ஆகவேதான், இந்த மருத்துவக் கல்லூரிகளிலும்கூட— நீங்கள் ஒற்றைச் சாளர முறையிலே தேர்வு முறைகளைக் கொண்டு



வந்தால், உண்மையிலேயே ஏழை, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அது வசதியாக இருக்கும் என்பதை நான் இந்தநேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு அரசுத் துறைகளிலே மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படுவதுதான் சரியாக இருக்கும். தனியார் துறையில், வணிக நோக்கம் இருக்குமே தவிர, சேவை நோக்கம் இருக்காது. இதனால் செலவினம் இருந்தாலும்கூட பரவாயில்லை என்று சொல்லி, எப்படி திருச்சியிலே கி.ஆ.பெ. அவர்களுடைய பெயரிலே அரசாங்கமே மருத்துவக் கல்லூரி நடத்துகின்றதோ, அதேபோல், படிப்படியாக, அரசாங்கமே, சுயநிதிக் கல்லூரிகளிடம் விட்டுவிடாமல், அந்த மருத்துவக் கல்லூரிகளை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பல பேர் சமூக நீதி, சமூக நீதி என்று பேசுகிறார்கள். ஆனால், அந்தச் சமூக நீதியைப் பற்றிப் பேசுகிறவர்கள், பல சுயநிதிக் கல்லூரிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். நான் கேட்பதெல்லாம் என்னவென்றால், சமூக நீதியைப் பற்றிப் பேசுகிறவர்கள், அப்படிப்பட்ட தங்கள் கல்லூரிகளிலே, ஏழை மாணவர்களுக்கு 10 சதவிகிதத்தை ஒதுக்கி, சமூக நீதியை அவர்கள் நிலைநாட்டுகிறார்களா என்று பார்த்தால் இல்லவே இல்லை. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்குப் புதிய புதிய மடாதிபதிகளாக மாறி, சமூக நீதியைப் பற்றி வாயளவிலே பேசுவதோடு நிற்கிறார்களே தவிர, அவர்கள் செயலளவில் செய்து காட்டுவதாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

மாநில அளவிலே இன்று நிதிநிலை நெருக்கடி இருக்கின்ற காரணத்தினாலே நான் ஒரு வேண்டுகோளை மாநில அரசின் மூலமாக, இங்கே இருக்கின்ற என்னுடைய மதிப்பிற்குரிய பாட்டாளி மக்கள் கட்சி-1-ன் உறுப்பினர்கள் வாயிலாக வைக்க விரும்புகிறேன். என் அருமை நண்பர் திரு. தலித் எழில்மலை அவர்கள் இன்றைக்கு மத்தியிலே சுகாதாரத் துறை அமைச்சராக இருக்கிறார்கள். இன்று தமிழ்நாடானது பல வகையிலே புறக்கணிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய செலவினத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மருத்துவ பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி மருத்துவமனை ஒன்று பாண்டிச்சேரி ஜிப்மெரிலே இருக்கிறது. அதேபோல சண்டிகரிலே இருக்கிறது. கல்கத்தாவிலே இருக்கிறது. பிற மாநிலங்களில் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் அப்படிப்பட்ட ஒரு மருத்துவமனை

இல்லை. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், அதேபோல மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், பாட்டாளி மக்கள்-1-னுடைய உறுப்பினர்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. தலித் எழில்மலை அவர்கள் அங்கே சுகாதாரத் துறை அமைச்சராக இருப்பதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். அவருக்கு நான் வாழ்த்தும் அனுப்பியிருக்கிறேன். மீண்டும் அவரைப் பயன்படுத்தி தமிழ்நாட்டுக்கு, சென்னைக்கு அருகிலே, கிழக்குக் கடற்கரை சாலையோரத்திலே, மருத்துவர்கள் எல்லாம் வந்து போவதற்கு வசதியாக இருப்பது போல மாமல்லபுரம் அருகே இப்படிப்பட்ட மருத்துவ பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி மருத்துவமனை ஒன்றை நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தளவிலே இன்றைக்கு நீங்கள் கல்கியினுடைய நூலுக்கும், திரு. வி. க. வினுடைய நூல்களுக்கும் நிதியுதவி வழங்கியிருக்கிறீர்கள். அதேபோல சுதந்திரப் போராட்டத் தியாகி ஜமதக்கினி அவர்கள் 'மூலதனம்' என்ற நூலை மொழி பெயர்த்திருக்கிறாரே, காரல் மார்க்ஸினுடைய 'மூலதனம்' என்ற நூலை மொழி பெயர்த்திருக்கிறாரே, அதனை வெளியிடுவதற்கும் நிதியுதவி வழங்கியிருக்கிறீர்கள். இந்த ஜமதக்கினி குடும்பமானது சுதந்திரப் போராட்ட வரலாற்றிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த குடும்பம். இதுவரையிலே அது பல பேருக்குத் தெரியாது. தொடர்ந்து 30 ஆண்டுகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிறையிலே இருந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது ஜமதக்கினியினுடைய குடும்பம் ஒன்றுதான் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்தக் குடும்பமானது 1927-லே நீலன் சிலையை அகற்றுகின்ற சத்தியாகிரகப் போராட்டத்திலே ஈடுபட்டதால் ஜமதக்கினி, சிறைக்குச் சென்றார். அவருடைய மாமியார் அஞ்சலையம்மாள் அவர்கள் தேவனாம்பட்டி என்ற இடத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகப் போராட்டத்திலே கலந்து கொண்டு, ஒரு கக்கத்திலே கைக்குழந்தையையும், ஒரு கக்கத்திலே தேசியக் கொடியையும் வைத்துக் கொண்டு அன்றைக்குச் சிறை சென்றார். சிறை சென்ற முதல் பெண் சத்தியாகிரகி என்ற பெருமைக்குரியவர் அஞ்சலையம்மாள்.

இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமைக்கும் உரியவர். அதேபோல ஜமதக்கினி



அவர்களுடைய துணைவியார் லீலாவதி அம்மையார் அவர்கள் சின்னஞ்சிறு வயதிலே, 9 வயதிலேயே சிறைக்குச் சென்றவர்கள். அப்படிப்பட்ட தியாக வரலாறு படைத்தக் குடும்பம் இதுவரையிலே யார் கண்ணுக்கும் படாமலேயே இருந்தது. ஆனால், ஒரு மாமனிதருக்கு மட்டும்தான் அந்த மிகப் பிற்படுத்தப்பட்ட...... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லீலாவதி என்ற பெயரைக்கூட மகாத்மா காந்தியடிகள்தான் அந்த அம்மையாருக்குச் சூட்டினார் என்ற வரலாற்றுக் குறிப்பையும் நினைவூட்டுகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, நான் அதற்காகத்தான் சொன்னேன். ஒரு மாமனிதர், மிகப் பிற்படுத்தப்பட்ட வன்னியச் சமுதாயத்திலே பிறந்த இப்படிப்பட்ட ஒரு தியாகியை அடையாளம் கண்டெடுத்து இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்பதை நான் இந்தநேரத்திலே நன்றியோடு நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு வேளாண்மையைப் பற்றி இந்த உரையிலே எதுவுமே இல்லை என்று சொன்னார்கள். வேளாண்மைக்கு அடிப்படையாக இருப்பது பாசனத் திட்டம். அதற்காக 352 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 152 திட்டங்களை இன்றைக்குத் தீட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் இதுதான் விவசாயத்திற்கு ஆதாரமான திட்டமாக அமையக்கூடியது என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, விவசாயிகள் கடன் வாங்கச் சென்றால் வங்கிகளிலே தருவதில்லை. இன்று போய் நாளை வா என்று அடிக்கடி சொல்லி அவர்களை அலைக்கழிக்கிறார்களே தவிர யாரும் தருவதில்லை. நான் இந்தநேரத்திலே வேண்டுகோளாக வைக்க விரும்புவது என்னவென்று சொன்னால் இன்றைக்கு வசதி படைத்தவர்கள் நகர்ப்புறங்களில் 'கிரெடிட் கார்டு' மூலமாகப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், விவசாயிகள் கடன்களை வாங்குவதற்கு வங்கிகளுக்குச் சென்றால் அவ்வளவு எளிதாகக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த வசதி படைத்தவர்கள் நகர்ப்புறத்திலே 'கிரெடிட் கார்டு' முறையிலே பொருட்களை வாங்குவதற்கு வழிமுறை இருப்பதைப் போல விவசாயிகளுடைய நிலங்களையும், அந்த நிலங்களிலே

வைக்கின்ற பயிர்களையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு *(மணியடிக்கப்பெற்றது)* இப்போதுதானே தொடங்கினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணக்கிலே எடுத்துக் கொண்டு கேரளாவிலே பஞ்சாபிலே, அரியானாவிலே இருப்பதைப்போல பச்சை அட்டை வழங்கி தேவைப்படுகிற நேரத்திலே அந்த விவசாயிகள், விவசாயக் கடன்களை வங்கிகளிலோ, கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலோ பெற்றுக்கொள்ளும் வகையிலே நீங்கள் ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது' என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கு 'நெய்தவன் கணக்குப் பார்த்தால் நூலிழைகூட மிஞ்சாது' என்பதுதான் நாம் அனுபவரீதியாகத் தெரிந்து கொண்டிருப்பது. எனவே, அவர்கள் மீது பரிவு வைத்து அந்த நெசவாளர்களுடைய குடும்பங்களுக்கும், நலிவடைந்த தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் மாத உதவித் தொகையாக 150 ரூபாய் வழங்கியிருப்பதைப் பாராட்டி வரவேற்கின்ற அதேநேரத்தில் இந்தக் கைத்தறி துணிக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற 22 ரகங்களையும், அவற்றுக்கு மட்டுமே இருக்கிற மாதிரியையும், மில்கள் அவற்றை உற்பத்தி செய்யக் கூடாது என்ற ஒரு தடை இருந்தால்தான் கைத்தறி வளர்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

அடுத்து, இன்றைக்கு தீவிரவாதம் பெருகியிருப்பதற்கு, பெருகிவரும் வேலை இல்லாத் திண்டாட்டம்தான் காரணம் என்று சமூகவியல் அறிஞர்களும், பொருளாதார வல்லுநர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாதிக்கப்பட்ட தொகுதிதான் என்னுடைய ஆண்டிமடம் தொகுதி. ஆகவே, நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, என்னுடைய தொகுதியில் ஒரு சர்க்கரை ஆலையையும், கூட்டுறவுத் துறையிலே ஒரு முந்திரி ஆலையையும் உருவாக்கித் தர வேண்டும் என்பதாகும். அங்கே ஜெயங்கொண்டம் நிலக்கரி சுரங்கத் திட்டம் வருகின்ற காரணத்தாலே, அங்கு ஒரு தொழில் நுட்பப் பயிலகத்தை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்றும் ஆசிரியர் பயிற்சிப்



பள்ளியொன்றை உருவாக்கித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

'ஆண்டிமடம்' தொகுதியின் பெயரே ஆண்டிமடம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். ஆகவே, நான் குறிப்பிட விரும்புகிறேன், ஆண்டி, மடம் கட்டுகின்ற கதையாக என்னுடைய கோரிக்கை ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசின் நிதிநிலையைப் பெருக்குவதற்கு இரண்டு ஆலோசனைகளைச் சொல்ல அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் நிதி நிறுவனங்கள் ஏலச் சீட்டுகளை நடத்துகின்றன. எத்தனை சீட்டுகளை நடத்துகிறார்களோ, அத்தனை சீட்டுக்குரிய முன்பணத்தைக் கட்டிவிட்டுத்தான் அவர்கள் சீட்டுகளை நடத்த வேண்டுமென்பது விதிமுறை. ஆனால், இன்றைக்கு எவரும் அப்படி நடத்துவது கிடையாது. ஏறத்தாழ ஒரு சீட்டுக்கான பணத்தைக் கட்டிவிட்டு 100 சீட்டுகள், 200 சீட்டுகள் என்று நடத்துகிறார்கள். அதனால் அரசுக்கு வரவேண்டிய பல நூறு கோடி ரூபாய் வராமல் வருமான இழப்பு ஏற்படுகிறது. அவற்றையெல்லாம் கணக்கிட்டால், சில கோடி ரூபாயை தமிழக வரவு-செலவுச் திட்டத்தில் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, மோட்டார் வாகனங்களுக்குக் கடன் வழங்குவதற்காக என்று ஏறத்தாழ 50,000 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. பெரும்பாலும் வடநாட்டு மார்வாடிகள்தான் அவற்றை வைத்திருக்கிறார்கள். 10,000 ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வரை அவர்கள் கடன் கொடுக்கிறார்கள். ஒரு லாரிக்கு 4 லட்ச ரூபாய் கடன் தருகிறார்கள் என்றால், ஏறத்தாழ 1½ லட்சம் ரூபாயிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வரை இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக வசூலித்து விடுகிறார்கள். அதனால் கொள்ளை இலாபம் அவர்களுக்குப் போய்ச் சேருகிறது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அந்த இலாபங்களுக்கான கணக்கு வழக்கை அவர்கள் சரியாகக் காட்டுவதில்லை. அத்தகைய இலாபத்தில் 25 சதவீதமாவது மாநில அரசின் வருவாய்க்கு வருவதுபோல் நாம் வழிமுறைகளைக் கண்டாக வேண்டும். ஒரு முறை திரு. பொள்ளாச்சி மகாலிங்கம் சொன்னார். 5 இலட்சம் கோடி ரூபாய் இன்றைக்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் புழங்காமல் முடங்கிக் கிடக்கின்றது என்று சொன்னார். அப்படிப்பட்ட பணத்தை வைத்து, இத்தகைய மோட்டார் வாகன நிதி

நிறுவனங்களை நடத்துகின்ற தனியாரை ஒழித்துவிட்டு, மோட்டார் வாகனங்கள் வாங்குவோருக்கு உதவிகள் செய்வது, அல்லது வட்டிக் கடைகளில், மார்வாடிகளிடம் கடன் பெற்று வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் மக்களை மீட்டு எடுப்பதற்கு நிதியுதவி வழங்குகின்ற நிதி நிறுவனங்களை நடத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்றும் அதன் மூலம் அரசின் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு 1-1-1996 முதல் நீங்கள் வழங்கியிருக்கின்ற சம்பள உயர்வை நான் வரவேற்கிறேன். மத்திய அரசில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் அதே சம்பள விகிதம் மாநில அரசில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிலே, ஏதோ சில சிக்கல்கள் இருப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள் என்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்து, எண்ணெய்க்கு வரி விலக்கு அளித்திருப்பதை வரவேற்கின்ற அதேநேரத்தில், மசாலாப் பொடிக்கும், கையால் செய்யும் சொட்டு நீலத்திற்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிவிட்டது. ஒரு நிமிடத்திற்குள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ் மாநில காங்கிரஸ்காரர்கள் யாரும் இல்லாத காரணத்தால் தாராளமாகப் பேசலாம் என்று நினைத்தேன்.

இன்றைக்கு சாதி, மத வெறி இந்த நாட்டிலே தலையெடுத்து இருப்பதற்குக் காரணம் ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொன்னாலும்கூட, இன உணர்வு, மொழி உணர்வு மங்கிக்கொண்டு வருவதும் ஒரு முக்கியமான காரணமாகும். இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தி ஆதிக்க எதிர்ப்பிலே உயிர் நீத்த மொழிப் போர்த் தியாகிகளுக்காக இந்த ஆட்சியானது சென்னை மாநகரிலே ஒரு நினைவு மண்டபமோ, நினைவுச் சின்னமோ கட்டாயமாக எழுப்பித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிழல் தரும் மரமாக, அகழ்வாரை தாங்கும் நிலமாக, வற்றாத நீர் ஊற்றாக, இந்த மூன்றின் மொத்தத் தொகுப்பாகத் திகழ்ந்து



கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற இந்த வரவு - செலவுத் திட்டம் ஏழைகளின் சொர்க்கம், அரசு ஊழியர்களின் கலியுலகக் கற்பகத்தரு, ஆக்கபூர்வ திட்டங்களின் அமுதசுரபி, அடித்தள மக்களின் அலாவுதீன் அற்புத விளக்கு, மொத்தத்தில் இந்தியாவிற்கே வழிகாட்டி இந்த நிதிநிலை அறிக்கை என்று கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.கே. வீரப்பன்.

***திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையை நாங்கள் எல்லாம் பாராட்டுவது இயற்கை. ஆனால், கீழ்த்தட்டு மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும், வியாபாரிகளும், அனைத்துப் பத்திரிகைகளும், பெரும்பாலான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் பாராட்டும் அளவுக்கு இந்நிதிநிலை அறிக்கையின் தன்மை அமைந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக நல்ல மனம் உள்ளவர்கள் அத்தனை பேரும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறார்கள். நீண்டகாலம் ஆகக்கூடிய பகட்டான திட்டங்களுக்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொது மக்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது என்று மேதகு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருந்த அந்தத் தலையாய கொள்கையிலிருந்து நழுவாமல் இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

பிற்பகல் 1-05

உள்ளாட்சி மன்றங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவினுடைய பரிந்துரைமீது விரைவிலே முடிவு எடுக்கப்படும் என்பது பாராட்டத்தக்கது. சென்ற ஆண்டு உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசின் வரி வருவாயில் 8 சதவிகிதத் தொகை அதாவது ரூ. 663 கோடி பகிர்ந்து அளிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 176 கோடி ரூபாய் அதிகம் சேர்த்து 839 கோடியாக இன்றைக்கு வழங்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும். அது மட்டுமல்லாமல் 10-வது நிதிக் குழுவிலே வழங்கிய மானியத் தொகையான ரூ. 100 கோடியும் உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சித்

தரக்கூடியச் செய்தியாகும். நிர்வாகச் சீர்திருத்தத்திலே கடந்த நிதி நிலை
அறிக்கையிலே அறிவித்தவாறு வருவாய்த் துறை நிருவாகத்தில் ஏற்படும்
காலதாமதத்தைத் தவிர்க்க அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கவும்
முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. சபாநாயகம் அவர்கள்
தலைமையிலே அமைக்கப்பட்ட குழுவினுடைய பரிந்துரைகளை அரசு
பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதும் பாராட்டுக்குரியதாகும். ஊரக
வளர்ச்சியைப் பொறுத்தவரையில் சென்ற நிதியாண்டிலே அண்ணா
மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டத்தை உருவாக்கி அதற்காக
52 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கியிருந்தாலும், 224 கோடி ரூபாய்
மதிப்பீட்டிலே 33,282 பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்ற செய்தி
மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். நடப்பாண்டில் அதற்காக 75 கோடி
ரூபாய் உயர்த்திக் கொடுத்திருப்பது என்பதும் மிக மிகப்
பாராட்டத்தக்கதாகும். நமக்கு நாமே திட்டத்திற்கு என்று சென்ற
ஆண்டு ஒதுக்கியிருந்த 5 கோடி ரூபாய் சிறப்பு நிதியை இன்றைக்கு
10 கோடி ரூபாயாக உயர்த்தி இருப்பதும் பாராட்டத்தக்கதாகும். நம்முடைய
சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டிற்காக, சென்ற
ஆண்டு 25 இலட்சம் ரூபாய் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் நாங்கள் எல்லாம் கேட்காமலேயே ரூ. 5 இலட்சம் கூடுதலாக
உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினராக நான்
இருந்தபோது அந்த நிதி ஒதுக்கீடு செய்தது சென்ற சட்டமன்றத்
தேர்தலிலே மிகவும் பயன்பட்டது. இன்றைக்கு இதற்குத் தனி
முக்கியத்துவம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. ஆக, இதை ரூ. 50
இலட்சமாக உயர்த்திக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். நீங்களாக ரூ.
30 இலட்சம் கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் கேட்பதற்காக ரூ. 10
இலட்சம் உயர்த்தி குறைந்தபட்சம் ரூ. 40 இலட்சமாகக் கொடுத்தால்
சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.
முந்தைய ஆட்சியிலே முடிக்கப்படாத கிட்டத்தட்ட 1,14,143 வேலைகளில்,
அதாவது தொகுப்பு வீடுகள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள்,
பள்ளிக் கட்டடங்கள், பாசனப் பணிகள், மதிய உணவு மையங்கள்,
சாலைப் பணிகள் என்று 1,09,263 வேலைகள் இன்றைக்கு போர்க்கால
அடிப்படையிலே முடிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற இரண்டு
ஆண்டுகளிலே 1,27,832 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.
இந்த ஆண்டு 60,000 தொகுப்பு வீடுகள் கட்டப்படும் என்று
சொல்லியிருப்பது மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். அதுபோல அனைத்து
ஊராட்சி ஒன்றியங்களிலும் வேலை உத்தரவாதத் திட்டத்திற்காக, சென்ற
ஆண்டு 34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதற்கு இந்த ஆண்டு 47.64
கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். அதேபோல



ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலும் சென்ற ஆண்டு 46.78 கோடி ரூபாய் என்பது இந்த ஆண்டு 55.9 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கப்பட்டிருப்பதும் பாராட்டத்தக்கதாகும்.

இப்போது ரூ. 7.28 கோடியில் 20,000 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. அது போதவில்லை என்கிறார்கள். எனவே அதற்காக இன்னும் கொஞ்சம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஊரகக் குடிநீர்ப் பணிகளைப் பொறுத்தமட்டில் என்னுடைய மாவட்டத்தில் 90 சதவிகிதம் பிரச்சினை தீர்ந்துவிட்டது. புகார்களே இல்லையென்று கூறுகிற அளவிற்கு நிலைமை இருக்கின்றது. சென்ற ஆண்டு 250 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கினார்கள். இந்த ஆண்டு அதை ரூ. 330 கோடியாக உயர்த்தியிருப்பது பாராட்டத்தக்கதாகும். நான் இந்தநேரத்திலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அடுத்த தேர்தல் வருவதற்குள்ளாக இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அத்தனையும் முடிவு பெறுகிற வகையிலே குடிநீர் வடிகால் வாரியம் வேலைக்ளைச் செய்து முடிக்க வேண்டும் என்றும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. நா. பெரியசாமி தலைமை]

பொது விநியோகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஓரளவு பிரச்சினை இல்லை. வேண்டிய இடங்களில் எல்லாம் பகுதி நேரக் கடைகள் இருக்கின்றன. மேலும் இன்றைக்கு அனைத்து நியாய விலைக் கடைகளிலும் புகார் புத்தகம் இருக்கிறது. அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி நிர்வாகத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் நியாய விலைக் கடைகளைப் பார்வையிடலாம் என்ற உரிமை பாராட்டத்தக்கதாகும். இந்தநேரத்திலே நான் உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நிறையப் பேருக்கு ரேஷன் கார்டு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, புதிய ரேஷன் கார்டுகளை விரைவிலே வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில் உலக வங்கி நிதி உதவி ரூ. 1400 கோடியையும், ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் நிதியுதவி ரூ. 115 கோடியையும் பயன்படுத்தி சென்ற ஆண்டு 288 ஏரிகளைச் சீரமைக்க நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு நிதி வழங்கினார்கள்.

சென்ற ஆண்டு தேவைக்கு அதிகமான அளவு மழை பெய்தும்கூட, பல ஆண்டுகளாகத் தூர் வாராத காரணத்தினாலே ஏரிகள் எல்லாம் வறண்டு போன நிலைமை இருந்தது. இப்போது தூர் வாரி இருக்கின்ற காரணத்தினால் ஏரிகளிலே நீர் தேங்குகின்ற வாய்ப்பு இருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 12.89 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். அது குறைவாக உள்ளது. இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பாண்டில் 60 இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் ரூ. 1.48 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் மேலும் 30 கால்நடை மருந்தகங்கள் தொடங்க ரூ. 81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது குறைவாக உள்ளது. சென்ற ஆண்டு கொடுத்ததைப் போலவே நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரை, நடப்பாண்டில் ரூ. 83.49 கோடி செலவில் 216 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருவதாகச் சொல்லப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் மேலும் 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ. 10173 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக 1000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய அனைத்துக் கிராமங்களும் நமது மாநிலத்தில் இணைப்புச் சாலை வசதியைப் பெற்றுவிடும் நிலைமை இருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது வரவேற்கக்கூடியது. அடுத்து வருகின்ற காலங்களில் 500 முதல் 1,000 வரை மக்கள் தொகையுள்ள 4,986 கிராமங்களுக்கு இணைப்புச் சால்லைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருப்பது மிக மிகப் பாராட்டத்தக்கதாகும். கிராமப்புற மக்கள் எல்லாம் கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில்தான் நாங்கள் தார்ச் சாலைகளைப் பார்க்கின்றோம் என்று மிக வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.

உலக வங்கி நிதி உதவியுடன் 750 கோடி ரூபாய் செலவில் அதிக அளவில் போக்குவரத்து உள்ள 750 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்படும் என்று கூறியிருப்பது பாராட்டத்தக்கது. ஹட்கோ மற்றும் நபார்டு நிறுவனத்தின் கடன் உதவியுடன் ரூ. 360 கோடி செலவில் 104 பாலங்கள் கட்டத் திட்டமிட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.



இந்தநேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நாமக்கல் மாவட்ட மக்களின் சார்பாகக் கோரிக்கை ஒன்றை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எல்லா மாவட்டங்களுக்கும் கருணை உள்ளத்தோடு பாலங்கள் கட்டவும், பல்வேறு வேலைகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள். நாமக்கல் மாவட்டத்தில் எந்தத் திட்டத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. நாமக்கல்லையும், கரூரையும் இணைக்கின்ற மோகனூர்-வாங்கல் இடையேயான காவிரியின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம், நாமக்கல், கபிலர்மலை, தொட்டியம், கரூர் பகுதி மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்று இந்தநேரத்திலே மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டம் உங்களால் உருவாக்கப்பட்டது, நீங்கள் பெற்றெடுத்த குழந்தை அது. அது சவலைக் குழந்தையாக ஆகிவிடாத நிலைமையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபற்றிய கருத்துரு நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கிறது. தயவுசெய்து, இந்த ஆண்டாவது அதிக அளவு நிதி ஒதுக்கியோ அல்லது குறைந்தபட்சம் Build Operate Transfer (BOT) என்கிற திட்டத்தின்கீழாவது அந்த வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்து. வரும் ஆண்டில் 3600 புதிய பேருந்துகள் வாங்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது வரவேற்கத்தக்கது. சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும், சட்டமன்ற உறுப்பினர்க்ள் சொல்லுகின்ற வழித் தடங்களில் இரண்டு பேருந்துகளை விடுவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், பாடசாலைகளே இல்லாத குக்கிராமங்கள் தமிழகத்தில் இல்லை என்ற நிலை வரவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. அதுவும் பாராட்டத்தக்க விஷயமாகும்.

சத்துணவுத் திட்டம் என்பது உண்மையான சத்துணவுத் திட்டமாக இருக்க வேண்டுமென்று சொல்லி இரண்டு வாரத்திற்கு ஒரு முட்டை என்பதை வாரத்திற்கு ஒரு முட்டை என்று கொடுத்திருப்பது

பாராட்டத்தக்கதாகும். (மணியடிக்கப்பெற்றது) இதனால், முட்டை உற்பத்தி செய்கின்றவர்கள் நன்றி பாராட்டுகின்றார்கள்.

அதேபோன்று, ஆதிதிராவிடர் நலனுக்காக ரூ. 100 கோடி உயர்த்திக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதேபோன்று, அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்கப்பட்டிருப்பதும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

அதேபோன்று, வரி விதிப்பு பெரிய அளவில் இல்லை என்கின்ற நிலையை உருவாக்க தேங்காய்க் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி ஒரு சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்களின் மீதான வரி 4 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. வணிகச் சின்னம் உள்ள, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கு வரி குறைக்கப்பட்டுள்ளது. வணிகச் சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீமிற்கான வரி 5 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிப்பதை ஊக்குவிக்க எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசித் தவிட்டிற்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சமையலுக்கு பயன்படுத்தப்படும் தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், நல்லெண்ணெயை போன்ற அனைத்து எண்ணெய்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும்.

கணினி மென்பொருளுக்கு வரி விலக்கு அளித்திருப்பது என்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

இறுதியாக ஒன்றை மட்டும் தெரிவித்துவிட்டு என்னுடைய உரையை முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதிப் பிரச்சினை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறேன்.

*பிற்பகல் 1-15*

என்னுடைய தொகுதியிலே பெரும்பாலும் கரும்பு பயிரிடும் விவசாயிகள்தான் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்தாலும்கூட, ஒரு சின்னக் கோரிக்கை, நியாயமான கோரிக்கை, நாம் ஏற்றுக்கொண்ட கோரிக்கை என்னவென்றால், வண்டி வாடகையை ஆலையே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதாகும். இப்போது பத்து கிலோமீட்டர் வரை மட்டும்தான் விவசாயிகள் வண்டி



வாடகையைச் செலுத்தி வருகிறார்கள். இந்த ஒரு கோரிக்கையையாவது முழுமையாக ஏற்றுக்கொள்கிற வகையில், 10 கிலோ மீட்டர் வரை விவசாயிகள் செலுத்திவருகின்ற வண்டி வாடகையை ஆலையே முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்தநேரத்தில் அன்போடு கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைக் கூறி உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் பொன்விழா ஆண்டில் 60 ஆண்டுகால பொது வாழ்வின் அனுபவத்தோடு தமிழகத்தின் நான்காவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, இந்த மாமன்றத்தில் 10-வது நிதிநிலை அறிக்கையை 10-வது முறையாகத் தந்திருக்கிறார்கள். நல்ல உள்ளம் படைத்தவர்கள் வரவேற்று இருக்கிறார்கள். சமுதாயத்திலே அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டி இருக்கிறார்கள். அனைத்துப் பத்திரிகை உலகமும் பாராட்டியிருக்கிறது. ஆங்கிலப் பத்திரிகை சுட்டிக்காட்டியதைப் போல, friendly budget, common man budget என்பது உண்மை. இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாக வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, வரி போடாத நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சில உறுப்பினர்கள் விவசாயிகளுக்கு என்று ஒன்றும் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலம் நினைவூட்ட விரும்புகிறேன். ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்ற வள்ளலாரைப் போல தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகள் வாடிய போதெல்லாம் தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த காலங்களில் ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவுக்கு, கடந்த குறுவையில் 7 இலட்சம் டன் நெல்லை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 200 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாகத் தந்து,

கொள்முதல் செய்து, தஞ்சை மாவட்டத்தினுடைய விவசாயிகளின் வயிற்றில் பாலை வார்த்தார்கள். அந்த நெல்லையெல்லாம், 20 சதவிகிதம், 22 சதவிகிதம் ஈரப்பதம் கொண்ட நெல்லையெல்லாம் அரசாங்கத்தின் மூலம் நேரடியாகக் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வாழ்வளித்தார்கள்.

அதைப்போல, தொடர்ந்து நவம்பர் மாதத்தில் மழை பெய்து, வெள்ளம் வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள், எல்லோரும் அரசு அதிகாரிகளோடு சேர்ந்து சிறப்பான முறையிலே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்காக, வெள்ள நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், 45 கோடி ரூபாய் வெள்ள நிவாரண நிதியாகத் தந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் பார்த்தபோது சம்பா தாளடிப் பயிர்கள் அனைத்தும் நாசமாகி மிகப் பெரிய சேதத்தை தஞ்சை மாவட்டத்தில் உண்டாக்கிய நிலைமை இருந்தது. ஆனால், இன்றையதினம் 10 1/2 இலட்சம் டன் நெல் தஞ்சை மாவட்டத்தில் வாங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பரவலாகப் பெய்த மழையின் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் விளைந்த நெல்லுக்கும், தஞ்சை மாவட்டத்திற்கு வழங்கப்படுவது போன்ற ஊக்கத் தொகை வழங்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது.

அடுத்து, கடந்த காலங்களில் விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை, மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றியதால், விவசாயிக் கடன் சுமை இருப்பது உண்மை. ஆகவே, அந்த விவசாயிகளுக்குக் கடன் கூட்டுறவுக் கடன்களையும் மற்றும் நிலவரி பாக்கியையும் இரத்து செய்ய வேண்டும். அப்படி இரத்து செய்கின்றபோது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பாதிக்காத வண்ணம், நமது அரசே அதற்குத் தனியாக நிதி ஒதுக்கி, விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நமது தலைவர் அவர்கள் பாசனத்திற்கு, மிகச் சிறப்பான முறையிலே, கடந்த ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் பல வடிகால் வாய்க்கால்கள் நவீன புல்டோசர்கள் மூலம் வெட்டப்பட்டன. எங்கெங்கு வெட்டப்பட்டனவோ, அந்த இடங்களில் வெள்ளப் பாதிப்பு இல்லை. இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். அதற்காக தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது பக்கத்து மாநிலமான கர்நாடக மாநிலத்தில், மொத்த நிதிநிலை அறிக்கையில் 30 சதவீதத்தை பாசனத்திற்கென்று ஒதுக்கி இருக்கின்றார்கள். எதிர்வரும் காலத்தில் நம்முடைய தமிழக அரசும் பொதுப் பணித் துறைக்கு பாசனத்திற்கு நிச்சயமாக அதிக நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-20

ஏரிகளைச் சீரமைக்கும் பணி மிகச் சிறப்பாகக் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. ஆனால், ரூ. 12.89 கோடி நிதிதான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எனது திருவையாறு தொகுதியில் 120 ஏரிகளுக்கு மேல் இருக்கின்றன. ஆண்டுக்கு ஓர் ஏரி என்று எடுக்கின்ற அந்தத் திட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி, மிகப் பின்தங்கிய அந்தப் பகுதியில் ஏரிகளைச் சீரமைக்க அதிக நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே—சென்ட்ரல் மெஷின் பிளான்ட்-மத்திய சுடுகலவை இயந்திரம் — மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சாலைகள் போடப்பட்டு வருவதை அறிந்து பொதுமக்கள் அனைவரும் இன்றையதினம் இந்த அரசை மிகவும் பாராட்டுகின்றார்கள். அந்த அடிப்படையில், இன்றையதினம் எனது தொகுதியில் உள்ள தோக்கூர்-அகலப்படுத்தி... ஐயம்பேட்டை சாலை, கல்லணை-பூம்புகார் சாலை, திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலை, தஞ்சாவூர்-பூதலூர் சாலை ஆகியவற்றை அகலப்படுத்தி, தார்ச்சாலையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நாகபட்டினத்திலிருந்து கரூர் வரை, கடந்த மத்திய அரசாங்கத்தில் இருந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மாநில அரசு நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தித் தந்து இருக்கின்றார்கள். பெரும் பொருளாதார மாற்றத்திற்கு அந்தச் சாலை நிச்சயமாக உதவி செய்யும்; மேலும், தஞ்சை மாவட்டத்தினுடைய போக்குவரத்துக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். அதேபோல, பெரம்பலூர்-மானாமதுரை வரையுள்ள சாலையில், பெரம்பலூரிலிருந்து தஞ்சாவூர் வரை உள்ள சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமது ஹட்கோ, நபார்டு மூலமாகவும் 360 கோடி ரூபாயில் 104 பாலங்களை இன்றையதினம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தந்து இருக்கின்றீர்கள். அந்த அடிப்படையில் எனது திருவையாறு தொகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கேயும், அதேபோல குடமுருட்டி ஆற்றின் குறுக்கேயும் 2 பாலங்களைத் தந்து இருக்கின்றீர்கள். அதற்காகத் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நீண்டகாலமாக, கிடப்பில் இருக்கின்ற குடமுருட்டி ஆற்றின் குறுக்கே வளப்பக்குடி-மணத்திடல் அருகே ஒரு பாலமும், அதேபோல, காவிரி ஆற்றின் குறுக்கே மேல்வட்டம்-ஈச்சங்குடியை இணைக்கின்ற ஒரு நடைபாலமும், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கோவிலிடை-அன்பிலை இணைக்கின்ற பாலமும், அதேபோல, வெண்ணாற்றின் குறுக்கே அல்லூர்-கல்லப்பரம்பரை இணைக்கின்ற பாலமும் எதிர்காலத்தில் அமைத்துத்தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சத்திரம் நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்த அரசர் கல்லூரியில் இசைத் துறைப் பிரிவை இன்றையதினம் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இசைக் கல்லூரியாக அறிவித்துத் தொடங்கி வைத்து இருக்கிறார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இசைக் கல்லூரி, இசைப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. நமது பாரம்பரியம் மிக்க இந்த இசை எதிர்காலத்தில் சிறப்பாக விளங்குவதற்கு, தென்னிந்தியாவில் இசைப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுகின்றபோது, திருவையாறில் ஓர் இசைப் பல்கலைக்கழகம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ப் பேரறிஞர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி தமிழர்களுடைய வாழ்வில், தமிழர்களுடைய நலனில் அக்கறை செலுத்துகின்ற நமது தமிழக முதல்வர் அவர்கள், திரு.வி.க. அவர்களுடைய நூல்களையும் அரசுடைமையாக்கி இருக்கிறார்கள். அதை நான் பாராட்டி வரவேற்கிறேன். அதைப்போலவே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற நா.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுடைய நூல்களையும் எதிர்காலத்தில் அரசுடைமையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, திருமண உதவித் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் - கடந்த ஆட்சியைப்போல, ஏராளமான நிதியை தன் நிதியாகக் கொண்டவர்களைப் போல அல்லாமல்—பல தொழில் அதிபர்களிடம் ரூ. 5 கோடியே 16 லட்சம் நன்கொடையாகப் பெற்று,



அந்தத் திட்டத்தை ஊக்குவித்து இருக்கின்றார்கள். அதற்காக, மிகப் பின்தங்கிய மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுபோல, கடந்த ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் துறையின் மூலம் நடைபெற இருந்த 1,14,143 பணிகளுக்கான சிமெண்ட், கம்பி போன்ற பொருட்களை அவர்கள் எடுத்துச் சென்றுவிட்டார்கள்; பணம், பில் புக் போன்றவற்றையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அந்தப் பணிகளில் 1,09,263 பணிகளை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இப்போது முடித்து இருக்கிறார்கள். அந்தத் துறையினுடைய அதிகாரிகளுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை இந்தியாவில் முதன்முதலாகத் தொடங்கி வைத்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள்தான். ஆனால், அந்தத் திட்டத்தில் மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு அனுமதி தந்து, அவர்களுக்கும் அந்த வீடுகளைக் கட்டித்தர ஆணை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 125.43 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை மீட்டு இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் சில தனியார்களிடம் ஏராளமான கோயில் நிலங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் எதிர்காலத்தில் மீட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, 1987 ஆம் ஆண்டு சமூக நீதிக்காக நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிதி தந்திருக்கின்றீர்கள். ஆனால் அதே ஆண்டு அண்ணா அறிவாலயத் திறப்பு விழாவில் பங்கேற்றுவிட்டுத் திரும்பிச் செல்லும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 2, 3 பேர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் குடும்பத்தாருக்கும் நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-25

கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் ஒரு மெகாவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்யாதவர்கள், இங்கே பேசும்போது மின் வெட்டு, மின் வெட்டு என்று பேசினார்கள். ஆனால், இன்றையதினம் நமது கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பேசின் பிரிட்ஜ் மின் திட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டம், பிள்ளைப் பெருமாள் கோயில் இயற்கை எரிவாயு மின் திட்டம், வட சென்னை அனல் மின் திட்டம், தூத்துக்குடி

அனல் மின் நிலையம், சமயநல்லூர் மற்றும் சாமல்பட்டி டீசல் மின் திட்டம், இப்படி 7 திட்டங்களுக்கு நமது தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் அனுமதி தந்திருக்கிறார்கள். 5792 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களுக்கு அனுமதி தந்திருக்கின்றார்கள். கடந்த 5 ஆண்டுகாலத்தில் எந்தவித மின் உற்பத்தியும் செய்யாதவர்கள் இன்றையதினம் மின் வெட்டு என்று கூக்குரலிடுவதும், எங்கே பார்த்தாலும் மின்பற்றாக்குறை என்று சொல்வதும், வேடிக்கையும் விந்தையுமாக இருக்கிறது.

அதேபோல, நிர்வாகச் சீர்திருத்தத்தில் கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்துள்ளார்கள். அவர்கள் அரசாங்கத்தினுடைய திட்டங்கள் பொதுமக்களுக்கு விரைவாகச் சென்றடைகின்ற வகையில் இதுவரையில் பணியாற்றவில்லை. அவர்களது அலுவலகத்தில் காலியாகின்ற பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றும், கிராமங்களிலுள்ள படித்த இளைஞர்களுக்கு இந்த அரசு, கிராம நிர்வாக அலுவலர்கள் பணியை வழங்க வேண்டும் என்றும் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகம், நீங்கள் இப்போது தொடங்கி சரியாக 1-30 மணிக்கு முடித்துவிட வேண்டும். மீண்டும் நாளை காலை தொடரலாம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச வாய்ப்புக் கிடைப்பதே கொஞ்ச நேரம். அதுவும் இன்ஸ்டால்மென்டிலேயா? (சிரிப்பு) இல்லை, சட்டமன்றத்திலே பேசுவதற்குக் கூட இன்ஸ்டால்மென்டா?

இந்த மன்றத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினராக என்னை அறிமுகம் செய்து வைத்து, கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே சட்டமன்றத்திலே நானும் ஓர் உறுப்பினராக இருந்தேன் என்ற பெருமையைத் தேடித் தந்த என்னுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய உரையை இங்கே தொடங்குகின்றேன். தொடங்குவதற்கு முன்னால், காலையிலேயிருந்து இங்கே சட்டமன்றத்திலே பார்க்கும்போது, இப்படிப்பட்ட ஒரு வரலாறு காணாத நிதிநிலை அறிக்கையைப் புகழவில்லையென்றாலும், இதிலே அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பேசப்படுகின்ற வார்த்தைகளையெல்லாம் கேட்கும்போது — 60



ஆண்டுகால அரசியல் வாழ்விலே தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்ட தலைவர் இதையும் சுமந்துகொண்டு, இந்த ஏழை எளிய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய மக்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கும், இரவு பகல் பாராமல் அயராது கண் விழித்து, இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள் — இதை நெஞ்சாரப் பாராட்டக்கூடிய ஏழை எளிய மக்கள் தமிழகத்திலே நிறைந்து இருக்கின்றார்கள் என்பது உண்மை. இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நாம் இங்கே பேசும்போது, இங்கே புகைப்படமாக இருக்கின்ற அண்ணாவைப் பார்த்து நாம் பேசும்போது, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. அன்று அவர் குறிப்பிட்டது வீண் போகாமல், உண்மையாகவே 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்ற—நமது அண்ணாவை இங்கே நாம் காண்கின்றோம். அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளையெல்லாம் பார்க்கும்போது, அம்பேத்கரை இங்கே நாம் பார்க்கின்றோம்.

அதுமட்டுமல்ல, இந்த வரிச் சலுகைகளையெல்லாம் பார்க்கும்போது இங்கே பேசியவர்கள் எல்லாம் பக்கத்தைக் கணக்கிட்டுச் சொன்னார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் அதனுடைய சாராம்சத்தைக் கணக்கிட்டுச் சொல்ல மனம் இல்லை. இங்கே நிதிநிலை அறிக்கையைப் பக்கத்திற்குப் பக்கம் புரட்டிப் பார்க்கும்போது பல ஆயிரம் கோடி ரூபாய் வெறும் ஏழையெளிய மக்களுக்கும், பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய மக்களுக்காக—

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதல் தவணை இத்தோடு முடிந்தது. (சிரிப்பு) அடுத்த தவணை நாளை வழங்கப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1998 ஏப்ரல் 2

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*97. 1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் *1-6-1993* ஆம் நாளிட்ட *161* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*98. 1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் *3-10-1994* ஆம் நாளிட்ட *316* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53 (5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*99. 1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் ஒன்றாவது மற்றும் ஆறாவது அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மறு விற்பனை செய்யும் விற்பனை அளவிற்கு யாதொரு வணிகராலும் செலுத்தப்படவேண்டிய வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் *12-1-1998* ஆம் நாளிட்ட *14* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*100. 1996-97* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [*1971* ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *11/1971*) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

*101. 1996-97* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள்* மீதான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டறிக்கை. [*1961* ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *17/1961*) *125(அ)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).



1998 ஏப்ரல் 2]

*102. 1996-97* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *18/1959*) *24(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

*103. 1996-97* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

*104. 1996-97* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619-ஏ* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*44. 1996-97* ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

—0—